Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 புரட்டாதி 19 புதன்கிழமை (05.10.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 313

## வீடியோ கடை உரிமையாளர் நேற்றிரவு உடுவிலில் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம்,ஒக்.5

உடுவில், டச்சு வீதியில் நேற்றிரவு 9 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் வீடியோக் கடை உரிமையாளர் கொல்லப்பட்டார்.

அதேயிடத்தைச் சேர்ந்த இராசரத்தினம் இராஜவினோதன் (வயது-30) என்பவரே உயிரிழந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

டச்சு வீதியில் உள்ள தமது வீடியோக் கடையைப் பூட்டி விட்டு வீட்டுக்குப் புறப்பட்ட சமயம் அங்குவந்த இனந்தெரியாத நபர்கள் அவர்மீது வேட்டுக்களைத் தீர்த்தனர் என்றும்-

அந்த இடத்திலேயே அவர் உயிரிழந்தார் என்றும் - உறவினர்கள் தெரிவித்தனர்.

நள்ளிரவு யாழ். ஆஸ்பத்திரியில் சடலம் ஒப்படைக்கப்பட்டது. (3-12-78)

## தமிழர் ஆசிரியர் சங்க அழைப்பின் பேரில் இன்று சுகவீனவிடுமுறைப் போராட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.5

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் 25 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து இன்று புதன்கிழமை ஒருநாள் அடையாள சுகவீன விடுமுறைப் போராட்டம் நடத்தும்படி ஆசிரியர்களுக்கு அழைப்புவிடுத்துள்ளது.

கல்வி உயர்கல்வி அமைச்சில் ஒழிக்கப்பட்ட அல்லது அந்தஸ்து குறைக்கப்பட்ட தமிழ்ப் பிரிவுக்கான பதவிகள் மீண்டும் உருவாக்கப்படவேண்டும், இலங்கை கல்வி நிர்வாக சேவை, அதிபர் சேவை, ஆசிரியர் சேவை ஆகியவற்றின் பிரமாணக்குறிப்புகளில் ஆளணி இனரீதியாகக் குறிப்பிடப்பட்டு அதற்கேற்ப பிரமாணக் குறிப்பு மாற்றப்பட்டு ஆள் திரட்டல் நடைபெறவேண்டும். வடக்கு - கிழக்குத் தவிர்ந்த மாகாணங்களிலும், தேசிய மட்டத்திலும் கல்விசார் அலுவலகங்களில் இன

(16ஆம் பக்கம் பார்க்க)

# விமல் வீரவன்ஸவைக் கைதுசெய்ய உத்தரவிடக்கோரி நீதிமன்றில் மனு!

## சமாதான ஆர்வலரான குமார் ரூபசிங்க தாக்கல்

கொழும்பு,ஒக்ரோபர்5

**ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரான விமல் வீரவன்ஸவைக் கைதுசெய்து நீதி நடவடிக்கைகளின் முன் நிறுத்துமாறு உத்தரவிடக்கோரி கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று ரிட் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.**

**சமாதான ஆர்வலரும், சகவாழ்வு மன்றத்தின் ஸ்தாபகத் தலைவருமான கலாநிதி எஸ்.ஏ. குமார் ரூபசிங்க இந்த மனுவைத் தாக்கல்செய்துள்ளார்.**

**ஜே.வி.பி. கடந்த காலத்தில் இழைத்துள்ள ஆயிரக்கணக்கான படுகொலைகள், கொள்ளைகள், வன்முறை போன்றவற்றை இந்த மனுவில் பட்டியலிட்டுள்ள மனுதாரர், விமல் வீரவன்ஸவின் தற்போதைய நடவடிக்கைகளால் சமாதான முயற்சிகளில் ஈடுபாடும் ஆர்வமும் கொண்டுள்ள தமக்கும், தம்மைப் போன்ற ஏனையோருக்கும் உயிராபத்து ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்.**

இந்த ரிட் மனுவில் பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, ஜே.வி.பி. பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ, அக்கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, சட்டமா அதிபர் ஆகிய தரப்பினர் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மனுவில் மனுதாரரின் சட்டத்தரணி தெரிவித்திருப்பதாவது:-

சமாதான மேம்பாட்டுக்காக உழைக்கும் சிவில் சமூக அமைப்பான சகவாழ்வு மன்றத்தின் ஸ்தாபகத் தலைவர் மனுதாரர்.

(2ஆம் பக்கம் பார்க்க)

## பன்னிரு வேங்கைகளின் நினைவுதினம் இன்று

கரவெட்டி,ஒக்.5

இலங்கை - இந்திய அரசுகளின் கூட்டுச் சதியினால் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட லெப். கேணல் குமரப்பா, லெப்.கேணல் புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளின் 18ஆம் ஆண்டு நினைவுதின நிகழ்வுகள் தமிழர் தாயகப் பிரதேசம் எங்கும் இன்று எழுச்சியுடன் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

பிரதான நிகழ்வு இன்று பிற்பகல் 4 மணிக்கு வல்வை தீருவில் பன்னிருவர் நினைவுத் திட

(16ஆம் பக்கம் பார்க்க)

## முரசுமோட்டையில் விபத்தில் ஒருவர் மரணம்

பரந்தன்,ஒக்.5

பரந்தன் - முல்லைத்தீவு வீதியில், முரசுமோட்டை 4ஆம் கட்டையடிப் பகுதியில் நேற்று மாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற ஹன்டர் - மோட்டார் சைக்கிள் கோரவிபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

இச்சம்பவத்தில் தாளையடி, செம்பியன்

(16ஆம் பக்கம் பார்க்க)

## ரணிலை ஆதரிப்பதென முஸ்லிம் காங்கிரஸ் முடிவு

கொழும்பு, ஒக். 5

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவையே ஆதரிப்பது என முடிவு எடுத்துவிட்டது.

நேற்றுக் கூடிய முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் உயர்பீடம் இந்தமுடிவை எடுத்தது.

இந்த முடிவை இன்று உத்தியோகபூர்வமாக கட்சி அறிவிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முடிவு பற்றி கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்திருப்பதாவது:-

எமது கட்சி, ஐக்கிய தேசியக்கட்சியின் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதாக முடிவெடுத்திருக்கிறது. அவருக்கு ஆதரவாக முஸ்லிம் காங்கிரஸ் பிரசா ரம் செய்யும். அவரின் வெற்றிக்காக

(16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் கைதிகள் மூதூரில் கடத்தல்!

கொழும்பு, ஒக். 05

திருகோணமலை சிறைச்சாலையிலிருந்து மூதூர், நீதிவான் நீதிமன்றத்திற்கு சிறைச்சாலை பஸ்ஸில் வழக்கு விசாரணையொன்றிற்காக கொண்டு செல்லப்பட்டுக் கொண்டிருந்த கைதிகள் நான்கு பேர் இனந்தெரியாத நபர்களால் துப்பாக்கிமுனையில் கடத்தப்பட்டனர். இவர்களில் இரு முஸ்லிம்கள் நேற்று மாலையே விடுவிக்கப்பட்டதை அடுத்து அவர்கள் பொலீஸில் சரணடைந்தனர்.

நேற்று முற்பகல் பதினொன்றரை மணியளவில் மூதூர் கிளிவெட்டி பகுதியில், திருகோணமலை - மட்டக்களப்பு வீதியின் 59 ஆவது மைல் கல்லுக்கு அருகில்இந்த சம்பவம் இடம்பெற்றது.

சிறைச்சாலை பஸ் சென்று கொண் டிருந்த போது அதனை வழிமறித்த இனந்தெரியாத துப்பாக்கிதாரிகள் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டு கைதிகளைக் கடத்தியிருக்கின்றனர். இந்த துப்பாக்கிப் பிரயோகத்தினால் சிறைச்சாலை உத்தியோகத்தரான ரி. சுகுண

(16ஆம் பக்கம் பார்க்க)

## இ.தொ.கா. முடிவு இன்று!

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமது ஆதரவு யாருக்கு என்பது குறித்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் இன்று அறிவிக்கவுள்ளது.

தீர்மானத்தை ஒன்றாக அறிவிப்பதற்காக தமது முஸ்லிம் காங்கிரஸும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் இன்று காலை கூட்டுச் செய்தியாளர் மாநாடொன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டபோதும் அது நேற்று மாலைவரை ஊர்ஜிதமாகவில்லை. இ.தொ.காவுடன் சேர்ந்து முடிவை

(16ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் இராணுவம் ஆக்கிரமித்த பிரதேசத்தின் விவரம் என்ன?

### நாடாளுமன்றில் இன்று மகேஸ்வரனின் கேள்வி

யாழ்.குடாநாட்டில் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ள முழு இடங்கள் பற்றிய விவரங்களையும் நாடாளுமன்றில் சமர்ப்பிக்குமாறு பிரதமரிடம் கேள்வி எழுப்பியிருக்கிறார் கொழும்புமாவட்ட ஐ.தே.கட்சி எம்.பியான தி.மகேஸ்வரன்.

இவ்விடயம் தொடர்பாக வாய்மூல விடைக்காக அவர் எழுப்பிய கேள்வி இன்றுகாலை நாடாளுமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

மூன்று விடயங்கள் தொடர்பாக மகேஸ்வரன் எழுப்பிய கேள்விகள் இன்று நாடாளு

(16ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நேற்றுமாலை இடம்பெற்ற இசை, நடன, நாடக விழாவின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்கள் பாரம்பரிய இசைவாத்தியத்துடன் மண்டபத்துக்கு அழைத்துவரப்படுவதையும் - பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி மங்கள விளக்கேற்றுவதையும் கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் தலைமையுரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- கவிதரன்)

# இசை, நடன, நாடக விழா நேற்றுச் சிறப்புடன் நடந்தது

யாழ்ப்பாணம்,ஒக்.5

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்திய இசை, நடன, நாடக விழா நேற்றுப்பிற்பகல் யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். பிராந்திய ஆணையாளர் திருமதி ப. சிவலிங்கம் மற்றும் யாழ். மாவட்ட பிரதேச செயலர்கள் கலந்துகொண்டனர்.

முன்னதாக நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்கள் யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை முன்றிலில் இருந்து பாரம்பரிய வாத்திய இசையுடன் நிகழ்வு நடந்த மண்டபத்திற்கு ஊர்வலமாக அழைத்துச்செல்லப் பட்டனர்.

அரங்கில் மங்கள விளக்கேற்றல், தமிழ்த் தாய் வாழ்த்து, அகவணக்கம் என்பவற்றுடன் தமிழ்த்தாயின் திருவுருவப்படத்துக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டது.

தலைமையுரையினை ஆர்.தியாகலிங்கம் நிகழ்த்தினார். சிறப்புரையினை மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி நிகழ்த்தினார்.

தொடர்ந்து அரங்கக் கலை நிகழ்வுகளாக தமிழின் அழகு, கரகாட்டம், ஒயிலாட்டம், கிராமியப்பாடல், குழுநடனம், நாட்டுக்கூத்து மற்றும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவர்களின் 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்' என்ற நாடகமும், பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் 'பூதத்தம்பி' என்ற இசைநாடகமும் அரங்கேற்றப்பட்டன.

இறுதியாக நன்றி உரையினை பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் திருமதி என்.ஸ்ரீதேவி நிகழ்த்தினார். (3-13)

# கழிவுப் பொருள்களை அகற்றும் திட்டம்; சுன்னாகத்தில் இன்று கலந்துரையாடல்

வலி.தெற்கு,ஒக்.5

உலக சூழல் பாதுகாப்புத் தினத்தை முன்னிட்டு வலிகாமம் தெற்குப் பிரதேசத்திலுள்ள கிராம மக்களின் பங்களிப்புடன் கிராமியமட்டத்தில் கழிவுப் பொருள்களை அகற்றும் சேவைத்திட்டமொன்றை முன்னெடுப்பது தொடர்பான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு சுன்னாகம் கதிரமலை சிவன் ஆலய மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் எஸ். திருவாகரன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் உடுவில் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், கமக்கார அமைப்புகள், சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள் ஆகியவற்றைச் சேர்ந்தவர்களும் -

உள்ளூராட்சித் திணைக்கள அதிகாரிகள், கல்வித்திணைக்கள அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், கமநல சேவை உத்தியோகத்தர்கள், சுகாதாரம் மற்றும் வீதி அபிவிருத்தித் திணைக்கள அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளனர். (3-152-203)

# பயணத்தடை நோர்வேக்கு ஏற்பட்ட தோல்வி இல்லை

## ஊடகங்களின் திரிபுச் செய்திகளுக்கு பிரிட்டிஷ் தூதரகம் மறுப்பு

கொழும்பு, ஒக்.5

விடுதலைப் புலிகளுக்கு பயணத்தடை விதித்து ஐரோப்பிய ஒன்றியம் கடந்த 26 ஆம் திகதி விடுத்த பிரகடனம், நோர்வே அரசுக்கு ஏற்பட்ட ஒரு 'தோல்வி'யையே எடுத்துக்காட்டு கிறது என்று அர்த்தப்பட சில ஊடகங்களில் வெளியான அறிக்கைகள் பொய்யானவை. தவறான வழிநடத்தலுக்கு இட்டுச்செல்பவை - என்று கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதரக வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப் பதவியை பிரிட்டனே இப்பொழுது அலங்கரித்து வருகிறது. எனவே, இங்குள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் வதிவிடப்பிரதிநிதியின் அலுவலகத்தின் சார்பில் தூதரகம் இந்தச் செய்திக் குறிப்பை வெளியிட்டிருக்கிறது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

''ஐரோப்பிய ஒன்றியத்தினால் செப். 26 ஆம் திகதி வெளியிடப்பட்ட பிரகடனம் தொடர்பான செய்திகளை பெரும்பாலான ஊடகங்கள், சரியான முறையில், அர்த்தம் திரிவுபடாமல் பிரசுரித்திருந்தன. சில செய்தி அறிக்கைகள் ஐரோப்பிய ஒன்றியத்தின் இப்பிரகடனம் நோர்வே அரசுக்கு ஏற்பட்ட ஒரு தோல்வியை வெளிக்காட்டுவதாகியிருப்பதாகக் கூறின. இது பொய்யாகும். தவறான வழிகாட்டலுக்கு இது வழிகாட்டுவதாயுள்ளது.

டோக்கியோ நன்கொடை நாடுகளின் மாநாட்டை அடுத்து செப்ரெம்பர் 19 இல் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு சமாதான முன்னெடுப்பில் நோர்வேயின் அனுசரணையே தொடர்ந்து இருந்துவரும் ஐரோப்பிய ஒன்றியம். நோர்வேயின் பங்களிப்புக்கு தொடர்ந்து ஆதரவு தரும் - என்றும் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதில் சொல்லப்பட்டவாறு ஐரோப்பிய ஒன்றியம் சமாதான முன்னெடுப்பு தொடர்பாக நோர்வேக்கு தொடர்ந்தும் ஆதரவு தந்துவருகிறது. சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய முதன்மைப் பொறுப்பு, இலங்கை அரசிடமும், விடுதலைப் புலிகளிடமுமே உள்ளது. இந்த இருவர்களாலும் நியமிக்கப்பட்ட அனுசரணையாளர்களான நோர்வேயிடம் இல்லை.

சமாதான முன்னெடுப்பில் நோர்வேயின் பங்களிப்பு, சம்பந்தப்பட்ட இரு தரப்புடனும் நெருங்கிய தொடர்புகள் வைத்திருப்பதுடன் இனப்பிரச்சினைக்கான நியாயமான நிரந்தரத் தீர்வொன்றைக் கண்டறிவதற்குத் தமது நல்லெண்ண முயற்சிகளைப் பயன்படுத்தி நல்லதொரு பொது அடித்தளத்தை இடுவதற்கு உதவுவதேயாகும் என்பதை ஒன்றியம் அங்கீகரித்தே வந்திருக்கிறது.

இணைத்தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள வகையில் ஒன்றியம் சமாதானப் பேச்சை ஆரம்பிப்பதற்கு வேண்டிய சாத்தியமான சகல உதவிகளையும் ஒன்றியம் இரு தரப்பாருக்கும் தொடர்ந்து வழங்கிவரும். அதேநேரம் சாத்தியமான இடங்களில் நோர்வேக்கும் தொடர்ந்து உதவியை ஒன்றியம் தரும். - என்று உள்ளது.

(க-3)

# அரியாலையில் கரபந்தாட்டம்

அரியாலை கரபந்தாட்ட ரசிகர்களின் ஏற்பாட்டிலான மின் ஒளியிலான கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று இரவு 7 மணியளவில் அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

* இரவு 7 மணி - அரியாலை ஐக்கிய சனமூக நிலைய வி.க. எதிர் சிறி விக்கினேஸ்வரா வி.க.
* இரவு 8 மணி ஆவரங்கால் மத்திய வி.க. எதிர் புத்தூர் கலைமதி வி.க. (3-190)

# விமல் வீரவன்ஸவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்புகளையும், பதவிகளையும் வகித்து வருகிறார். பிணக்குகளைத் தீர்ப்பது தொடர்பாக 50இற்கும் அதிகமான பொது அமைப்புகளுடன் சேர்ந்து அவர் செயற்பட்டிருக்கின்றார். பிணக்குகளுக்கு தீர்வு காண்பது தொடர்பான பல்வேறு நூல்களையும் அவர் எழுதியுள்ளார்.

உலகில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கான ஐ.நாவின் அமைதிப் பணியிலும் அவர் முக்கியபங்குவகித்துச் செயலாற்றி வருகின்றார்.

இலங்கையின் தற்போதைய இனப் பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு சாத்தியமற்றது. பிணக்கை தீர்ப்பதற்கு மூன்றாம் தரப்புத் தலையீடு அவசியம், பேச்சு மற்றும் கலந்துரையாடல் மூலமே சமாதானத்தை எட்ட முடியும், பல்வேறு தரப்புகள் மற்றும் சமூக அமைப்புகளின் பங்களிப்புடனேயே அமைதியை எட்ட முடியும்- என்ற கோட்பாடுகளை முன்வைத்து அவர் செயற்பட்டு வருகின்றார்.

இலங்கையிலும் சர்வதேசத்திலும் பல்வேறு இன அமைப்புகளிடையே அமைதியை நிலைநாட்ட அர்ப்பணிப்போடு செயற்பட்டு வருபவர் மனுதாரர்.

எதிர்மனுதாரர் தரப்பான ஜே.வி.பியும், அதன் உப அமைப்புகளும் கடந்த காலங்களில் பல்வேறு கொடூர வன்முறைகளில் ஈடுபட்டு வந்திருக்கின்றன என மனுதாரர் குறிப்பிட்டிருக்கின்றார்.

பௌத்த பிக்குகள், அரச சேவையாளர்கள், அரசியல்வாதிகள், பத்திரிகையாளர்கள், தொழிற்சங்க வாதிகள் நிபுணத்துவதுறை சார்ந்தோர், பேராசிரியர்கள், பாடசாலை அதிபர்கள், தோட்ட அதிகாரிகள் மற்றும் புத்திஜீவிகள் என 6 ஆயிரத்து 577க்கும் அதிகமான பொது மக்கள் ஜே.வி.பியினராலும், அதன் உப அமைப்புகளாலும் கடந்த காலங்களில் படுகொலை செய்யப்பட்டனர்.

தற்போதைய ஜனாதிபதியின் கணவர் விஜயகுமாரதுங்கவும்கூட ஜே.வி.பி. துப்பாகிதாரியாலேயே கொல்லப்பட்டார்.

அரச சொத்துகளான 613 பஸ்கள், 16 பஸ் டிப்போக்கள், 16 ரயில்கள், 24 ரயில்வே நிலையங்கள் என்பன ஜே.வி.பியும் மற்றும் அதன் அமைப்புகளால் தீக்கிரையாக்கப்பட்டன அல்லது நாசமாக்கப்பட்டன. மேலும் 294 கிராம சேவையாளர் அலுவலகங்கள், 73 தேயிலைத் தொழிற்சாலைகள், 79 பிரதேச செயலகங்கள், 680 தபாலகங்கள், 109 விவசாய கேந்திர நிலையங்கள், 8 பாடசாலைகள், 16 கூட்டுறவுச் சங்கக் களஞ்சியங்கள் என்பனவும் ஜே.வி.பியினரால் சேதமாக்கப்பட்டன. இது தவிர, பல்வேறு கொலை அச்சுறுத்தல், கொள்ளை போன்ற கிரிமினல் சம்பவங்களிலும் ஜே.வி.பியினர் ஈடுபட்டனர்.

ஜே.வி.பியின் உத்தரவை மீறி தேர்தலில் போட்டியிட்டோரும், அரச படைகளைச் சேர்ந்தோரும், அவர்களின் உறவினரும் அச்சுறுத்தப்பட்டனர்; படுகொலைசெய்யப்பட்டனர்.

கடந்த ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி மகரகமவில் நடந்த தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் கூட்டத்தில் மனுதாரரையும் கீழ்வரும் அரச சார்பற்ற நிறுவனங்களையும் அதன் பிரமுகர்களையும் விமல் வீரவன்ஸ மிக மோசமாகத் தாக்கிப் பேசினார். அந்தப் பிரமுகர் மற்றும் நிறுவனங்களின் விவரம் வருமாறு:-

கலாநிதி சரவணமுத்து, ஜெகான் பெரேரா, கனக அபயசுந்தர, பேராசிரியர் ஜெயதேவ உயங்கொட, அமைச்சர் டிலான் பெரேரா, கரீம் பீரிஸ், ஒஸி சேனநாயக்க, ஷிரால் லக்திலக, விக்டர் ஐவன், குசல பெரேரா, சுனித் அபயசேகர, நிமல்கா பெர்னாண்டோ, லசந்த விக்கிரமதுங்க, சுசில் ஸ்ரீவர்த்தன, வாசுதேவ நாணயக்கார, பாலகிருஷ்ணன் பிரசன்ன விதானகே, பேராசிரியர் ஜி.எல். [illegible]ஸ், அஜித் ரூபசிங்க, உப்புல் ஜோசப், விக்கிரமபாகு கருணாரத்ன, ஜெனரல் டெனிஸ் பெரேரா, ஜெனரல் ஜெரி சில்வா, ஊடகவியலாளர் துஷார, சரத்சந்திர விதானகே மற்றும் தயான் ஜெயதிலக, பேகாவ் நிறுவனம், சி.என்.என்., உலகவங்கி, பீற்றர் ஹரோல்ட்,பி.பி.ஸி., சிரஸ, சர்வோதய, மார்கா நிறுவனம், இன்ரர்நஷனல் அலேட்.

மனுதாரருக்கு எதிராகப் பின்வரும் குற்றச்சாட்டுக்களை அவர் முன்வைக்கின்றார்.

அ. தாய்நாட்டுக்கெதிரான அதிகாரர்.

ஆ. துரோகி

இ. புலிகள் தலைவர் பிரபாகரனைவிட மிக ஆபத்தானவர்.

ஈ. மனுதாரரும் அவரது அமைப்பும் இலங்கையின் புலனாய்வுத் தகவல்களைத் தினசரி சர்வதேச அமைப்புகளுக்கு வழங்குகின்றன.

உ. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை அழிக்க உழைத்தவர்.

ஊ. ஆபிரிக்க நாடுகளுக்கு எதிரான சதிகளைச் செய்தவர்.

எ. ஊடகங்களை ஏமாற்றுபவர்.

ஏ. மனுதாரரும் அவரது அமைப்பும் சியாராலியோனில் புரட்சிக்குச் சதிசெய்த கெரில்லாக்களோடு தொடர்புபட்டவர்கள்.

ஐ. நாட்டிலுள்ள புரட்சி அமைப்புக்களுக்கு ஆயுதங்களும் வெடிபொருள்களும் மனுதாரர் அமைப்பு மூலம் அனுப்பப்படுகின்றன.

ஒ. நாட்டைத் துண்டாடும் இயக்கத்தில் பிரதான முகவர் அமைப்பு மனுதாரரின் நிறுவனமே.

ஓ. மனுதாரர் இராணுவப் புலனாய்வுத் துறையினருடனும் தொடர்புகளைப் பேணி வருகின்றார்.

- இத்தனை குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியுள்ள எதிர்மனுதாரரின் அமைப்பு, 1987 முதல் 1992 வரையான தனது கிளர்ச்சி முடிவடைந்தும் சட்டவிரோதமாகத் தங்களிடமிருந்த தன்னியக்க ஆயுதங்கள், வெடிபொருள்களை எந்தக் கட்டத்திலும் அரசிடமோ அதிகாரிகளிடமோ கையளிக்கவில்லை.

இத்தகைய நிலையில் மக்களை மனுதாரருக்கு எதிராக மோசமான நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தூண்டிவிட எதிர்மனுதாரர் செயற்பட்டிருப்பது கிரிமினல் குற்றமாகும். இதுகுறித்து பொலீஸில் முறைப்பாடு செய்து வாக்குமூலம் அளித்த பின்னரும் பொலீஸார் உரிய நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. - எதிர்மனுதாரரின் வாக்குமூலத்தைப் பதிவு செய்ததைத் தவிர.

எனவே, தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் கைதுசெய்து நடவடிக்கை எடுக்கும் தவறை இழைத்திருக்கின்ற எதிர்மனுதாரரை தற்போது மனுதாரர் சுமத்தியிருக்கும் குற்றச்சாட்டுக்களுக்கு அமைவாகக் கைதுசெய்து, உரியநீதிமன்றின் முன்னிறுத்தி, குற்றஞ்சுமத்தி, உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிடும்படி கோருகின்றோம். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-3)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## தமிழர் ஆசிரியர்களின் நிலையை வெளிக்கொணர உதவுவது அவசியம்

இன்று சர்வதேச ஆசிரியர் தினம்.

'எழுத்தறிவித்தவன் இறைவன்' என்று போற்றுகின்றோம்.

'மாதா,பிதா, குரு, தெய்வம்' என்ற வரிசையில் பெற்றோருக்கும் தெய்வத்துக்கும் இடையில் வைத்து நல்லாசானைப் போற்றுகின்றோம்.

முன்னைய குருகுலக் கல்வி முறையிலிருந்து நீங்கி, நவீன கற்றல் - கற்பித்தல் உலகுக்குள் நாம் புகுந்துவிட்டாலும் கூட, ஆசிரியர்களைப் போற்றும் நமது சமூக மாண்பு மாறவில்லை. அது மேலோங்கியே நிற்கிறது. அந்தப் பண்பின் வெளிப்பாடாகவே ஆசிரியர்களைப் போற்றி மதிக்கும் இத்தினத்தை நமது சமூகம் உயரிய நாளுக்குரிய செயற்பாடுகளுடன் கடைப்பிடிக்கின்றது.

'ஆசிரியர்' என்ற தமிழ்ச் சொல்லின் மூலம், 'ஆச்சாரிய' என்ற வடமொழி வார்த்தையிலிருந்து வந்ததாகக் கூறுவர். இது மத ரீதியான சொற்பதமும் கூட. 'ஆசிரியர்' என்ற சொல் வழக்கு சமண மத வழியில் வந்தது என்று கூறுவோருமுளர். 'உபாத்தியாயர்' என்ற சொல்கூட வடமொழியில் இருந்து தான் வந்தது.

எனவேதான் 'நல்லாசிரியர்' தினத்தை 'நல்லாசான்' நாள் என்றும் நம்மவர்கள் அழைக்கின்றனர்.

ஆசிரியர்களின் உயர்ந்த பொறுப்பை அவர்களுக்கு உணர்த்தவும், சமூகத்தில் ஆசிரியர்களின் மதிப்பை மேம்படுத்தவும் உலக ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகின்றது. யுனெஸ்கோவின் ஏற்பாட்டின்படி இம்முறை பதினைந்தாவது ஆண்டாக இந்நாள் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இப்போது உலகில் ஐந்தரைக் கோடி ஆசிரியர்கள் 'கற்பித்தல்' என்ற உன்னதப் பணியைப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். இவர்களில் சுமார் இரண்டரைக் கோடி ஆசிரியர்கள் சர்வதேச கல்வியகத்தில் அங்கம் பெறுகின்றார்கள்.

இலங்கையில் இந்தப் புனிதப் பணியை ஆற்றுவோரின் எண்ணிக்கை சுமார் இரண்டு லட்சமாகும்.

சர்வதேச ரீதியில் 2015ஆம் ஆண்டில் 'அனைவருக்கும் கல்வி' என்ற திட்டம் முழு வீச்சில் முன்னெடுக்கப்படுகின்றது. இந்தத் திட்டம் வெற்றிபெற வேண்டுமானால், இன்னும் பல லட்சக்கணக்கில் ஆசிரியர்கள் இச்சேவைக்குள் உள்ளீர்க்கப்படவேண்டும். அத்தகையோர் அச்சேவையில் தொடர்ந்து தக்கவைக்கப்படவும் வேண்டும். கற்றல் - கற்பித்தல் தொடர்பான அடிப்படைப் பயிற்சிகளாவது அவர்களுக்கு வழங்கப்படவேண்டும். சர்வதேச சமூகம் நினைத்துப் பார்க்கமுடியாத பெரும் பணி இது. அதில் வெற்றிபெற்றால் தான் அனைவருக்கும் கல்வி என்ற சர்வதேசக் கோஷம் நடைமுறையில் சாத்தியமாகும்.

இருபது, முப்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலைமையோடு ஒப்பிடுகையில் ஆசிரியர்களின் வேதனம் கணிசமான அளவு உயர்ந்திருக்கின்றது. ஆசிரிய தொழிற்சங்கங்கள் மற்றும் அரசியல் தலைவர்களின் செயற்பாடுகள், நடவடிக்கைகள் இந்த வேதன அதிகரிப்புக்குக் காரணமாகலாம்.

ஒருபுறம் ஆசிரியர்களின் வேதனம் அதிகரித்தாலும் அவர்களுக்கான சமூக அங்கீகாரம் - சமுதாய மாண்பு - இரண்டு, மூன்று தசாப்த காலத்துக்கு முன்பிருந்த நிலையோடு ஒப்பிடுகையில் தாழ்ந்து போயிருக்கின்றது என்பதே உண்மை.

தகுதியும், திறமையும் உடைய - நன்மதிப்புக்குரிய - வழிகாட்டிகள் ஆசிரிய சேவைக்குள் உள்ளீர்க்கப்படாமை, அச்சேவையில் சேர்ந்துகொண்டோர் ஆசிரியப் பணிக்கான அடிப்படை மாண்புகளைத் தவறவிட்டமை, சமுதாயத்தில் ஆசான்களுக்குரிய உயரிய இடத்தை வழங்குவதற்கு சமூகத் தலைவர்கள் தவறியமை போன்ற இன்னோரன்ன காரணங்களை இதற்குக் கூறலாம்.

எது, எப்படியென்றாலும் ஆசிரியர்களுக்குரிய மாண்பை சமூகம் வழங்கத் தவறியதால் பாடசாலைகளில் கற்றல் - கற்பித்தல் பணியும், ஆசிரியர்களின் புற நடவடிக்கைச் செயற்பாடுகளும் பாதிப்புற்றிருக்கின்றன என்பது உண்மையாகும்.

தங்களுடைய மதிப்பார்ந்த பணிக்காக கல்விச்சாலைகளிலே - கலைக்கூடங்களிலே - இன்று தெய்வங்களாக மதித்து, ஏற்றிப் போற்றப்படவேண்டிய நமது ஆசான்கள், இந்த நாளிலே சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் குதித்து, தங்களுடைய உரிமைகளுக்காகத் தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார்கள். சமூகமும், அரசும், அரச நிர்வாகிகளும் நமது தமிழ்மொழி ஆசான்களுக்கு அவர்களது உயரிய சேவைக்காக அளித்த மதிப்பு, கௌரவம், பிரதியுபகாரம் இதுதான்.

நாட்டில் பௌத்த, சிங்கள மேலாண்மைவாதத்தால் சிறுபான்மையினரான தமிழர்களும், முஸ்லிம்களும் ஒதுக்கப்பட்டார்கள்; பாகுபாட்டுக்கு உள்ளாக்கப்பட்டார்கள்; அடக்கப்பட்டார்கள்; அடிமைப்படுத்தப்பட்டார்கள். இந்த அடக்குமுறையில் ஆசிரியர்களுக்கும் கூட விதிவிலக்கு வழங்கப்படவில்லை.

தமிழ்மொழி மூல ஆசிரியர்கள் என்பதால் கற்பித்தல் துறையில் பல்வேறு பாரபட்சங்களுக்கு முகம்கொடுக்க வேண்டியவர்களானார்கள் அவர்கள்.

கொழும்பு அரச நிர்வாகத்தின் இந்த பாரபட்ச, பாகுபாட்டுப் போக்கை தமிழர்களின் ஆசிரியர் சேவைத் தொழிற்சங்கமான, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அம்பலப்படுத்தி தென்னிலங்கைச் சிங்களத்தின் முகமூடியைக் கிழித்திருக்கிறது.

ஆசிரிய சேவையில் தமிழர்கள் ஒதுக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக 24 அம்சங்களை முன்வைத்து தமிழர் தாயகம் எங்கும் இன்று - சர்வதேச ஆசிரியர் தினத்தன்று - தனது சுகவீன விடுமுறைப் போராட்டத்தைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நடத்துகின்றது.

அந்தப் போராட்டத்துக்கு ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்குவதன் மூலம் தமிழர் ஆசிரியர்களின் நிலைமையை வெளிக்கொணர்ந்து - அம்பலப்படுத்தி - சர்வதேசத்துக்கும் அதனைப் புரிய வைப்பதற்கு நாம் உதவவேண்டும்.

இன்றைய ஆசிரியர் தினத்தில் நமது நல்லாசான்களுக்கு நாம் செய்யும் - செய்யவேண்டிய - பொருத்தமான கைம்மாறாகவும் இது அமையுமல்லவா?

## உணவகங்களில் கடைப்பிடிக்க வேண்டிய அடிப்படை ஒழுங்குவிதிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.5

உணவகங்கள், தேநீர்ச்சாலைகள், குளிர்பான நிலையங்களை நடத்துபவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய அடிப்படை ஒழுங்குவிதிகளைத் தமிழீழ சுகாதார சேவையினர் வெளியிட்டிருக்கின்றனர்.

சுமார் 22 ஒழுங்குவிதிகள் அவற்றில் அடங்கி உள்ளன. அவற்றில் பிரதானமானவை வருமாறு:-

✱ வாடிக்கையாளர்களுக்கும் பணியாளர்களுக்கும் சுகாதாரமான நீரடைப்பு மலசலகூடம் உரிய இடத்தில் இருத்தல் வேண்டும். (உணவகங்களுக்கு நீரடைப்பு மலசலகூடம் உரிய இடத்தில் கட்டாயம் இருத்தல் வேண்டும்).

✱ உணவகத்தில் ரொட்டி தயாரிக்கும் மேசை தூசு, சாம்பல் புகை படாமல் மூடப்பட்டிருத்தல் வேண்டும்.

✱ நிலையத்தின் முன்புறமாக உணவு தயாரிப்பவர்கள் எரிவாயு அடுப்பினை மட்டும் பயன்படுத்த வேண்டும்.

✱ சமைத்த உணவினை இலையான், தூசி படியாதபடி பொருத்தமான மூடியினால் மூடிவைக்கப்படவேண்டும்.

✱ கண்ணாடி உணவுப்பண்ட காட்சிப்பெட்டிகள் முழுமையாக மூடக்கூடியவையாக இருத்தல் வேண்டும்.

✱ உணவக வளவினை எவ்வித வளர்ப்புப் பிராணிகளோ பறவைகளோ எலிகளோ அல்லது நுளம்புகள், இலையான்கள் பெருகக் கூடிய இடமாகவோ வேறு நோய் பரப்பும் பூச்சிகளோ இருக்கலாகாது.

✱ சிற்றுண்டி வழங்கும் போது மக்கள் கேட்கும் அளவில் மட்டும் வழங்குதல் வேண்டும். பரிமாறுபவர்கள் ஏலங்கிகள், தலைக்காப்பு, வாய் மூக்கு காப்புத் துணி அணிதல்வேண்டும்.

✱ உணவகத்தில் கடமையாற்றுபவர்கள் குறைந்தது 6 மாதத்திற்கு ஒருமுறை சுகாதார வைத்திய அதிகாரியினால் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

✱ சமையல் பகுதி திறந்த வெளிப் பகுதியுடன் எந்த விதத்திலும் தொடர்புபடலாகாது.

இந்த ஒழுங்கு விதிமுறைகள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மீறப்படின் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

உணவகங்களில் இந்த அடிப்படை ஒழுங்கு விதிமுறைகளைப் பணியாளர்களும் பாவனையாளர்களும் பார்வையிடக் கூடிய வகையில் பொருத்தமான இடத்தில் பார்வைக்கு வைக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(ஐ)

## வடக்கு-கிழக்கில் உள்ள பொலிஸார் வெளியிடங்களில் தங்குவதற்குத்தடை!

வடக்கு - கிழக்கில் உள்ள பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் பொலிஸார் ஜனாதிபதித் தேர்தல் முடிவடையும் வரை தமது கடமை நேரம் தவிர்ந்த ஏனைய வேளைகளில் விடுதிகளிலேயே தங்கியிருக்கவேண்டுமென சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஹிந்தபால சூரிய உத்தரவிட்டுள்ளார்.

கடந்த முதலாம் திகதி முதல் எதிர்வரும் நவம்பர் மாதம் 18ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்தப்படும் வகையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலைப்பகுதியில் வடக்கு-கிழக்கு பகுதிகளில் உள்ள பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் பொலிஸார் தமது கடமை நேரம் தவிர்ந்த ஏனைய வேளைகளில் வெளியில் தங்குவது தடைசெய்யப்பட்டுள்ளது.

தேர்தல் சமயத்தில் அவசர தேவை ஏற்படும்வேளை பொலிஸாரின் சேவையைத் தாமதமின்றிப் பெற்றுக்கொள்வதே இதற்கான நோக்கமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் எதிர்வரும் நவம்பர் 30 ஆம் திகதி வரை வடக்கு-கிழக்கில் பணியாற்றும் பொலிஸாரின் விடுமுறை இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-205)

## நெடுந்தீவில் சிரமதானப் பணிகள்

நல்லூர்,ஒக்.5

நெடுந்தீவுப் பிரதேச சபை மற்றும் பிரதேச செயலகம், பொது அமைப்புகள் ஆகியவற்றைச் சேர்ந்தவர்களும் பொது மக்களும் இணைந்து நெடுந்தீவில் சிரமதானம் மேற்கொண்டனர். உலக சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு இந்தச் சேவை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதில், நெடுந்தீவு துறைமுகத்தில் இருந்து அரசினர் வைத்தியசாலை வரையான ஒன்றரை கிலோமீற்றர் தூரம் வரை வீதியின் இருமருங்கும் துப்புரவுபடுத்தப்பட்டது. போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கக் கூடிய மரக்கிளைகள் அப்புறப்படுத்தப்பட்டன.

அத்துடன், மேற்கு நெழுவினிப் பிள்ளையார் கோயிலடியில் இருந்து பெரிய துறைவரையான பிரதான சாலை துப்புரவு செய்யப்பட்டது. காராப்பிட்டியில் உள்ள கிணறு துர்வாரப்பட்டு பொதுமக்கள் குடிதண்ணீரைப் பெற வசதி செய்யப்பட்டது. (ஒ-111)

## அரியாலை கிழக்கு வயல்களுக்கு விவசாயிகள் செல்ல ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.5

அரியாலை கிழக்கு உயர்பாதுகாப்ப வலயத்தில் அமைந்துள்ள கொட்டுக் கிணற்றடி, ஈச்சங்காடு பகுதிகளில் நெற்செய்கையில் ஈடுபடுபவர்கள் நாளை வியாழக்கிழமை உரிய காணிகளுக்குச் சென்றுவர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

51'4ஆவது படையணியின் தலைமைப் பீடம் இப்பிரதேசத்தில் பயிர்ச் செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் விசேட அடையாள அட்டைகளை ஏற்கனவே வழங்கி உள்ளது.

தனித்துச் செல்லும் விவசாயிகளை உள்ளே செல்ல இராணுவத்தினர் அனுமதிக்காததைத் தொடர்ந்து கூட்டாக அனைத்து நெற்செய்கையாளர்களும் இணைந்து நாளைய தினம் தமது காணிகளுக்குச் செல்லவுள்ளார்கள்.

இதற்கு வேண்டிய ஒழுங்குகளை அரியாலை விவசாய சம்மேளனத்தினர் மேற்கொண்டுள்ளனர்.


அனைத்து நெற்செய்கையாளர்களையும் நாளை முற்பகல் 10 மணிக்கு ஆனந்தன் வடலி வீதியில் ஒன்றுகூடும்படி கேட்கப்பட்டுள்ளது. (ஐ-86)

### நாளை

புரட்டாதி 20
வியாழக்கிழமை
06.10.2005
திதி: திருதியை
பிற்பகல் 04.57 வரை
நட்சத்திரம்: சுவாதி
முற்பகல் 7.59 வரை
சுபநேரம்: 07.32 - 09.02
ராகுகாலம்: 01.32 - 03.02
(யாவும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

மறக்கவேண்டும் என்ற வாழ்வின் மிகச்சிறந்த பாடத்தைக் கற்றவன் உண்மையிலேயே ஒரு ஞானவான்.
-ஐ.எட்கார் ஜோன்ஸ்.



# விளைச்சலைப் பெருக்கி செலவைக் குறைக்க தூவல் நீர்ப்பாசனம் ஒரு வரப்பிரசாதம்

## அனுபவத்தில் கண்டதை சொல்கிறார் சுன்னாகம் விவசாயி



யாழ்ப்பாணக் குடாநாட்டு விவசாயிகளுக்கு தூவல் நீர்ப்பாசன முறையினை அறிமுகப்படுத்தி மானிய அடிப்படையில் அவற்றை விவசாயிகளுக்கு யாழ். கமத்தொழில் திணைக்களம் விநியோகித்து வருகின்றது. 'சிற்றிகாடின்' நிறுவனம் மூலம் இவை வழங்கப்படுகின்றன.

தூவல் நீர்ப்பாசன இயந்திரத்தைப் பொருத்தி வெங்காயச் செய்கையில் ஈடு பட்ட சுன்னாகம் விவசாய சம்மேளனத் தலைவர் சு.தியாகலிங்கம் விவசாய விழாவாகத் தமது உற்பத்தி அறுவடையைக் கொண்டாடி உள்ளார்.

தூவல் நீர்ப்பாசனம் பற்றிய தமது அனுபவத்தை 'உதயன்' வாசகர்களுடன் இங்கே பகிர்ந்துகொள்கிறார்.

• **கேள்வி:-** உங்கள் வயலில் தூவல் நீர்ப்பாசன இயந்திரம்-பூட்டவேண்டும் என்ற ஆவல் ஏன் உங்களுக்கு ஏற்பட்டது?

✱ **பதில்:-** சுன்னாகம் தெற்கு விவசாய சம்மேளனத் தலைவராக இருக்கும் நான் ஒரு பரம்பரை விவசாயி. விவசாயச் செய்கையில் நீண்டகால அனுபவம் எனக்குண்டு. விவசாயம் தொடர்பாக விவசாயத் திணைக்களத்தால் நடத்தப்படும் கூட்டங்களுக்குத் தவறாது செல்வேன். அப்படிச் செல்லும் வேளையில் திருநெல்வேலி விவசாயக் கல்லூரியில் தூவல் நீர்ப்பாசன முறை பற்றிய விளக்கமளிக்கப்பட்டது. அங்கு ஒரு தூவல் நீர்ப்பான இயந்திரமும் பூட்டப்பட்டிருந்தது. அங்குள்ள உத்தியோகத்தர்கள் அதனை இயக்கிக் காட்டினார்கள். அப்பொழுது அதனைப் பார்த்த நான் எனது வயலிலும் இது போன்ற ஓர் இயந்திரத்தைப் பூட்டிப் பார்க்க விரும்பினேன்.



• **கேள்வி:-** தூவல் நீர்ப்பாசன இயந்திரத்தை உங்கள் வயலில் பூட்டுவதற்கு யாரெல்லாம் உதவி செய்தார்கள்?

✱ **பதில்:-** இயந்திரம் பூட்டுவது தொடர்பாக விசாரித்தபோது கால் ஏக்கருக்கு பூட்ட சுமார் 30 ஆயிரம் ரூபா செலவாகும் என்றார்கள். முதன்முதலாக நான் அதனைப் பூட்டுவதற்கு நிதி அதிகம் செலவாகும் எனக் கருதி மானிய அடிப்படையில் பூட்டித் தருமாறு விவசாய உத்தியோகத்தர்களைக் கேட்டுக்கொண்டேன். அதன்போது சில வங்கிகள் இரண்டு வருட கடன் அடிப்படையில் பூட்டித்தர முன்வந்தன. எனக்கு அதுவும் கஷ்டமாக இருந்தது. அப்போது யாழ். மாவட்ட கமத்தொழில் திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசன், ஐ.நா. அபிவிருத்தித் திட்ட நிதி உதவியுடன் யாழ்ப்பாணக் குடாநாட்டிலே மானிய அடிப்படையில் 90 விவசாயிகளுக்கு கால் ஏக்கர் நிலப்பரப்பில் இயந்திரங்களைப் பூட்டித் தர ஒழுங்குசெய்தார். உடுவில் கமநல சேவை நிலையத்தில் ஏழு விவசாயிகளுக்குப் பூட்டிக்கொடுக்கப்பட்டது. அதில் ஒன்று எனக்கும் கிடைத்தது.

• **கேள்வி:-** தூவல் நீர்ப்பாசனம் தொடர்பான பயிற்சிகள் ஏதும் பெற்றிருக்கீறீர்களா?

✱ **பதில் :-** தூவல் இயந்திரம் பூட்டுவதற்கு முன் யாழ்ப்பாணம் விவசாயக் கல்லூரியில் விவசாயப் போதனாசிரியர் மூலம் எமக்குப் பல பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இது தொடர்பான தெளிவான விடயங்கள் பயிற்சி மூலம் வழங்கப்பட்டன. பின்புதான், எமக்கு அதனைப் பூட்டக் கூடியதாக இருந்தது. யாழ். குடா நாட்டு மக்களுக்கு 'சிற்றி காடின்' நிறுவனம் தான் தூவல் நீர்ப்பாசனத்தை 90 விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தி பூட்டித்தர ஒழுங்கு செய்தது.

• **கேள்வி:-** இப் புதிய நீர்ப்பாசன முறை மூலம் வெங்காயப்பயிர் செய்கையை முதன்முதலாக மேற்கொள்ள ஏன் முடிவு செய்தீர்கள்?

✱ **பதில்:-** இயந்திரம் பூட்டப்பட்ட காலம் வெண்காயப் பயிர்ச்செய்கைக்கு ஏற்றது என விவசாயப் போதனாசிரியர் ஆலோசனை வழங்கி இருந்தார். அதற்கமைய வெங்காயச் செய்கையை மேற்கொண்டேன். பாத்தி முறையிலும் பார்க்க இதன் மூலம் இலகுவாக வெங்காயப் பயிர் செய்யமுடிந்தது. பாத்திமுறை வெண்காயப் பயிர்செய்கைக்குக் கூடிய அளவு கூலி ஆள்கள் தேவை, இதற்கு அதன் பாதி அளவு போது மானது.

• **கேள்வி:-** தூவல் நீர்ப்பாசன முறையில் நீங்கள் பெற்றுக்கொண்ட அனுபவங்கள் பற்றிக் கூறுவீர்களா?

✱ **பதில்:-** வெங்காயம் நடமுன்னர் இரண்டு நாள்களுக்கு முன்னர் தூவலால் நனைத்துப் போட்டு, நிலத்தைப் பண்படுத்திப் பயிரை நட்டால் நடுகை சுகமாக இருக்கும் - நட்ட பின் பத்து நாள்களுக்கு காலையில் 20 நிமிடநேரம் நீர் தூவினால் போதும். அதன் பின் ஒன்றுவிட்டு ஒருநாள் நீரை தூவலாம். இதன் மூலம் வழங்கப்படும் நீர் பயிர்களுக்கு அளவானதாக இருக்கும். பாத்தி முறைபோன்று அதிக நீர் வீணாக அடியில் செல்லாது உரங்களும் கரைந்து வீணாகக் கீழே போய்விடாது கிருமிநாசினிகளும் அதிகம் பாவிக்கத் தேவையில்லை. கிருமிநாசினிகள் அடிக்காமலேயே பயிர் செய்கை பண்ணக் கூடியதாக இருக்கும்.

தூவல் நீர்பாசனமுறையில் பயிர்கள் செளித்து வளரும் களைகள்கூட குறைவாகவே காணப்படும். பனிகாலத்தில் பூச்சிகளால் வெங்காயம் பழுதடையும். தூவல்முறையில் நீர்பாய்ச்சுவதால் பனித்தண்ணீர் கழுவப்பட்டு விடும் வெங்காயத்துக்குத் தாக்கம் இராது.

• **கேள்வி:-** அப்போ, நீங்கள் வெங்காயப் பயிருக்குக் கிருமிநாசினிகளே பாவிக்கவில்லையா?

✱ **பதில்:-** அப்படியல்லா. பாத்திமுறை செய்கையில் 7,8 தரம் கிருமிநாசினி அடிக்க வேண்டியிருக்கும். ஆனால், நான் மூன்று முறை மட்டுமே பாவித்துள்ளேன். பாத்தியில் நடும்போது வெங்காயம் நிலத்துள் தாழ்ந்துவிடும். இந்தமுறையில் வெங்காயம் வெளியே தெரியும். திரண்டு கவர்ச்சியாகக் காணப்படும்.

• **கேள்வி:-** பாத்திமுறையைக் காட்டிலும் இதன்மூலம் பயிர்செய்யும்போது என்ன வேறுபாடுகளை அவதானித்தீர்கள்.

✱ **பதில்:-** கூலியாள்கள் அரைப்பங்கினருடன் நிலம் பண்படுத்தலாம். நாமாகவே பாத்திகளைக் கட்டி செய்யமுடியும். களை கட்டுவது குறைவாக இருக்கும். வெங்காயத்தைக் கிண்டி எடுப்பது இலகுவாக இருக்கும். தொழிலாளர் பற்றாக்குறையான காலத்தில் நாமாகவே இதனை இயக்கிவிட்டு வேறு வேலைகளைக் கவனிக்கலம் நூற்றுக்கு நூறு வெற்றி பெறலாம். 5 ஆயிரம் ரூபாவுக்கு மேலாக செலவை மிச்சப்படுத்தலாம்.

| செலவு முறை | பாத்திமுறை | தூவல்முறை |
|---|---|---|
| பாத்தி அமைத்தல் | 1500 ரூபா | 500 ரூபா |
| கிருமிநாசினி | 2000 ரூபா | 1,000ரூபா |
| நீர்ப்பாய்ச்சல் கூலி | 1,000 ரூபா | - |
| எரிபொருள் | 2,000 ரூபா | 1,000 ரூபா |
| களை எடுத்தல் | 1,500 ரூபா | 750 ரூபா |
| | 8,000 ரூபா | 3,250 ரூபா |

• **கேள்வி:-** வெங்காயப் பயிரின் விளைச்சல் எப்படி இருந்தது?

✱ **பதில்:-** சாதாரணமாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் தற்காலத்தில் விளைச்சல் குறைந்துகொண்டே வருகின்றது ஓர் அந்தர் வெங்காயத்துக்கு 4 அந்தர் வெங்காயமே விளைகின்றது. ஆனால், தூவல் நீர்ப்பாசன முறையின் மூலம் ஓர் அந்தருக்கு ஆறு அந்தர் விளைச்சலை நான் பெற்றுள்ளேன். நோய்த் தாக்கம் 75 வீதம் இல்லை என்றே கூறலாம். குறைந்த நீருடன் கூடிய நிலத்தில் பயிர் செய்யமுடியும். மண்வளம், சூழல் பாதுகாக்கப்படுகிறது.

**செவ்வி கண்டவர்:- வி.பி.சர்மா**

எனது தோட்ட விளைவை வயல்விழாவாக விவசாயப் பகுதியினர் கொண்டாடினர். விவசாயிகள் பலர் விழாவில் கலந்து கொண்டு பயிரைப் பார்வையிட்ட பின்னர் அநேகருடைய மனதில் தாங்களும் தூவல் நீர்ப்பாசன இயந்திரத்தைப் பூட்டி பயிர் செய்யவேண்டும் என்ற ஆவலும் துடிப்பும் காணப்பட்டதை அறியமுடிந்தது. ✱

# மரண அறிவித்தல்

## துரையப்பா பார்வதிப்பிள்ளை



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் மல்லாவியை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி துரையப்பா பார்வதிப்பிள்ளை அவர்கள் 03-10-2005 அன்று சென்னையில் சிவனடி சேர்ந்தார்.

அன்னார் ஆ.துரையப்பா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பென்சனியர் ஆ.வேலுப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் வே.கந்தையா, காலஞ்சென்ற வே.பொன்னையா, திருமதி இ.கனகம்மா ஆகியோரின் பாசமுள்ள சகோதரியும் து.கனகரத்தினம் (வவுனியா), ம.தனலட்சுமி (சென்னை), காலஞ்சென்ற து.கோபால சிங்கம், து.நவரத்தினசிங்கம் (சென்னை), ந.மனோரஞ்சிதம் (சுவிஸ்), காலஞ்சென்ற து.நாகராசா, து.மணிவாசகன் (பெல்ஜியம்), ஜெ.கலாரஞ்சினி (வவுனியா) ஆகியோரின் அன்புத் தாயும் திருமதி க.சரோஜாதேவி, தி.அ.மருதலிங்கம் (மல்லாவி), ந.ஜெயலட்சுமி (சென்னை), க.நவரத்தினராஜா (சுவிஸ்), ம.ரஞ்சனா (பெல்ஜியம்), பொ.ஜெயக்குமாரன் (வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05-10-2005) புதன்கிழமை சென்னையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
து.கனகரத்தினம் (மகன்).
சென்னை: 0091 - 4426590766

(சி/45429) (24-18-34)


**உலக ஆசிரியர்களே!**
**வாழ்த்தி வணங்குகின்றோம்!!**
ஒக்ரோபர் - 05
உலக ஆசிரியர் தினமான இன்று
எமக்குக் கல்விக் கண்களைத் திறந்திட்ட
யாழ்.புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய
அதிபர், ஆசிரியர்களையும்
யாழ். வேம்படி மகளிர் கல்லூரி அதிபர்,
ஆசிரியர்களையும் வேறு வழிகளில் கல்வி
புகட்டிய, புகட்டுகின்ற ஆசிரியர்களையும் மற்றும்
உலக அனைத்து ஆசிரியர்களையும் அவர்கள்
சகல செல்வங்களும் பெற்று பெருவாழ்வு
வாழ வாழ்த்தி வணங்குகின்றோம்.
'சதாஸ்'
519/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தி.சங்கீதா, தி.சங்கவி,
தி.சரிகா, தி.ஆரதி.
(45426) (19-34-19-24)



**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-222 8250,0777 222422
அனைத்துக் கணனிக் கற்கை நெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன
வகுப்புக்கள் ஆரம்பம் :
07-10-2005 11.30 - 01.30
08-10-2005 10.30 - 11.30
09-10-2005 03.00 - 04.00



**GYM விற்பனைக்கு**
யாழ். நகரில்
பிரபல GYM
(உடற்பயிற்சி நிலையம்)
விற்பனைக்கு.
தொடர்பு:
0776450299
(40814) (24-18-34)



**விண்ணப்பப்படிவம்**
ஸ்ரீலங்கா ரெலிக்கொம்
பணியாளர் விண்ணப்பப் படிவங்கள்
உடன் பெற்றுக்கொள்ள
திருமுருகன் கொம் நெற்
இல. 259, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (சி/45425) (26-34-18-24
இல. 46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.



**முகாமையாளர் தேவை**
*கல்வித்தகைமை:* A/L சித்தியுடன் சரளமாக ஆங்கிலம், சிங்களம் பேசத் தெரிந்தவராக இருக்கவேண்டும்.
*அனுபவம்:* பதிவுபெற்ற வியாபார ஸ்தாபனம் ஒன்றில் குறைந்தது இருவருட அனுபவமாவது பெற்றிருக்க வேண்டும்.
*வயது:* 30-55 வரை (ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்க)
சம்பளம் பேசித் தீர்மானித்துக் கொள்ளலாம்.
தொடர்பு: (40809)(42-34-18-24)
திருச்செந்தூரன் றேடிங் கம்பனி,
315, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.

# கிளிநொச்சியில் பெரும் அளவில் மீண்டும் மூலிகைகள் உற்பத்தி

## ஆரம்பகட்ட நடவடிக்கை முன்னெடுப்பு

பரந்தன்,ஒக்.5

கிளிநொச்சி மாவட்டத்தில் மீண்டும் மிகப்பெரும் அளவில் மூலிகை உற்பத்தியை மேற்கொள்வதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மூலிகைப் பண்ணை அமைப்பதற்கான நடவடிக்கைகளை சித்த ஆயுள்வேத மருத்துவ மூலிகை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் தமிழீழ சுகாதார சேவைப் பணிப்பாளர் விக்கிரமன், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம், கண்டாவளைப் பிரதேச செயலர் சீ.சத்தியசீலன் ஆகியோர் கூட்டாக இணைந்து மேற்கொண்டுள்ளனர்.

கல்மடு நகரில் முன்னர் மூலிகைப் பண்ணை ஒன்று உருவாக்கப்பட்டு பின்னர் அது கைவிடப்பட்டது. தற்போது மீண்டும் இப்பண்ணையை உருவாக்குவதற்கான வேலைத் திட்டமே தற்போது நடைபெற்று வருகின்றது.

இந்தப் பண்ணைக்கான ஆரம்ப வேலைகள் யாவும் நிறைவுபெற்றுள்ளதாகவும் -

எதிர்வரும் 14ஆம் திகதி மூலிகை நடுகைத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

மூலிகைப் பண்ணையின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் கல்மடு நகர் மூலிகைப் பண்ணையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

சித்த ஆயுள்வேத மூலிகை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க உப தலைவர் டாக்டர் கே.வி.கே. திருலோகமூர்த்தி தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் தமிழீழ சுகாதார சேவையைச் சேர்ந்த தமிழ்வாணன் சிறப்புரை நிகழ்த்தினார். (ஒ-352-202)

## ஒதியாமலையில் சுகாதார நிலையம்

புளியங்குளம்,ஒக.5

முல்லைத்தீவு ஒதியமலைக் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலைய்ம் அமைக்கும் பணி நடைபெற்றுவருகின்றது.

'யுனிசெவ்' நிறுவன நிதியதவியுடன் அமைக்கப்படும் இந்த நிலையம், சுகாதாரத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

இதன்மூலம், ஆரம்ப சுகாதார நிலையம் இல்லையென்ற நீண்டகாலக் குறை நிவர்த்தி செய்யப்படும் என இப்பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

(ஒ-355-204)

## துணைப்படை வீரர்களுக்கான பயிற்சிப் பாசறை ஆரம்பம்

ஒட்டுசுட்டான்,ஒக்.5

முல்லைத்தீவு மாவட்டத்தில் துணைப்படை வீரர்களுக்கான பயிற்சிப் பாசறை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இதில் 200 பேருக்குப் பயிற்சி வழங்கப்பட்டுவருகின்றது.

இப்பயிற்சிப் பாசறையின் ஆரம்ப வைபவம் கடந்த 25ஆம் திகதி கடற்புலி லெப். கேணல் திருவடி பயிற்சிப் பாசறையில் துணைப்படை வீரர் பாஸ்கரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பொதுச்சுடரினைக் கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான மங்களேஸ் ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியை லெப்.கேணல் ராஜன் கல்விப் பிரிவுப் பொறுப்பாளர் கீரன் ஏற்றினார். லெப் கேணல் திருவடியின் உருவப்படத்திற்கான ஈகச்சுடரைக் கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான விநாயகம் ஏற்றிவைத்தார். மலர் மாலையைப் போராளி நளன் அணிவித்தார்.

பயிற்சிப் பாசறையின் பெயர்ப்பலகையினைத் தளபதி சித்திராங்கன் திரைநீக்கம் செய்துவைத்தார்.

நிகழ்வில் தளபதிகள், போராளிகள், பொறுப்பாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(ஒ-341-202)

# முல்லை.தொழில்நுட்பக் கல்லூரிக்கு பயிற்சிப் பணித்தளக் கட்டடங்கள்


முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள முல்லை தொழில்நுட்பக் கல்லூரியில் கட்டட வேலை, நீர்க்குழாய் பொருத்துதல், மின்ஒட்டுதல், மரவேலைப் பயிற்சி நெறிகளுக்கான பணித் தளக் கட்டடங்கள் திறப்பு விழாவும் பயிற்சி வகுப்பு ஆரம்ப நிகழ்வும் கடந்த 22 திகதி நடைபெற்றன.

பிரதேச சபை ஆணையாளரும் கல்லூரித் தலைவருமான எஸ்.கிருஷ்ணராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆசியுரையை வண.பிதா திருமகன் நிகழ்த்தினார்.

கருத்துரையை பொருண்மிய மதியுரையக பணிப்பாளர் சுந்தரமூர்த்தி நிகழ்த்தினார்.

சிறப்புரைகளை அரசியல் துறைப் பொறுப்பாளர் முகுந்தன், கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் ரங்கன் ஆகியோர் நிகழ்த்தினர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் போரினாலும் இயற்கை அனர்த்தத்தினாலும் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு உலக கனேடிய பல்கலைக் கழக நிதியுதவியுடன் பொருண்மிய மதியுரையகத்தின் அனுசரணையுடனும் இந்த தொழில்நுட்பக் கல்லூரி அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-204)



இரணைதீவு றோ.க.த. பாடசாலை மாணவர்கள் நிரந்தர பாடசாலைக் கட்டடம் இல்லாமல் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். அவர்கள் தற்போது கல்வி கற்கும் வகுப்பறைகள் இருக்கும் நிலையையும் -
இப்பாடசாலைக்கென அமைக்கப்பட்டிருக்கும் கட்டடம் வேலைகள் பூர்த்தியடையாத நிலையில் இருப்பதையும் படங்களில் காணலாம்.
*(படங்கள் : வெள்ளாங்குளம் செய்தியாளர்)*

## மின்சாரம் வழங்க ஏற்பாடு

வட்டக்கச்சி,ஒக.5

கிளிநொச்சியிலிருந்து வட்டக்கச்சிப் பிரதேசத்திற்கு மின்சாரம் வழங்கும் நடவடிக்கை மின்சார சபையினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கையாக மின்கம்பங்கள் வீதியோரமாகப் போடப்பட்டுள்ளன. நீண்டகால இடைவெளியின் பின்னர் மீண்டும் இப்பிரதேசத் திற்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.(ஒ-405)

## பூநகரிப் பாடசாலைக்கு புதிய கட்டடம்

பூநகரி ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலயத்துக்கு நிகொட் நிறுவனத்தினர் இரண்டு மாடிக்கட்டடம் ஒன்றை அமைத்துக் கொடுத்துள்ளனர்.

55 லட்சத்து 43 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்த இரண்டு மாடிக்கட்டடம் கட்டிமுடிக்கப்பட்டு வெகுவிரைவில் திறப்பு விழா நடைபெறவுள்ளதாக வித்தியாலய அதிபர் கே.ஞானசீலன் தெரிவித்தார்.

(ஒ-403-202)

# சூழல் பாதுகாப்பு முன்னோடி நாள் நல்லாட்சி ஆணையகத்தால் பிரகடனம்

எதிர்வரும் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமையை சூழல் பாதுகாப்பு முன்னோடி நாளாகத் தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பான அறிக்கை ஒன்றையும் ஆணையகம் வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எமது மண் ஆக்கிரமிப்பாளர்களின் பிடியிலிருந்து விடுவிப்பது மட்டுமல்லாது எமது தாயகத்தின் மண்வளம், நீர்வளம், வனவளம், தூய வளிவளம் அதன் உயிர் பல்வகைத் தன்மை என்பவற்றைப் பேணிப் பாதுகாத்திடும் பொறுப்பு எங்கள் எல்லோருக்கும் உரியது.

எதிர்வரும் 7ஆம் திகதியை சூழல் பாதுகாப்பு முன்னோடி நாளாக நாம் அனைவரும் கடைப்பிடித்து இந்த நாளில் எமது மண்ணின் சூழலை பாதிக்கும் சமநிலையை குழப்பும் அனைத்து திண்ம, திரவ கழிவுகளையும் அகற்றி எமது சூழலைப் பாதுகாக்க அனைவரும் ஒத்துழைக்கும் வண்ணம் வேண்டுகிறோம்.

இச்சூழலை பாதுகாக்கும் நாளில் சமூக அமைப்புகள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் கூட்டுறவுத் துறைகள், கல்வி நிலையங்கள், வணக்கத்தலங்கள், சூழலியலாளர்கள், மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுமாறு வேண்டுகிறோம்.

எமது மண்ணைச் சிதைவடையைச் செய்யும் பொலித்தீன் பைகள், கல்நாரிழை (அஸ்பெஸ்டஸ்) துண்டங்கள், தகரங்கள், கண்ணாடிச் சிதறல்கள் போன்ற கழிவுகளை அகற்றி குப்பை கூளங்களை நீக்கியும் கழிவுநீர் தேங்கு நிலைகளை சுத்தப்படுத்தியும் நீர் தேங்காதவாறும் தொற்று நோய்கள் பரவக்கூடிய பொருள்களை அகற்றியும் சூழலைச் சுத்தமாக வைத்திருப்பதற்கும் அனைவரும் பாடுபடுவோம் - என்றுள்ளது. (த-202)

## வலைபந்தாட்ட கலந்துரையாடல் பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,ஒக்.5

யாழ்.மாவட்ட வலைபந்தாட்டச் சங்கத்தால் இன்று புதன்கிழமை நடத்தப்படவிருந்த விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான கலந்துரையாடல் பிற்போடப்பட்டுள்ளது. இக்கலந்துரையாடல் எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறும் என்று சங்கத் தலைவர் திருமதி ரூபசிங்கம் தெரிவித்தார்.

அத்துடன் வலைபந்தாட்டச் சங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையில் நடைபெறவுள்ளவலைபந்தாட்டப்போட்டிகளில் பங்கு பற்றுவதற்கான விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்திசெய்து யாழ்.மாவட்ட வலைபந்தாட்டச் சங்கதத்துக்கு அனுப்பிவைக்குமாறும் - பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களை அந்தந்தப் பாடசாலையைச் சேர்ந்தவர்கள் உடனடியாக அனுப்பிவைக்கவேண்டுமெனவும் அவர் மேலும் கேட்டுள்ளார்.

(ஒ-203)

## 'சுப்பர் சீரிஸ்' கிரிக்கெட் இன்று ஆரம்பம்

மெல்போர்ன்,ஒக்.5

உலக லெவன் மற்றும் ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணிகள் மோதும் 'சுப்பர் சீரிஸ்' கிரிக்கெட் போட்டி இன்று ஆரம்பமாகிறது.

இவ்விரு அணிகளும் 3 ஒருநாள் போட்டிகளிலும் 6 நாள் கொண்ட ஒரு டெஸ்ட் போட்டியிலும் மோதுகின்றன.

முதல் ஒருநாள் போட்டி இன்று புதன் கிழமை மெல்போர்னில் நடைபெறுகிறது.

டெஸ்ட் போட்டி எதிர்வரும் 14ஆம் திகதி முதல் 19 திகதி வரை சிட்னியில் நடைபெறவுள்ளது.

உலக அணியில் பங்குபற்றும் 12 வீரர்களின் பெயர்களை அவ்வணியின் முகாமையாளர் சுனில் கவாஸ்கர் அறிவித்துள்ளார்.

உலக லெவன் அணியில் இடம்பெற்றுள்ள வீரர்கள் வருமாறு:-

ஷேன்பொலக் (அணித்தலைவர்), பிரைன் லாரா (துணைத் தலைவர்), அப்ரிடி, சொஹைப் அக்தர், ராகுல் ராவிட், வீரேந்தர் ஷெவாக், கிறிஸ் கெய்ஸ், ஜக்கலிஸ், முத்தையா முரளிதரன், நிற்னி, கெவின் பீற்றர்சன், சங்கஹார. (ஒ-410)

## சான்றோர் சனசமூக நிலையத்துக்கு விளையாட்டு உபகரணம் அன்பளிப்பு

தென்மராட்சி,ஒக்.5

நாவற்குழி வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சான்றோர் சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் இந்த விளையாட்டுப் பொருள்களை வழங்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் தத்தெடுக்கப்பட்ட நாவற்குழி வீடமைப்புத் திட்ட கிராமத்தை யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள சர்வதேச லயன்ஸ் கழக 306 பி, மாவட்ட ஆளுநர் உடன் சரத் குணசேகர பார்வையிட்டு விளையாட்டு உபகரணங்களை சனசமூக நிலைய நிர்வாகிகளிடம் கையளிப்பார் எனத் தெரிவிக்கப்பட்டது. லயன்ஸ் கழக உறுப்பினர்களால் அண்மையில் இந்தச் சனசமூக நிலையத்தின் விளையாட்டு மைதானம் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-117)

## பாடசாலை மட்ட கிரிக்கெட்

யாழ்ப்பாணம்,ஒக்.5

யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 13 வயதிற்குட்பட்டோருக்கான அணிகள் பங்குபற்றும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று புதன் கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

*பிரிவு 'ஏ'*

✱ நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் எதிர் மகாஜனக் கல்லூரி (நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானம்)

ஹாட்லிக் கல்லூரி எதிர் யூனியன் கல்லூரி (ஹாட்லிக் கல்லூரி மைதானம்)

*பிரிவு 'பி'*

✱ யாழ்.மத்திய கல்லூரி எதிர் யாழ். இந்துக் கல்லூரி (யாழ்.மத்திய கல்லூரி மைதானம்)

✱ விக்கினேஸ்வரக் கல்லூரி எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி (விக்கினேஸ்வரக் கல்லூரி மைதானம்)

*பிரிவு 'சி'*

✱ யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் சென்.பற்றிக்ஸ் கல்லூரி (யாழ்ப்பாணக் கல்லூரி மைதானம்)

✱ கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் பாடசாலை (கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானம்). (ஒ-190)

மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றத்தினதும், மாவை பாரதி சனசமூக நிலையத்தினதும்

# பொன்விழா கல்விப்போட்டி விதிமுறை-2005

## 1. போட்டிக்குத் தகுதிபெற்றோர்:

யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலை/கல்லூரிகளில் தற்போது கல்விகற்றுக் கொண்டிருக்கும் மாணவர்கள் இப்போட்டிக்கான விதிமுறையை அனுசரித்துப் போட்டியில் பங்குபற்றத் தகுதியுடையவராவர்.

பிரிவு 1:- 3ஆம், 4ஆம், 5ஆம் தர மாணவர்களுக்கானது.
பிரிவு 2:- 6ஆம், 7ஆம் தர மாணவர்களுக்கானது.
பிரிவு 3:- 8ஆம், 9ஆம் தர மாணவர்களுக்கானது.
பிரிவு 4:- 10ஆம், 11ஆம் தர மாணவர்களுக்கானது.
பிரிவு 5:- க.பொ.த.உயர்தர மாணவர்களுக்கானது.

**2. போட்டி நடைபெறும் இடம்:** யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

**3. போட்டிக்கான திகதி:** 13.11.2005 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல

**4. போட்டிக்கான நேர அட்டவணை :** 13-11-2005 ஞாயிற்றுக்கிழமை

| ஆரம்பம் | 1 ஆம் பிரிவு | 2 ஆம் பிரிவு | 3 ஆம் பிரிவு | 4 ஆம் பிரிவு | 5 ஆம் பிரிவு |
|---|---|---|---|---|---|
| 9.00 | கட்டுரை தமிழ் | கட்டுரை தமிழ் | கட்டுரை தமிழ் | கட்டுரை தமிழ் | கட்டுரை தமிழ் |
| 10.00 | கட்டுரை ஆங்கிலம் | கட்டுரை ஆங்கிலம் | கட்டுரை ஆங்கிலம் | கட்டுரை ஆங்கிலம் | கட்டுரை ஆங்கிலம் |
| 11.00 | | | இடைவேளை | | |
| 11.15 | பேச்சு தமிழ் | பேச்சு தமிழ் | பேச்சு தமிழ் | பேச்சு தமிழ் | பேச்சு தமிழ் |
| 12.15 | பேச்சு ஆங்கிலம் | பேச்சு ஆங்கிலம் | பேச்சு ஆங்கிலம் | பேச்சு ஆங்கிலம் | பேச்சு ஆங்கிலம் |
| 1.15 | | | இடைவேளை | | |
| 2.00 | ................ | பொது அறிவு | பொது அறிவு | பொது அறிவு | பொது அறிவு |
| 3.00 | ................ | ................ | ................ | கவிதை | கவிதை |

**5. போட்டிகளின் வகைகள்**

1.கட்டுரைப்போட்டி (தமிழ்) 2.கட்டுரைப்போட்டி (ஆங்கிலம்) 3.பேச்சுப்போட்டி (தமிழ்)
4.பேச்சுப்போட்டி (ஆங்கிலம்) 5.பொது.அறிவு 6.கவிதைப்போட்டி (தமிழ்)

குறிப்பு:
1. 1ஆம் பிரிவிற்கு பொதுஅறிவுப்போட்டி நடைபெறாது
2. 1 ஆம், 2 ஆம், 3 ஆம் பிரிவிற்கு கவிதைப்போட்டி நடைபெறாது
3. ஒருவர் தனது பிரிவிற்குரிய போட்டிகளில் மட்டுமே பங்குபற்றமுடியும். தெரிவுசெய்யக்கூடிய போட்டிகளின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்படவில்லை.

**6.கட்டுரைப்போட்டி விவரம் (தமிழ்)**

| பிரிவு | நேரம் | பின்வரும் தலைப்புகளில் ஒன்றைப் பற்றி |
|---|---|---|
| 1 ஆம் பிரிவு | 45நிமிடம் | 1.தமிழ்மொழி 2.எனது பெற்றோர் 3.நான் விரும்பும் பெரியார் 4.எனது கிராமம் 5.சமய வழிபாடு |
| 2 ஆம் பிரிவு | 45நிமிடம் | 1.நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் 2.சமூக முன்னேற்றத்தில் நூல்நிலையங்களின் பங்கு 3.ஆங்கிலம் படிப்பதன் அவசியம் 4.மாணவர்களின் முன்னேற்றத்திற்கு ஒழுக்கத்தின் அவசியம் |
| 3 ஆம் பிரிவு | 45நிமிடம் | 1.ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு 2.பாடசாலைகளின் முன்னேற்றத்திற்கு மாணவரின் பங்கு 3.விஞ்ஞானக் கல்வியின் அவசியம் 4.இலங்கையின் அபிவிருத்திக்கு சமாதானத்தின் அவசியம் |
| 4 ஆம் பிரிவு | 45நிமிடம் | 1.கணனிக் கல்வியின் அவசியம் 2.மனித உரிமைமீறல்களும் அவற்றைத் தடுப்பதற்கான வழிவகைகளும் 3.ஜனநாயக ஆட்சியில் அரசியல் கட்சிகளின் பங்கு 4.ஐக்கிய நாட்டுச் சபையின் முக்கியத்துவம். |
| 5 ஆம் பிரிவு | 60நிமிடம் | நடுவர்களினால் தரப்படும் 4 தலைப்புகளில் ஒன்றைத்தெரிந்து கட்டுரை வரைதல்வேண்டும். |

**7.கட்டுரைப்போட்டி விவரம் (ஆங்கிலம்)**

| பிரிவு | நேரம் | பின்வரும் விடயங்களில் ஒன்றைப் பற்றி |
|---|---|---|
| 1 ஆம் பிரிவு | 45நிமிடம் | 1.My Pet 2.My Garden 3.My School 4.My Village |
| 2 ஆம் பிரிவு | 45நிமிடம் | 1.My Country 2.My Hobby 3.My Favorite Subject 4.Car Festival |
| 3 ஆம் பிரிவு | 45நிமிடம் | 1.A Rainy Day 2.College Prize Day 3.Sports Meet 4.A Memorable Day |
| 4 ஆம் பிரிவு | 45நிமிடம் | 1.My Visit to Zoo 2.The Cricket Match I Witnessed 3.Honesty is the Best Policy 4.Educational Tour |
| 5 ஆம் பிரிவு | 60நிமிடம் | 1.Unity in Diversity 2.Political Aspirations of the Elam Tamils 3.Computer Technology and Globalization 4.Education and Community Development |

**8.கவிதைப்போட்டி விவரம் (தமிழ்) ஆக்கம்-60 புள்ளி + வாசிப்பு - 40 புள்ளி**

| பிரிவு | நேரம் | பின்வருவனவற்றில் ஒன்றைப் பற்றி |
|---|---|---|
| 4 ஆம் பிரிவு | 60நிமிடம் | 1.சமூகமே நீ ஏறு நீ ஏறு 2.பொங்கு தமிழுக்கு இன்னல் விளைந்தால்... 3.பெற்ற தாயும் பிறந்த பொன்நாடும்... 4.சுதந்திரக் காற்றே நீ... |
| 5 ஆம் பிரிவு | 60நிமிடம் | 1.யாரொடும் பகை கொள்கிலன் 2.விந்தை உலகில் விஞ்ஞானமே... 3.எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி... 4.ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்... 5.ஒழுக்கம் உயிரிலும் ஓம்பப்படும். |

**9.பேச்சுப்போட்டி விவரம் (தமிழ்)**

| பிரிவு | நேரம் | பின்வரும் விடயங்களில் ஒன்றைப் பற்றி |
|---|---|---|
| 1 ஆம் பிரிவு | 3 நிமிடம் | 1.எனது பூஞ்சோலை 2.எனது பாடசாலை 3.ஔவைப்பிராட்டி 4.அன்புள்ள அம்மா |
| 2 ஆம் பிரிவு | 3 நிமிடம் | 1.விடாமுயற்சி 2.நட்பு 3.உழவுக்கும் தொழிலுக்கும்... 4.நோயற்ற வாழ்வு |
| 3 ஆம் பிரிவு | 5 நிமிடம் | 1.வான்புகழ் வள்ளுவன் 2.மேன்மைகொள் சைவநீதி 3.காலைப் பொழுதினிலே 4.அன்னையும் பிதாவும் |
| 4 ஆம் பிரிவு | 7 நிமிடம் | 1.சமூக விடிவில் சான்றாண்மை 2.கல்வி எழுமையும் ஏமாப்புடைத்து 3.என்று தணியும் எமது சுதந்திர தாகம் 4.சமூகச் செயற்பாட்டில் தலைமைத்துவத்தின் பங்கு |
| 5 ஆம் பிரிவு | 10 நிமிடம் | நடுவர்களினால் தரப்படும் 4 தலைப்புகளில் ஒன்றைத் தெரிந்துபேசுதல் வேண்டும. |

**10.பேச்சுப்போட்டி விவரம் (ஆங்கிலம்)**

| பிரிவு | நேரம் | பின்வருவனவற்றில் ஒன்றைப் பற்றி |
|---|---|---|
| 1ஆம் பிரிவு | 3 நிமிடம் | 1.Market 2.Zoo 3. My Country 4. God |
| 2ஆம் பிரிவு | 3 நிமிடம் | 1.Leisure Time 2. Learning English 3.Importance of Libraries 4. Environmental Pollution |
| 3ஆம் பிரிவு | 5 நிமிடம் | 1. Helping the Needy People 2. Importance of Science 3. Children Rights 4. Industrial Development |
| 4ஆம் பிரிவு | 7 நிமிடம் | 1. Human Rights 2. Peace in Sri Lanka 3. Role of the Boters 4. Unemployment Problems |
| 5ஆம் பிரிவு | 10 நிமிடம் | 1. If I become the President of Sri lanka 2. Importance of Computer Technology 3. Globalization 4. Tsunami Disaster |

**11. பொதுஅறிவுப்போட்டி**

| பிரிவு | நேரம் | விடயங்கள் |
|---|---|---|
| 2 | 45 நிமிடம் | குறிப்பு:- அந்தந்தப் பிரிவுக்குள் அடக்கப்பட்ட வகுப்புகளுக்கான விஞ்ஞானம், சமூகக்கல்வி, வர்த்தகம் ஆகிய பாடநூல்களிலிருந்தும் தற்கால விவகாரங்களிலிருந்தும் வினாக்கள் மூலம் பரீட்சிக்கப்படும். |
| 3 | 45 நிமிடம் | |
| 4 | 60 நிமிடம் | |
| 5 | 60 நிமிடம் | |

**12.பரிசில் வழங்கல்**

அ)குறிப்பிட்ட பொன்விழாவில் வெற்றிபொற்றோர்களுக்கான பரிசிலும். சான்றிதழும் வழங்கப்படும்
ஆ)பரிசில் வழங்கல் திகதி. நேரம். இடம் குறித்தும் வெற்றிபெற்ற மாணவர்களின் விவரத்துடன் பகிரங்கப்படுத்தப்படும்.

**13.போட்டிக்கு விண்ணப்பிக்கும் முறை**

அ) 25-10-2005 திகதிக்குப் பிந்தாமல் விண்ணப்பங்கள் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும்.
ஆ) விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படவேண்டிய முகவரி:

***பொன்விழா செயலணிக் காரியாலயம்,***
*C.B.கணனி கல்வி நிறுவனம், புகையிரதநிலைய வீதி, கோண்டாவில். தொ.இல:- 021-4590291*

இ) பாடசாலை அதிபர் அல்லது வகுப்பாசிரியரின் அத்தாட்சி விண்ணப்பப்படிவத்தில் பெறப்படவேணடும்.
ஈ) மாதிரி விண்ணப்பப் படிவம்

---

மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றத்தினதும், மாவை பாரதி சனசமூக நிலையத்தினதும் பொன்விழாக் கல்விப்போட்டிக்கான விண்ணப்பம்

சுட்டெண் ................

1.விண்ணப்பதாரரின் முழுப்பெயர்:
2.தற்போதைய முகவரி:
3.தொலைபேசி இலக்கம்:
4.வதிவிடப் பிரதேச அலுவலர் பிரிவு:
5.ஆள்அடையாள ஆவண இலக்கம்:
6.பிறந்த திகதி:
7.பங்குபற்றும் பிரிவு:
8.தெரிவு செய்யப்பட்ட போட்டிகள்
(பொருத்தமான இடங்களில் புள்ளடி இடவும்)

கட்டுரைப்போட்டி (தமிழ்) ☐ கட்டுரைப்போட்டி (ஆங்கிலம்) ☐
பேச்சுப்போட்டி (தமிழ்) ☐ பேச்சுப்போட்டி (ஆங்கிலம்) ☐
பொதுஅறிவு ☐ கவிதைப்போட்டி (தமிழ்) ☐

9. பாடசாலையின் பெயர்
10. பாடசாலையின் முகவரி
11. தற்போது கற்கும் வகுப்புத் தரம்

................ திகதி ................ விண்ணப்பதாரரின் கையொப்பம்

---

பாடசாலை அதிபர் அல்லது வகுப்பாசிரியரின் அத்தாட்சி

மேற்குறித்த மாணவர் எங்கள் பாடசாலையில் ................ஆம் தரத்தில் தற்போது கல்விகற்கிறார் என்பதை அத்தாட்சிப்படுத்துகிறேன்.

................ அத்தாட்சிப் படுத்துபவரின் பெயரும் பதவியும் ................ ஒப்பம் ................ திகதி

---

நிர்வாக சபையினர்,
மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றமும் மாவை பாரதி சனசமூக நிலையமும்
"செல்வபவனம்"-கலாமன்ற வீதி, மானிப்பாய் கிழக்கு,
மானிப்பாய். தொ.இல.021-4591053. 29-09-2005

*அனுசரணை வழங்குபவர்:-* **Bata**

வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்:

**லக்ஷ்மி ஓகனைசேசன்**

253, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 222-3776

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

## அமரர் றஞ்சிதலேகா நவனீதன் (லதா)



**மலர்வு** 19-07.1961

**உதிர்வு** 05.09.2005

திங்கள் ஒன்று வந்ததுவே - எங்கள்
திருமகளை நாம் இழந்து
எங்கள் மனம் வெந்ததுவே - இங்கு
எம்மிதயத் தெய்வம் மறைந்து
அங்க மெல்லாம் எரிந்ததுவே - திருத்தணியின்
அகல் விளக்கு அணைந்து
இங்கு நிதம் புலம்புவதே - லதா
இழந்த துயர் நொந்து.

அந்தியேஷ்டியும் வீட்டுக்கிருத்தியமும் - 05.10.2005

திருத்தணி
பிரதான வீதி,
வியாபாரிமூலை.

- குடும்பத்தினர்

# கொழும்பு பள்ளிவாசல் முன்பாக அமைக்கப்பட்ட புத்தர்சிலையை அகற்றுமாறு பிரதமர் உத்தரவு!

## முஸ்லிம் அமைப்பின் முறைப்பாட்டை அடுத்து உடனடி நடவடிக்கை

கொழும்பு,ஒக்.5

கொழும்பு மாநகரசபையின் அனுமதியின்றி கொழும்பு நகரில் அமைக்கப்பட்டுள்ள புத்தர்சிலையை உடனடியாக அகற்றுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கொழும்பு மேயர் பிரசன்ன குணவர்தனவிற்கும், பிரதி மேயர் அஸாத் சாலிக்கும் உத்தரவிட்டுள்ளார்.

கொழும்பு கொள்ளுப்பிட்டியிலுள்ள பள்ளிவாசலுக்கு முன்பாகச் சட்டவிரோதமான முறையில் புத்தர்சிலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து முஸ்லிம் அமைப்பொன்று பிரதமரிடம் முறைப்பாடு செய்துள்ளது. இந்த அமைப்பு அண்மையில் பிரதமரை அலரிமாளிகையில் சந்தித்து இந்த முறைப்பாட்டைத் தெரிவித்தது. அதனையடுத்தே பிரதமர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஓட்டோ சாரதி ஒருவராலேயே கொள்ளுப்பிட்டி பள்ளிவாசலுக்கு முன்பாக இந்த புத்தர்சிலை அமைக்கப்பட்டதாக முஸ்லிம் சமாதான சபையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் கூறுகையில்:-

ஆரம்பத்தில் இந்தச் சிலை சிறிதாக ஒற்றைத்தூணில் அமைக்கப்பட்டது. பின்பு கொங்கிரீட் தூண்கொண்டு பெரிதாக அமைக்கப்பட்டுள்ளது. இப்போது அந்த இடத்தில் ஒலிபெருக்கிகளைப் பொருத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக எம்மால் அறிய முடிகிறது.

இந்தச் சிலை நிர்மாணிப்புப் பணியை நிறுத்துமாறு கொள்ளுப்பிட்டி பொலீஸார் உத்தரவிட்டும்கூட அது தொடர்ந்துகொண்டே போகின்றது. இந்தச் சிலை நிர்மாணிப்புப் பணியில் ஓட்டோ சாரதிகள் சங்கம் ஈடுபட்டிருப்பதாகவும் சில சக்திகள் இந்தச் சங்கத்திற்கு ஆதரவு வழங்குவதாகவும் முஸ்லிம்கள் நம்புகின்றனர் என அவர் கூறினார்.

இதேவேளை, கொழும்பு நகரில் இரண்டாயிரத்து ஐந்நூறு புத்தர்சிலைகளைத் தாம் அமைக்கவுள்ளார்கள் என ஜாதிக ஹெல உறுமயவினர் ஏற்கனவே தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதன்பிரகாரம் அநேகமான சிலைகள் கொழும்பிலுள்ள முக்கிய சந்திகளிலும், பாடசாலைகள் மற்றும் பள்ளிவாசல்கள் போன்ற இடங்களுக்கு முன்பாகவும் அமைக்கப்பட்டுள்ளன. கனத்தையில் இரண்டு சிலைகளும், விஜேராம வீதிச் சந்தியில் ஒரு சிலையும் அமைக்கப்பட்டுள்ளன.

கொழும்பில் சமயரீதியான பிரச்சினைகளை உருவாக்க சில சக்திகள் முயற்சிசெய்து வருவதாக கொழும்பு வாழ் முஸ்லிம்கள் தெரிவித்துள்ளனர். இதுதொடர்பாக அதிக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனக் கொழும்பு மாநகரசபையும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, திருகோணமலையில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட புத்தர் சிலை தமிழர் அமைப்புகள் போராட்டம் நடத்தியும் இதுவரை அகற்றப்படவில்லை என்பது தெரிந்ததே. (க)

# உணவு முத்திரை வழங்கும் திட்டம் மேலும் நீடிப்பு

கொழும்பு, ஒக்.5

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உணவு முத்திரை வழங்கும் நடவடிக்கையை இவ்வாண்டு டிசெம்பர் 31ஆம் திகதிவரை நீடிப்பது என அரசு தீர்மானித்துள்ளது.

இதன் மூலம் 7 லட்சத்து 50 ஆயிரம் குடும்பங்கள் தொடர்ந்து நன்மையடையவுள்ளன என புனர்நிர்மாண புனரமைப்பு நல்லிணக்க அமைச்சின் செயலாளர் எம்.எஸ்.ஜெயசிங்க தெரிவித்தார். மேற்படி உணவு முத்திரைகளை இம்மாதத்துடன் நிறுத்துவது என முன்னர் முடிவுசெய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(க)

# வடக்கு - கிழக்கு நிலை தொடர்பாக என்றும் தமிழ், முஸ்லிம் மக்களே தீர்மானிக்கவேண்டும்

## சிங்களத் தலைமை தீர்மானிக்கக்கூடாது என்கிறது கிண்ணியா உலமாசபை

கொழும்பு, ஒக்.5

வடக்கு - கிழக்கின் நிலை பற்றித் தமிழ் முஸ்லிம் மக்களே தீர்மானிக்கவேண்டும். எந்தச் சிங்களத் தலைமைப்பீடமும் தன்னிச்சையாக எமது தலைவிதியைத் தீர்மானிக்க இடமளிக்கக்கூடாது.

- இவ்வாறு சிறுபான்மை மக்களிடம் கோரிக்கை முன்வைத்து கிண்ணியா உலமா சபை அறிக்கையொன்றை விடுத்துள்ளது.

அந்த அறிக்கை மேலும் தெரிவிப்பதாவது:-

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல், எமது எதிர்கால வாழ்வை நிர்ணயிக்கும் ஒரு பரீட்சைக்களமாக அமையப்போகின்றது. இந்தத் தேர்தல் மூலம் நாம் எமது மொழி, மத மற்றும் எதிர்கால விதியை நிர்ணயிக்கப் போகின்றோம். அதற்காக தேர்தல் பகிஷ்கரிப்பையோ அல்லது ஆயுதப் போராட்டத்தையோ நாம் செய்வது தீர்வாகாது மாறாகக் கடந்த காலங்களிலும் நிகழ்காலங்களிலும் நிகழ்ந்துள்ள, நிகழ்ந்துகொண்டிருக்கின்ற கசப்பான நிகழ்வுகளை முன்நிறுத்தி ஒன்றுபட்டு முடிவெடுப்போம். ஏனெனில், சிங்களப் பகுதிகளில் வாழ்ந்த தமிழ் மக்களின் கடைகளும் , சொத்துக்களும் சூறையாடப்பட்டதுடன் சுட்டெரிக்கவும்பட்டன. பேரினவாத சக்திகளின் மிருகத்தனமான செயல்களே தமிழ் ஆயுதப் போராட்டத்திற்கும் வழிசமைத்தது.

இலங்கையின் பெரும்பான்மையினரான சிங்களவர்களின் பகுதிகளில் வாழும் தமிழ் , முஸ்லிம் மக்கள் பேரினவாதிகளின் கெடுபிடிகளுக்குள்ளாகியே வந்துள்ளனர். கடந்த தேர்தல் காலமொன்றில் -பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஜெனரல் ரத்வத்த காலத்தில் - படுகொலை செய்யப்பட்ட முஸ்லிம் மக்களின் வழக்கு இன்னும் நீதிமன்றில் தூங்கிக்கொண்டிருக்கிறது.

சமீபத்தில் பிரதியமைச்சர் மேர்வின் சில்வா தனியார் ஊடகங்களுக்கும், இந்திய வம்சாவளியினருக்கும் எதிராக விடுத்த எச்சரிக்கையும், இழிவான வார்த்தைகளும் எம்மைவிட்டு மறைய முடியாதவை. இதற்கெதிராகக் கொழும்பிலும், கண்டியிலும் மேர்வின் சில்வாவிற்கு எதிராக ஊடக வியலாளர்களும், தமிழ், முஸ்லிம் மக்களும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். ஆர்ப்பாட்டக்காரர்கள் மேர்வின் சில்வாவிற்கு எதிராக அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக்கோரி மகஜர் ஒன்றைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளித்திருந்தனர். எனினும், இதுவரை பிரதமர் எதுவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

'ஹெல்பிங் அம்பாந்தோட்டை' வழக்கினை விசாரணைக்குக்கூட விடுவதற்குப் பிரதமர் விரும்பவில்லை. பொதுக்கட்டமைப்பை ரத்துச்செய்து சமஷ்டி முறைக்கு சாவுமணியடித்த தென்பகுதி இனவாதக் கட்சிகளான ஜே.வி.பியினதும் ஹெல உறுமயவினதும் தோழன் தான் என மஹிந்த ராஜபக்ஷ இன்னும் ஏன் சிந்திக்கவேண்டும் - இவ்வாறு கிண்ணியா உலமாசபை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (க)

# எம்.பிக்களின் வாகன இறக்குமதி அனுமதியால் அரசுக்கு சுமார் 258 கோடி ரூபா இழப்பு

கொழும்பு,ஒக.5

நாடாளுமன்ற உறுப்பினர்கள் 225 பேருக்கும் 35 லட்சம் ரூபாவுக்கு மேற்படாத பெறுமதிகொண்ட வாகனங்களைத் தீர்வை வரியற்று இறக்குமதிசெய்ய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதனால், அரசுக்கு சுமார் 258 கோடியே 49 லட்சத்து 68 ஆயிரம் ரூபாவரை இழப்பு ஏற்படுமெனக் கூறப்படுகிறது.

சுமார் 35 லட்சம் ரூபா பெறுமதியான டீசல் மூலம் இயங்கும் ஜீப் வாகனமொன்றை இலங்கைக்கு இறக்குமதி செய்யும்போது அவற்றின் பெறுமதியின் 325 சதவீதம் இறக்குமதித் தீர்வை வரி அறவிடப்படுகிறது. இதன்படி ஜீப்ரக வாகனமொன்றுக்கு அறவிடப்படும் இறக்குமதி வரி ஒரு கோடியே 14 லட்சத்து 88 ஆயிரத்து 750 ரூபாவாகும். இந்த வருமானத்தை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான தீர்வையற்ற வாகன இறக்குமதி அனுமதியால் அரசு இழந்துள்ளது.

அதற்கமைய இறக்குமதி செய்யப்படும் அத்தகைய வாகனமொன்றின் உள்நாட்டுச் சந்தைப் பெறுமதி தீர்வை வரி அடங்கலாக ரூபா ஒரு கோடியே 49 லட்சத்து 88 ஆயிரத்து 750 ரூபாவாகும்.

இதேவேளை, கடந்த ஐந்து ஆண்டுகளுக்குள் வாகன இறக்குமதிக்கான அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும்கூட புதிய அனுமதிப்பத்திரங்களைப் பெற வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

அரசு மூலமாக வாகனங்கள் இறக்குமதி செய்யப்படும் வகையிலேயே இதுவரை நாடாளுமன்றஉறுப்பினர்களுக்கு வாகன இறக்குமதி அனுமதி வழங்கப்பட்டு வந்தது. ஆனால், இம்முறை நாடாளுமன்ற உறுப்பினர்களே வாகனங்களை இறக்குமதிசெய்து கொள்வதற்கு வகைசெய்யும் விதமான அனுமதிப்பத்திரங்கள் கடந்த வாரம் முதல் நாடாளுமன்றத்தால் வழங்கப்பட்டுவருகின்றன. (ஒ-206)

# இந்தியாவில் உள்ளது போன்ற கிராம ராஜ்ஜியங்கள் எமது நாட்டிலும்

## முன்னாள் ஊடக அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.5

இந்தியாவில் உள்ளவற்றைப் போன்று இலங்கையிலும் கிராம ராஜ்ஜியங்கள் உருவாக்கப்படும். அதன்மூலம் நாட்டின் அபிவிருத்தியிலும் நிர்வாகத்திலும் மக்களின் நேரடிப் பங்களிப்பு உள்வாங்கப்படும். உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகமுறை மீளாய்வு செய்யப்பட்டு கூடுதலான நிறைவேற்று அதிகாரங்கள் அவற்றுக்கு வழங்கப்படும்.

- இவ்வாறு அடுக்கடுக்காக வாக்குறுதியளிக்கிறார் முன்னாள் ஊடக அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார்.

நேற்றுமுன்தினம் காலை எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் இதனைக் கூறினார்.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக ஐ.தே.க. வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பாக விளக்கம் அளித்த பாக்கீர் மாக்கார், கட்சி முன்வைத்துள்ள கிராம ராஜ்ஜியத் திட்டம் குறித்து விவரித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:-

ஒரு நாட்டின் அபிவிருத்தியை மதிப்பிட வேண்டுமானால் அங்குள்ள கிராமங்களுக்குப் போய்ப்பார்த்து அதனைத் தெரிந்துகொள்ளவேண்டும் என மகாத்மா காந்தி கூறியுள்ளார். இதன் அடிப்படையிலேயே முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாச கிராம எழுச்சித் திட்டத்தை ஆரம்பித்தார்.

இப்பொழுது ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க அதற்குப் புத்துயிர் ஊட்டியுள்ளார். இத்திட்டம் கொழும்பில் குளிர்சாதன அறைக்குள் இருந்து தயாரிக்கப்பட்டதல்ல. ரணில் விக்கிரமசிங்க கடந்த ஒன்றரை வருடங்களாகக் கிராமம் கிராமமாகச் சென்று அம்மக்களின் தேவை அறிந்து அதனைத் தயாரித்துள்ளார்.

இதன்படி கிராமிய, பிரதேச, மாவட்ட, மாகாண அபிவிருத்தி சபைகள் உருவாக்கப்படும். அவற்றிற்கான தலைவர்களை அப்பிரதேச மக்களே தெரிவுசெய்வர். அவ்வப் பிரதேசங்களில் காணப்படும் மூலப்பொருள்களைப் பயன்படுத்தி அங்கு சுயதொழில் முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கப்படும். தொழிற்பேட்டைகளும் உருவாக்கப்படும். இதன்மூலம் கிராமிய மட்டத்தில் பெருமளவிலான தொழில் வாய்ப்புகளை உருவாக்கமுடியும். இதனால், பின்தங்கிய கிராமத்தவர்கள் மத்தியில் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தமுடியும் எனவும் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் கூறினார். கிராமிய அபிவிருத்திச் சங்கங்களுக்கான நிதி நாடாளுமன்றத்தின் ஊடாக வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் நேரடியாக ஒதுக்கப்படும்.

மத்திய ஆட்சியில் மாற்றம் ஏற்பட்டாலும் கிராமிய அபிவிருத்தித் திட்டங்களைத் தடையின்றி நடைமுறைப்படுத்த முடியும். கல்வி, சுகாதாரம், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் தொடர்பான அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் அவ்வப் பிரதேச மக்களிடையே ஒப்படைக்கப்படுவதால் ஊழல் மோசடிகளையும் தவிர்க்க முடியும் - இவ்வாறு இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்தார். (க)

# சுவீடன் நாட்டு நிதி உதவியுடன் குறுகியகால அபிவிருத்தித் திட்டம்

சுவீடன் நாட்டு சர்வதேச அபிவிருத்தி முகவர் நிறுவனத்தின் நிதி உதவியுடன் இலங்கையில் சிறு மற்றும் குறுகிய கால அபிவிருத்தித் திட்டத்தை சர்வதேச அமைப்பு ஆரம்பித்துள்ளது.

இத்திட்டம் வறுமை ஒழிப்பைப் பிரதான நோக்கமாகக் கொண்டிருக்கும். உயர் தொழில்நுட்பம் மற்றும் தேசிய திட்டமிடல் அபிவிருத்தி அமைச்சின் ஒத்துழைப்போடு நடைமுறைப்படுத்தப்படவுள்ள இத்திட்டத்தின் மூலம் சிறு மற்றும் குறுகிய கால அபிவிருத்தித் திட்டங்களுக்கான சேவைகள் மேம்படுத்தப்படும்.

குறிப்பாக, இளைஞர் மற்றும் யுவதிகளின் வாழ்க்கைத் தரம் மேம்படுத்தப்படும் வகையில் உயர் தொழில் வாய்ப்புகளைப் பெற வகைசெய்வதும் இத்திட்டத்தின் மற்றொரு நோக்கமாக அமையவுள்ளது.

முதற்கட்டமாக அனுராதபுரம், பொலனறுவை, புத்தளம், குருநாகல் ஆகிய 4 மாவட்டங்களில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இந்த மாவட்டங்களிலுள்ள அரச, அரசசார்பற்ற மற்றும் தனியார் துறைகளுக்கு இச்செயற்றிட்டம் தொடர்பாக விளக்கமளிக்கும் பயிற்சிப் பட்டறைகள் ஏற்கனவே இடம்பெற்றுள்ளன. மாவட்ட மட்டத்தில் உள்ள சகல துறைகளும் உள்ளீர்க்கப்படும் விதமாகத் திட்டமிடற் பிரிவுகளும் நிறுவப்பட்டுள்ளன. குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களின் அரச அதிபர்கள் இத்திட்டமிடற் பிரிவுகளின் தலைவர்களாகச் செயற்படவுள்ளனர் . (ஒ-206)

அகவிழி
ஆசிரியத்துவ நோக்கு...
வருட சந்தா ரூ300 மட்டுமே
தொடர்புகளுக்கு
இல 3 டொறிங்ரன் அவனியூ
கொழும்பு - 07
தொலைபேசி - 011 2506272
புதிய கற்றல் சாதனங்களை விளங்கிக் கொள்ள...
வாசியுங்கள் அகவிழி

# மலையக மக்கள் மீதான தாக்குதலுக்கு கண்டனம்

மலையக மக்களின் நியாயமான கோரிக்கைகளையும், போராட்டங்களையும் நசுக்குவதற்கு இரண்டு பேரினவாதக் கட்சிகளும் காலத்திற்குக் காலம் குண்டர்களையும், காடையர்களையும் பயன்படுத்தி வந்துள்ளன. அவ்வாறான ஒரு செயலே கடந்த ஞாயிறன்றும் இடம்பெற்றுள்ளது. அன்றையதினம் தலவாக்கலையில் இடம்பெற்ற மேல் கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான மக் கள் இயக்கம் நடத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின்மீது குண்டர்களை ஏவி குழப்பம் விளைவிக்கப்பட்டுள்ளது. இதனை புதிய - ஜனநாயகக்கட்சி மிக வன்மையாகக் கண்டிக்கின்றது.

- இவ்வாறு புதிய ஜனநாயகக்கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இத்தகைய அராஜக நடவடிக்கை எதிர்காலத்தில் மேன்மேலும் மலையக மக்களின் கோரிக்கைகளுக்கு எதிராக ஏவிவிடப்படக் கூடிய அபாயத்தை எமது கட்சி தூரநோக்குடன் சுட்டிக்காட்டுகிறது. இதற்கு மலையக மக்கள் எவ்வகையிலும் இடமளிக்கக்கூடாது என்பதே எமது வேண்டுகோளாகும்.

இரண்டு பேரினவாதக் கட்சிகளின் ஜனாதிபதி வேட்பாளர்களை ஆதரிப்பதற்கு மலையகத்தின் இரண்டு பிரதான அரசியல் தொழிற் சங்கத் தலைமைகள் போட்டி போட்டுக்கொண்டு முன்னிற்கின்றன. மலையகத்தின் பிரதான பிரதேசமான தலவாக்கலையில் அழிவுகளைத் தரும் வகையில் அமைய இருக்கும் மேல் கொத்மலைத் திட்டத்தை எதிர்ப்பதற்குப் பதிலாகத் தமது புறமுதுகையே காட்டிவருகின்றன.

ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற எதிர்ப்புப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து அறிக்கை விட்ட ம.ம.முன்னணியின் தலைவரோ அன்றி உறுப்பினர்களோ ஆர்ப்பாட்டத்தில் பங்கு கொள்ளவில்லை. அதேவேளை, எமது கட்சிப் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல், மலையகச் செயலாளர் சி. பன்னீர்செல்வம் ஆகியோர் தலைமையில் பெரும் தொகையில் பங்குகொண்டு மேல்கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான இயக்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்கியது. அதேபோன்று இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் ஜோசப், புகையிரத ஊழியர் ஒன்றியத் தலைவர் சரத் பெர்னாண்டோ, மீனவர் சங்க சமாசத் தலைவர் எஸ்.விஜயரட்ணம், சமூக அக்கறையாளர் செல்வி மேகலாசண்முகம், பிதா கீதபொன்கலன் ஆகியோரும் தொழிலாளர்களும், இளைஞர்களும் எனப் பலர் கலந்துகொண்டு தமது எதிர்ப்பைத் தெரிவித்தன- என்றுள்ளது. (ஒ)

## கருத்தரங்கு

சமூக செயற்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில், சுகாதாரம் பேணுதல், சுற்றுச் சுழல் பாதுப்பைப் பேணுதல், இவற்றில் பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஆகியவை தொடர்பாக தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் கருத்தரங்குகள் நடை பெற்றுவருகின்றன. வரணிப் பிரதேசத்தில் மாசேரி வரணி, கிராம அலுவலர் பிரிவுகளில் அண்மையில் இக்கருத்தரங்குகள் இடம்பெற்றன. இதில் சமூக செயற்பாட்டு மையத்திட்ட அலுவலர் கமலதாஸ், லயன் டாக்டர் அருளானந்தம் ஆகியோர் கருத்துரைகளை நிகழ்த்தினர். நிகழ்வில், மாதர் சங்க உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஒ-170-204)


**வெளிவாரிப் பட்டப்படிப்பு அலகு**

தம்பசிட்டி, பருத்தித்துறை

மேற்படி நிறுவனத்தில் B.A./B. Com. Part I வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

காலம்: 08.10.2005 (சனி)

(சி-45409) (21.19.15)

**ACS**

**விசேட பிரிவுகள் ஆரம்பம்**

Diploma in MS Office
Diploma in Desktop Puplishing
Diploma in internet Techonology
Diploma in Hardware Engineering

A/L மாணவர்களுக்கான
GIT (General Information Technology)

| | | |
|---|---|---|
| Batch I | 28.09.2005 | 10 a.m. |
| Batch II | 05.10.2005 | 9 a.m. |
| Batch III | 08.10.2005 | 4 p.m. |

KOPAY JUNCTION, KOPAY.

**தாதிப் பயிற்சி முடித்தோருக்கு**
**U.K.இல் வேலைவாய்ப்பு**

U.K.இல் உள்ள பிரபல்யமான Nursing Home இற்கு அரச சான்றிதழ் பெற்ற தாதிப் பயிற்சி முடித்தவர்களுக்கு வேலை உத்தரவாதச் சான்றிதழுடன் வேலைவாய்ப்பு.

மேலதிக தொடர்பிற்கு: T.P.:0776180082
gajan@hot mail.com
k_thushanthan@gmail.Com

V. அண்ணாமலை
"ஐங்கரன் இல்லம்"
சூராவத்தை, சுன்னாகம்.

(40362) (39-21-11-45)

**B.Sc. (வெளிவாரி)**
**காமராஜர் பல்கலைக்கழகம்**

- மேற்குறிப்பிட்ட பட்டநெறிக்கு A/L இல் கணிதப்பிரிவில் Maths ஒரு பாடம் சித்தி எய்தியவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- இக்கற்கை நெறிக்குரிய பதிவுகளும் பரீட்சை விண்ணப்பங்களும் எமது நிறுவனத்தினூடாக மேற்கொள்ளப்படும்.
- இதற்குரிய விரிவுரைகள் ஆரம்பம்: 29.10.2005 (9மணி) அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

குறிப்பு:
இக்கற்கை நெறிக்குரிய பரீட்சைகள் யாவும் யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.

யாழ்.இணைப்பாளர்
S.அருள்நங்கை (40771)

புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். (21.19)




# எமது மக்களுக்கு இழைத்த மன்னிக்க முடியாத குற்றம்

*இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் இந்திய இராணுவம் தமிழர் தாயகத்தில் நிலைகொண்டிருந்தவேளையில் 1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மூன்றாம் திகதி அதிகாலை 4.30 மணியளவில் பருத்தித்துறைக் கடற்பரப்பில் இலங்கை இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட விடுதலைப் புலிகளை கொழும்புக்கு கொண்டுசெல்ல முயற்சிக்கப்பட்டது. இதனை ஆட்சேபித்து திருமலை மாவட்டத் தளபதி லெப்டினன்ட் கேணல் புலேந்திரன், யாழ்.மாவட்டத் தளபதி லெப்ரினன் கேணல் குமரப்பா, மேஜர் அப்துல்லா, கப்டன்கள் மிரேஸ், பழனி, நளன், கரன், ரகு, லெப்டினன்கள் அன்பழகன், தவக்குமார், இரண்டாவது லெப்டினன்கள் ஆனந்தகுமார், றெஜினோல்ட் ஆகியோர் 05.10.1987 இல் சயனைட் உட்கொண்டு வீரச்சாவைத் தழுவினர். அவர்களின் 18 ஆவது நினைவு தினம் இன்றாகும். பன்னிருவரின் வீர மரணம் குறித்தும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் 07.10.1987 அன்றுவெளியிட்ட அறிக்கையை இங்கு தருகிறோம்.*

எமது முக்கிய தளபதிகளும், பேராளிகளும் அநியாயமாக இறந்துபோக அனுமதிக்கப்பட்டதால் இந்திய அரசு மீது எமக்கிருந்த நம்பிக்கை இழந்துபோய்விட்டது. சமாதானச் சூழலில் போர் நிறுத்த காலத்தில், அதுவும் இந்திய அமைதிப்படையினரின் கண்காணிப்பில், பொது மன்னிப்பு வழங்கப்பட்ட எமது போராளிகள் தம்மைத் தாமே அழித்துக்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டனர். ஈடிணை செய்யமுடியாத இந்தப் பேரிழப்புக்கு இந்தியாவே பொறுப்பேற்க வேண்டும்.

எமது இயக்கத்தின் திருக்கோணமலை மாவட்டத் தளபதி புலேந்திரன், யாழ்ப்பாண மாவட்டத் தளபதி குமரப்பா மற்றும் எமது பத்து சிரேஷ்ட உறுப்பினர்களும் நஞ்சருந்தி வீரத்தியாகம் செய்த இந்த மாபெரும் சோக நிகழ்ச்சியானது இன்று எமது மக்களை அதிர்ச்சியிலும் ஆழ்ந்த துயரத்திலும் ஆழ்த்தியுள்ளது. எமது இயக்கத் தலைவர்களை அழித்து விடுவதற்கு சிங்கள இனவாத அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு இந்தியாவும் துணைபோகிறதா என்று கூட எமது மக்கள் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளது.

எமது இயக்கப் பேராளிகளினதும் எமது மக்களினதும் பாதுகாப்பிற்கு இந்திய அரசு உத்தரவாதம் அளித்த காரணத்தால் நாம் எமது ஆயுதங்களை ஒப்படைக்க முடிவெடுத்தோம். ஆயுதங்களைக் கையளிக்கும்போது எமது பாதுகாப்பின் பொறுப்பையும் இந்தியாவிடம் கையளித்தோம். இதனையடுத்துச் சகல போராளிகளுக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டதாக இலங்கை அரசு அறிவித்தது. அடுத்ததாக விடுதலைப் புலிகளின் பொறுப்பில் நிர்வாக ஆட்சியதிகாரம் கையளிக்கப்படுமெனவும் இந்திய அரசு உறுதியளித்து வந்தது. புலிகளைப் பெரும்பான்மையாகக் கொண்ட நிர்வாக சபையையும் ஜனாதிபதி ஜெயவர்த்தன அறிவித்தார். இவ்வகையில் விடுதலைப் புலிகள் தமிழீழ மக்களின் உண்மையான பிரதிநிதிகள் என்பதை இந்திய - இலங்கை அரசுகள் ஒப்புக்கொண்டுள்ளன.

இந்த சூழ்நிலையில்தான் எமது தளபதிகளும் போராளிகளும் எமது கடற் பிராந்தியத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார்கள், கைது செய்யப்பட்டவர்களை இந்திய சமாதானப்படை பாதுகாப்பிற்காக பலாலி முகாமிற்கு அழைத்து வந்தது. சிங்கள இராணுவம் ஒருபுறமும் இந்திய சமாதானப் படைகள் மறுபுறமுமாகச் சுற்றிவளைத்த சூழ்நிலையில் எமது போராளிகள் தடுப்பில் வைக்கப்பட்டனர். 'அவர்களுக்கு எதுவித ஆபத்தும் ஏற்படாது. உடன் விடுதலை செய்யப்படுவார்கள். நீங்கள் பொறுமையாக இருக்கவேண்டும்.' என்றெல்லாம் இந்திய சமாதானப் படைத் தளபதிகள் எமக்கு உறுதிமொழி தந்து கொண்டிருந்தார்கள்.

இந்திய சமாதானப் படைகளின் பாதுகாப்பில் இருக்கும்வரை எமது தோழர்களுக்கு எவ்வித தீங்கும் நேராது என நம்பி நாம் காத்திருந்தோம். ஆனால், 05.10.1987 அன்று காலை 7 மணியளவில் நிலைமை திடீரென மாறியது. கைதானவர்கள் கொழும்புக்கு அனுப்பப்பட இருக்கிறார்கள். எம்மால் தடுக்கமுடியாது என இந்தியசமாதானப் படை அறிவித்தது. அதே சமயம் இவர்களை விடுவிப்பது சம்பந்தமாக கொழும்பில் பேச்சுகள் நடைபெறுவதாகவும் சொன்னார்கள். முதலில் தென் பிராந்திய இந்தியத் தளபதி திபேந்தர் சிங் பின்பு இந்தியத் தூதுவர் டிக்ஸிற் ஜனாதிபதியுடன் பேசுவதாகவும் விரைவில் சுமுகமான முடிவு வருமென்றும் நம்பிக்கை அளித்தார்கள். 7 மணிக்கு கொடுக்கப்பட்ட காலக்கெடு பின்பு 10 மணியாகி பிற்பகல் 2 மணியாகி இறுதியில் மாலை 5 மணியாக நிச்சயிக்கப்பட்டது.

டிக்ஸிற் - ஜெயவர்த்தன பேச்சு தோல்வி



யடைந்துவிட்டதாக மாலை 4.45 மணியளவில் எமக்கு அறிவிக்கப்பட்டது. அடுத்துஎன்ன நடந்ததென்பது மக்கள் அறிவார்கள் ' நாங்கள் முயற்சித்தோம். ஜெயவர்த்தன விட்டுக்கொடுக்கவில்லை' என்று ஒரு நொண்டிச் சாட்டைச் சொல்கிறது இந்திய அரசு.

எமது போராளிகளை விடுவிக்க வேண்டுமென இந்திய அரசு ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிடம் உறுதியாகச் சொல்லியிருந்தால் இந்த அநியாயமான சாவுகள் நிகழ்ந்தே இருக்காது. இந்த வகையில் எமது போராளிகளுக்கும் மக்களுக்கும் பாதுகாப்பளிக்கும் பொறுப்பிலிருந்து இந்தியா தவறிவிட்டது. எமக்குப் பாதுகாப்பளிக்கும் அதிகாரமும், பொறுப்பும் தார்மீகக் கடமைப்பாடும் இந்தியாவுக்கு இல்லையென்றால் இந்திய சமாதானப் படைகள் இங்கிருப்பதில் அர்த்தமென்ன? ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கும் சிங்கள இராணுவத்திற்கும், சமூக விரோத இயக்கங்களுக்கும் பாதுகாப்பளிப்பது விடுதலைப் புலிகளை ஒழித்துக்கட்டத் துணைபோவது தான் இந்திய சமாதானப் படைகளின் நோக்கமா? எமது தலைவர்களுக்கும் போராளிகளுக்கும் பாதுகாப்பு அளிப்பதற்குப் பதில் அவர்களைச் சிங்கள இராணுவத்திடம் ஒப்படைக்கத் துணைபோனது இந்திய சமாதானப் படையினர் எமது மக்களுக்கு இழைத்த மன்னிக்க முடியாத குற்றம். இந்தச் சூழ்நிலையில்தான் நாம் இனி யுத்த நிறுத்தத்தைப் பேணுவதில்லை என முடிவெடுத்தோம். ✱

*(நன்றி:எனது மக்களின் விடுதலைக்காக...)*

---


# சிறப்பான வாழ்வுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கம் ஆசிரியரே!

## இன்று சர்வதேச ஆசிரியர் தினம்

ஆசிரியர் என்னும் சொல் 'குற்றங்களை நீக்குபவர்' என்று பொருள் குறிக்கும், சிறுவர் முதல் முதியோர் வரையுள்ள அனைவர் மனதிலுமுள்ள குற்றங்களைக் கல்வி கேள்விகளால் போக்குபவர். ஆசிரியர் எல்லோருடைய மன மாசையும் போக்குவதன் வாயிலாக மக்களின் அறிவையும் ஒழுக்கத்தையும் பண்பாட்டையும் நாகரிகத்தையும் நல்லமுறையில் வளர்ப்பவராவர்.

கல்வி என்னும் சொல் கற்றலாகிய தொழிலையும் கற்கப்படுவனவாகிய நூல்களையும், கற்றலால் உண்டாகும் அறிவையும் குறிக்கும், கற்றலின் மூலம் மனதை நன்நெறியில் நிற்கச்செய்து, நயத்தக்க நாகரிகம் பெறச்செய்து, உலகியலையுணர்ந்து, வளம்கண்டு நாகரிக வாழ்வில் நலமிகு வாழமுடியும். கல்வியே ஒரு நாட்டின் நாகரித்துக்கு- பண்பாட்டிற்கு - சமூகநலத்திற்கு -தொழில்வளப் பெருக்கத்திற்கு - முன்னேற்றத்திற்கு மூலகாரணமாய் அமைகிறது.

இத்தகைய கல்வியை வழங்கும் ஆசிரி



யரை பழைய காலத்தில் 'கணியர்' என்றழைத்தனர். இவர் இல்லாவிடில் மக்கள் மனம் தூய்மை பெற முடியாது; அறநெறியில் செல்லாது; எனவே தான் 'கணக்காயர் இல்லாத ஊர் பாழ்' என்றனர். புத்தகம் உள்ள வீடு புதிய அகமாக விளங்குவது போன்று ஆசிரியர் உள்ள ஊர் அறிவின் களமாக விளங்குகின்றது. அறிஞர், புலவர், சான்றோர், வித்தகர் எனப் பலபெயர்களால் ஆசிரியர் அழைக்கப்பட்டார்.

இன்றைய ஆசிரியர்களுக்கும் பண்டைய ஆசிரியர்களுக்கும் பல வகையில் வேறுபாடு உண்டு. முன்னர் கல்வி பயின்றதற்குரிய சான்றிதழைக் கொண்டு ஆசிரியரானவர்கள் எவருமிலர். தம் புலமை நலத்தாலேயே ஆசிரியராகப் பணிபுரிந்துள்ளனர். புலமையுடன் நல்ல குடிப்பிறப்பும், ஒழுக்கமும், கற்பிக்குந் திறமையும், பிறவற்றையும் நோக்கியே பழைய காலத்தில் ஆசிரியர் பணிக்கமர்த்தப்பட்டனர். இன்று ஆசிரியர் பணிக்குச் சான்றிதழ் ஒன்றே போதுமானதாகக் கொள்ளப்படுகின்றது.

கல்வியியலாளர் ஆசிரியர்களை பயனுள்ள செய்திகளைத் திரட்டித்தரும் ஆசிரியர் வாழ்க்கையில் சிறப்பான முறையில் முன்னேற வழிகாட்டும் ஆசிரியர் சிறந்த குறிக்கோள்களை அடைவதற்கான ஆர்வத்தினை மாணவர்களின் உள்ளத்தில் வித்திடும் ஆசிரியர் என மூன்று வகையாகப் பகுத்துள்ளனர்.

ஆசிரியத் தொழில் புனிதமான தொழில் - புண்ணியத் தொழில் - எழுத்தை அறிவிக்கும் தொழில். இதனால்தான் 'எழுத்தை அறிவித்தவன் இறைவன் ஆவான்' என்னும் முதுமொழி தோன்றியது. இத்தகைய தொழிலைச் செய்பவரிடத்தில் குற்றங்குறைகள் இருத்தல் கூடாது; வெறுக்கத்தக்க இழி குணங்கள் இருக்கக்கூடாது; தூய உள்ளம் அன்பு, இன்சொல், இரக்கம், நல்லொழுக்கம் என்பன இருத்தல் வேண்டும். உடல் உளத்தூய்மை நிலைதவறா மனம், நல்லறிவு, சொல்வன்மை, கற்போர் விரும்பும் தன்மை என்பன இருத்தல் அவசியம்.

ஆசிரியர் தாம் மிகவும் வருந்திக் கற்று அறிந்த கல்வியை மற்றவர்களுக்கு எளிதாகவும் விரிவாகவும் இனிதாகவும் எடுத்துக் கூறிக் கற்பிக்கும் ஆற்றல் தேவை. ஒரு பிள்ளையினுடைய வாழ்வின் முழுமைக்குப் பொறுப்பாக உள்ளவர் பாடசாலையாசிரியர். ஏனெனில், பிள்ளையினுடைய வாழ்வின் பயிற்சியே பாடசாலையில்தான் நடைபெறுகின்றது. அந்தப் பயிற்சியை நேரடியாக அளிக்காவிட்டாலும், அறிவுரைகள் மூலமாகவும் சிலவகையான காரியங்கள் மூலமாகவும் ஆசிரியர் மாணவருக்கு அளிக்கின்றார். வாழ்விற்குத் தேவையாகிய நட்புறவுப் பயிற்சி, கடமையுணர்வுப் பயிற்சி, பல்வேறு பழக்கவழக்கப் பயிற்சி ஆகியவை யாவும் ஆசிரியராலேயே அளிக்கப்படுகின்றன.

இதற்கமைய ஆசிரியர் குழந்தைகளின் இயல்புகள்- சூழ்நிலைகள்- தேவைகள் ஆகியவற்றை நன்கறிதல் வேண்டும். இவ் அறிவினை கல்வியுளவியல் வழங்குகிறது. குழந்தைகளது, மாணவர்களது இயற்கையான கவர்ச்சிகள், நாட்டங்கள், திறன்கள் ஆகியவற்றையறிந்து தம்மீது ஆசிரியர் கவனம் எடுக்கிறார் -தமது எதிர்காலத்தில் அக்கறை கொண்டுள்ளார் என்னும் உணர்வு மாணவரிடத்தே ஏற்படும் வகையில் செயற்பட வேண்டியது அவசியம். ஆசிரியர் மாணவருடன் சேர்ந்து தாமும் அவருள் ஒருவர் என்ற மனப்பான்மையை வளர்த்தல் வேண்டும்.

கற்பிக்கும் பாடத்தில் சிறந்த அறிவைப் பெற்றிருக்க வேண்டியது ஆசிரியரிடத்துக் காணப்படவேண்டிய மற்றோர் பண்பு, கற்பிக்கும் பாடத்துடன் தொடர்புடைய மற்றைய பாடங்களிலும் சிறப்பான ஆழ்ந்த அறிவு தேவை. இவ்வறிவே பல பாடங்களையும் இணைத்துக் கற்பிக்க உதவும். இதற்கமைய ஆசிரியர் எப்பொழுதும் கற்றுக்கொண்டிருப்பவராதல் அவசியம். கற்காதவன் கற்பிக்கக் கூடாது. பாட அறிவிலும் பொது அறிவிலும் மேம்பாடு உடையவரையே மாணவர் விரும்புவர். அன்றாடம் தம் பாடபோதனைக்கான ஆயத்தங்களைத் திட்டமிட்டு வகுப்பறையினுள் நுழைதல் வேண்டும். புதிய கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தி மாணவர் அறிவுப் பசியைத் தீர்த்தல் அவசியம்.

ஆசிரியரானவர் தனது மாணவருக்கு முன்மாதிரியாக - வழிகாட்டுபவராக விளங்குதல் வேண்டும். மாணவர் விரும்பிப் பின்பற்றத்தக்க நல்ல பழக்கங்கள் நிரந்தரமாக உடையவராதல் வேண்டும். உறுதியான மனவெழுச்சி, பிறர் நலன் பேணல், பொறுமை, அடக்கம், நேர்மை, சுறுசுறுப்பு போன்ற ஆளுமைப் பண்புகள் மாணவரிடத்து நடத்தை மாற்றத்தை ஏற்படுத்தும். தம் மாணவர்களிடம் நெருங்கிப் பழகும் அதேவேளை உறுதியாக - கண்டிப்புடன் நடத்தலும் அவசியமாகும்.

மேலும் ஆசிரியர் உலகியலறிவும், தந்திர முறையும், வழிகாட்டும் திறனும் தன்னம்பிக்கையுடன் அன்றாடப் பிரச்சினைகளை அணுகுபவராயும் தன்னை மாற்றிக் கொள்ளலும் அவசியம். தம் பணியில் முழு மனதுடன், முழு விருப்புடன் ஈடுபடும் அதே வேளை ஆசிரிய சங்கங்களுடன் நற்தொடர்புகளை வைத்துக்கொண்டும், கருத்தரங்குகளில் பங்குகொண்டும் தனது வாண்மையை விருத்தி செய்தல் வேண்டும். -

ஆசிரியர் தாம் வாழும் சமுதாய உறுப்பினருடனும், மாணவரது பெற்றோருடனும் தொடர்புகொண்டும், சமுதாய நடைமுறைகளில் பங்குகொண்டும் வழிகாட்டியாயும் ஆலோசனை கூறுபவராயும் விளங்குதல் அவசியம். இவ்வறிவை கல்விச் சமூகவியல் பெற்றுக் கொடுக்கின்றது. வருங்காலப் புரட்சிச் சமுதாயத்தை உருவாக்கும் பணியில் தாம் உள்ளவர் என்று கருதுபவராக அதாவது, நாளை பெருமையுடன் வாழப்போகும் கல்வி நிபுணரை உருவாக்குபவராகக் கருதி பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் பணி புரிதல் வேண்டும்.

இத்தகைய பண்புகளையுடைய ஆசிரியரையே மாணவரும், பெற்றோரும், சமூகமும், நாடும் விரும்பும்; போற்றும். இவர்களாலேதான் சிறந்த பிரஜைகளைத் தோற்றுவிக்கமுடியும். ஆசிரியர் ஒவ்வொருவரும் இவ்வாறு தமது கடமையுணர்ந்து, கல்விப் பணி புரிந்து வருவார்களேயானால் மாணவர்கள் முன்னேற்றம் அடைவர் என்பது உறுதி.

*(நன்றி: ஆசிரியம்)*

# இதயச் சுமையுடன் ஈரவிழிகளில் பதினைந்து ஆண்டுகள்

மலர்வு 23 - 07 - 1972



உதிர்வு 20 - 09 - 1990

தென்புலோலியூர் க.சி.சிவசுப்பிரமணியம் தம்பதியரின் மூத்த புதல்வி

## செல்வி யோகதர்சினி சிவசுப்பிரமணியம்

பங்கயற் செல்வி நின் பிரிவினில் கரைந்தன
பதினைந் தாண்டுகள் பருவரல் தந்தே!
அள்ளக் குறையா அருள் பொழி மாதவன்
வள்ளல் இணையடி நிழல் நாடி
நீ சென்ற போது நிகழ்ந்திட்ட துயரம்
பாவேந்தர் சொல்லால் பகருதல் எளிதோ
கண்பனிக்க நின் உருவம் நெஞ்சில் நிழலாட
கண்ணன் அலன் நினைக் காக்கரம்
கூப்பித் தொழுகின்றோம்.

நின் நினைவில் நிதம்
நெட்டுருகும்:
**அப்பா - அம்மா,**
**தங்கை - அத்தான்,**
**மற்றும் உறவினர்கள்.**

*51, முதலாம் ஒழுங்கை,*
*பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(சி/45422)(26-19-34)

# அவிசாவளைப் பகுதியில் இரண்டு சடலங்கள் மீட்பு!

அவிசாவளை, ஒக்.5

அவிசாவளை, புவக்பிட்டிய தும்மோதர பகுதியில் ஒட்டோ சாரதியொருவரின் சடலம் கடந்த சனிக்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

அவிசாவளைப் பகுதியைச் சேர்ந்த மஹிந்த பெர்னாண்டோ என்பவரின் சட லமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது. இறந்த நபரின் ஒட்டோவை வாடகைக்கு அமர்த்திச் சென்ற இனந்தெரியாத நபர்கள் சிலரே இவரைக் கொலை செய்திருக்கின்றனர் என்பது ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாம்.

கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் இவரின் சடலம் றப்பர் தோட்டமொன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது. அவிசாவளை பொலீஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் பிற்பகல் அவிசாவளை பொலீஸ் பிரிவிற்குட்பட்ட கொஸ்கம கட்டகொடப்பகுதியிலுள்ள றப்பர் தோட்டமொன்றிலிருந்தும் இளைஞரொருவரின் சடலமொன்று பொலீஸாரால் மீட்கப்பட்டுள்ளது. இந்தச் சடலம் நேற்று வரை அடையாளம் காணப்படவில்லை. இது பற்றிய விசாரணைகளையும் அவிசாவளைப் பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க)

# விபத்தில் பெண் பலி!

மொரட்டுவ, ராவத்தையில் பிரதான வீதியில் பஸ் - மோட்டார் சைக்கிள் விபத்தில் நேற்றுமுன்தினம் குடும்பப் பெண் ஒருவர் மரணமானார் எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் கணவனுடன் அமர்ந்து சென்றவரே மரணமானவராவார். இருபத்தைந்து வயதான இவர் ஒரு குழந்தையின் தாயுமாவார் என்று தெரிவிக்கப்பட்டது.

தனியார் பஸ்கள் இரண்டு ஒன்றையொன்று முந்திச் செல்லப் போட்டி போட்டுக் கொண்டு விரைந்ததிலேயே இந்தப் பெண் பயணமான மோட்டார் சைக்கிள் சிக்கிக்கொண்டது என்றும் - போட்டி போட்டு விரைந்த இரண்டு பஸ்களையும் தாம் தடுத்துவைத்திருக்கிறார்கள் என்றும் - மொரட்டுவைப் பொலீஸார் தெரிவித்தனர். (க)

## பொது மண்டபம் அமைப்பு

கோப்பாய், ஒக்.5

சிறுப்பிட்டி மேற்கில் ஜீ.ரி.சற் நிறுவன ஆதரவுடன் பொது நோக்கு மண்டபம் அமைக்கப்பட்டுவருகிறது. இக்கட்டட வேலைகள் விரைவில் பூர்த்தியடைந்ததும் திறப்பு விழா நடைபெறும் என இப் பகுதி கிராம அலுவலர் தெரிவித்தார். (72-204)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**IRQUE தகவல் நுட்ப வகுப்புகள்**


யாழ்.பல்கலைக்கழக கணனி அலகினால் IRQUE செயற்றிட்டத்தின் கீழ் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற தகவல் தொழில்நுட்ப வகுப்புகளுக்குப் பதிவு செய்த இறுதித் தொகுதி கலை மற்றும் முகாமைத்து வணிகபீட மாணவர்களுக்கான வகுப்புகள் வார இறுதி வகுப்புகளாக 09-10-2005 ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு கணனி அலகில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

பதிவு செய்த மாணவர்கள் தங்கள் பெயர்களை கணனி அலகில் பார்வையிடலாம்.

**Director,**
**IRQUE Project.** (சி/40417)(26-15-18)


# எட்டாண்டு நினைவலைகள்

தோற்றம் 01 - 06 - 1940



மறைவு 03 - 10 - 1997

*அமரர்*

## திருநாவுக்கரசு தர்மலிங்கம்

திதி: துதியை

ஆண்டுகள் எட்டுச் சென்றாலும் ஆறவில்லை எம் துயரம்
அன்பு காட்டவும் ஆறுதல் சொல்லவும் அப்பா நீங்கள் அருகில் இல்லை
நீங்கள் எம்மைவிட்டுச் சென்றாலும் - உங்கள்
நினைவலைகள் என்றும் எம்மை விட்டு அகலாது !

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

**178/1, கொழும்புத்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(40800)(26-15-18)


# இன்னும் நீங்கள் தாமதிக்கின்றீர்களா!

A/L தகைமைகளுடன் மாத்திரம் வெளிநாட்டு உயர்கல்வியினைப் பெற முயற்சி செய்கின்ற மாணவர்களில் அனேகமானோர் பிரபலபல்கலைக்கழகங்களில் அனுமதிபெறுவதிலும் (Admission) உயர்கல்விக்கான Visaக்களைப் பெறுவதிலும் தவறிவிடுகின்றனர். சர்வதேச அங்கீகாரமுள்ள EDEXCEL, UK வழங்கும் BTEC HND தகைமை உலகின் பிரசித்தி பெற்ற பல பல்கலைக்கழகங்களில் B.Sc (Hons) பட்டப்படிப்பின் இறுதியாண்டிற்கான நேரடி அனுமதியைப் பெற்றுத்தருவதோடு உயர்கல்விக்கான Visaக்களையும் உறுதிசெய்கின்றது.



இ. பிரதீபன்
மானிப்பாய்.

2003ஆம் ஆண்டு கணிதப்பிரிவில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய நான் கொழும்பு இந்துக்கல்லூரியின் பழைய மாணவன் ஆவேன். பல்கலைக்கழக அனுமதிக்கு எனது A/L பெறுபேறுகள் சற்றுப்போதாமல் இருந்தது. இந்நிலையில் கணனித்துறையில் எனக்கிருந்த ஆர்வம் கணனித்துறையில் ஓர் பட்டப்படிப்பினை மேற்கொள்ளவேண்டும் என்ற பேரவாவாக மாறியது. எனது ஆர்வத்திற்கு பெற்றோரும் பக்கபலமாக இருந்தனர். கொழும்பில் வசித்துவந்த நான் யாழ்ப்பாணத்தில் IIS நிறுவனம் சர்வதேச ரீதியில் பிரபல்யமான BTEC HND கற்கைநெறியினை நடாத்திவருவதாகக் கேள்வியுற்றேன். கொழும்புடன் ஒப்பிடும்பொழுது குறைந்த செலவில் இக்கற்கை நெறியை யாழ்ப்பாணத்தில் கற்கக்கூடிய சந்தர்ப்பம் இருப்பதை அறிந்த எனது பெற்றோர் HND ஐத் தொடர அனுமதியளித்தனர். HND 4வது பிரிவில் பயின்றுவரும் நான் இறுதியாண்டுப் பட்டப் படிப்பினை சர்வதேச பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொள்வதற்குரிய ஏற்பாட்டினையும IIS நிறுவனமே எனக்கு செய்துதரவுள்ளது. என்போன்று பல்கலைக்கழக அனுமதி கிடைக்கத்தவறிய மாணவர்களுக்கு HND மிகச்சிறந்த ஒன்றாகும்.



அ.அஜந்தா
யாழ்ப்பாணம்

தான் தற்பொழுது IIS இல் HND 4வது பிரிவு மாணவி. வேம்படி மகளிர் கல்லூரியின் 2002 உயர்தர கணிதப்பிரிவு மாணவியாகிய நான் சில தவிர்க்க முடியாத சூழ்நிலைகளால் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பினைத் தவறவிட்டேன். இந்நிலையில் யாது செய்வதென அறியாதிருந்த எனக்கு IIS நிறுவனம் ஓர் கலங்கரை விளக்குப்போல காட்சியளித்தது. சர்வதேச தரம்மிக்க பிரித்தானிய சான்றிதழுக்கான Edexcel இன் BTEC HND கற்கைநெறியில் இணைந்து கொண்டதன் மூலம் எனது பெற்றோர் ஒளிமயமான என்னெதிர் காலத்திற்கு வித்திட்டுள்ளனர். எனது எதிர்காலம் தொடர்பான ஓர் தெளிவான நிலையில் தற்பொழுது நான் இருப்பது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. 1½ வருட இக்கற்கைநெறியை முடித்துக் கொண்டதும் எனது 3ம் ஆண்டுப் பட்டகல்வியை சர்வதேச பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொள்வதற்குத் திட்டமிட்டுள்ளேன. இதன் மூலம் ஓர் மிககுறுகிய காலத்தில் கணனித்துறையில் பட்டதாரியாகும் வாய்ப்பினை IIS நிறுவனம் ஏற்படுத்தித் தந்ததையிட்டு நானும் எனது பெற்றோரும் மனநிறைவடைகின்றோம்.

## BTEC HND

World Class Qualifications

Delivered Locally....... Recognised Globally

**B.Sc ( Hons ) / BEng ( Hons )**
1 year at leading Universities in UK, USA, Australia, Canada etc.

↑

**BTEC HND**
Computing / Software Engineering / Business Information Technology ( 1½ years )

↑

**GCE A/L**
with 2 Subjects

**New Batch Starts on 17.08.2005 at 10.00 a.m.**

edexcel INTERNATIONAL

Approved Training Centre

## IIS CITY CAMPUS

# 181, Navalar Road, Jaffna.
TP No. : 021 222 8060 / 021 222 2201


# நெஞ்சினின்றகலா ஓராண்டு நினைவலைகள்

*அன்னை மடியில்* 05 - 12 - 1946



*ஆண்டவன் அடியில்* 15 - 10 - 2004

## அமரர் பொன்னுத்துரை சிவலிங்கம்

*திதி : 5-10-2005*

*நிமலன் திருவடி நிழலில் நிறைகின்ற எங்கள் ஐயா!*
*நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும்*
*எம் மனங்களில் இன்றும் நிறைந்து நிற்கின்ற*
*குடும்பத்தின் திருவிளக்கே!*
*பாசத்தால், பண்பால், அன்பால் எம்மை*
*அரவணைக்கும் தெய்வத்தின் தெய்வமே!*
*ஓராண்டென்ன நூறாண்டு சென்றாலும்*
*எம் நெஞ்சங்களில் நிலைத்து நிற்கும்*
*உங்கள் நினைவுகள்...*

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

G.P.S. வீதி,
கல்வியங்காடு.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

(40795)(26-15-18)

# காரைநகரில் கடும் வரட்சியினால் நீர் நிலைகள் வற்றின; மக்கள் அவதி!

காரைநகர்,ஒக்.5

கடும் வரட்சியினால் காரைநகர் பகுதியில் உள்ள நீர்நிலைகள் அனைத்தும் வற்றி வருகின்றன. இதனால், அன்றாடம் பாவனைக்குக் கூட நீரைப் பெற்றுக்கொள்வதில் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

காரைநகர் பகுதிக் கரையோரக் கிராமங்களான ஊரி, தோப்புக்காடு, பிட்டியெல்லை, கல்லந்தாழ்வு உள்ளிட்ட பல இடங்களில் நீர்நிலைகள் முற்றாக வற்றி தரவைகளாகவே காணப்படுகின்றன. இதனால், அன்றாடத் தேவைகளுக்கு கடல்நீரைப் பயன்படுத்த வேண்டிய துர்ப்பாக்கியநிலை ஏற்பட்டுள்ளதாக இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பவுஸர்கள் மூலம் இங்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. ஏனைய தேவைகளுக்குத் தண்ணீரைப் பெற்றுக் கொள்வதில் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதுடன் கால்நடைகளும் நீர் இன்றி அலைந்து திரிகின்றன.

தற்போது ஏற்பட்டுள்ள இந்த வரட்சி மேலும் சில நாள்கள் நீடித்தால் தொற்று நோய்கள் பரவக்கூடிய அபாயமும் ஏற்படும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது. (ஐ-73)

## திங்கள், செவ்வாய்க் கிழமைகளில் பல்கலைக் கழகத்தில் நினைவுப் பேருரைகள்

யாழ்ப்பாணம்,ஒக்.5

யாழ்.பல்கலைக்கழகத்தில் நாளையும் நாளைமறுதினமும் நடைபெறவுள்ள பட்டமளிப்பு விழாவை ஒட்டி வழக்கமாக இடம்பெறுகின்ற இராமநாதன் நினைவுப் பேருரை இம்முறையும் நடைபெற ஏற்பாடாகி உள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் தலைமையில் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெறவுள்ள நினைவுப் பேருரை நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகப் பொருளியல்துறைத் தலைவர் பேராசிரியர் வி.நித்தியானந்தன், 'யாழ்.மாவட்டத்தின் சமூக பொருளாதார முறைமை - 1984 தொடக்கம் 2004 வரை'' என்ற பொருளில் பேருரை ஆற்றுவார்.

மறுநாள் செவ்வாய்க்கிழமை கைலாசபதி கலையரங்கில் பிற்பகல் 3 மணியளவில் நடைபெறவுள்ள சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுச் சொற்பொழிவில் முன்னாள் சமஸ்கிருதப் பேராசிரியர் கலாநிதி வி.சிவசாமி 'பரதநாட்டிய தத்துவம், பாரம்பரிய, மாற்றம்' எனும் பொருளில் சொற்பொழிவாற்றவுள்ளார்.

இதேவேளை, யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு நிகழ்வையொட்டி எதிர்வரும் 8ஆம் திகதி சனிக்கிழமை கைலாசபதி கலையரங்கில் இராமநாதன் நுண்கலைக்கழக இசை மற்றும் நடனத்துறை சார்ந்த மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (ஐ-12)

## பல்கலைக்கழகங்களுக்கு 15 ஆயிரம் பேர் தகுதி

வலி.தெற்கு,ஒக்.5

கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இருந்து 2005 - 2006 ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்காக இம்முறை 15 ஆயிரத்து 68 பேர் விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இம்முடிவுகளின்படி யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து 4 ஆயிரத்து 998 பேர் தகுதி பெற்றுள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து 2 ஆயிரத்து 211 பேரும், அம்பாறை மாவட்டத்தில் இருந்து 3 ஆயிரத்து 481 பேரும், திருகோணமலை மாவட்டத்திலிருந்து ஆயிரத்து 687 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்திருந்து 640 பேரும், மன்னார் மாவட்டத்திலிருந்து 606 பேரும், கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து 616 பேரும், வவுனியா மாவட்டத்திலிருந்து 829 பேரும் பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிக்க தகுதி பெற்றுள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 14 ஆம் திகதிக்கு முன்பதாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கவேண்டுமென பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க அறிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற கடற்கோள் அனர்த்தங்கள் காரணமாக முற்றாகச் சேதமடைந்த வடக்கு - கிழக்கு பாடசாலைகள் பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிக்க தகுதிபெற்றுள்ள மாணவர்களுக்கு உரிய ஆவணங்களைப் பெற்றுக்கொடுப்பதில் அதிக அக்கறை காட்டி செயற்படவேண்டும் எனவும் பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். (ஐ-152)

## பொலித்தீன் பாவனையை முற்றாக ஒழிக்க வலி.தென்மேற்கில் நடவடிக்கை

நவாலி,ஒக்.5

வலி.தென்மேற்குப் பிரதேச செயலக பிரிவில் பொலித்தீன் பாவனையை முற்றாக ஒழிக்க முடிவுசெய்யப்பட்டுள்ளது.

சூழல் பாதுகாப்புத் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் ரூபினி வரதலிங்கம் தலைமையில் இடம்பெற்றபோது இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் திணைக்களத் தலைவர்கள், பாடசாலை அதிபர்கள், சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்களின் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பொலித்தீன் பாவனை பாடசாலைப் பிள்ளைகளினாலும் தேநீர்ச் சாலைகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் மூலமும் அதிகரித்து வருகின்றது.

இவற்றைப் பாடசாலை மட்டத்திலும் மற்றும் பொது ஸ்தாபனங்கள் மூலமாகவும் ஒழிக்க முன்வரவேண்டும். அத்துடன், உடைந்த போத்தல்கள், கண்ணாடித்துண்டுகள், அஸ்பெஸ்ரர் சீற் துண்டுகள், தகரங்கள் போன்றவற்றை வீதிகள், வீடுகள் ஆகியவற்றிலிருந்து அகற்றி பிரதேச சபையினால் ஒதுக்கப்பட்ட இடங்களில் அவற்றைச் சேகரிக்கவேண்டும். அத்துடன், எதிர்வரும் 7ஆம் திகதி வீடுகள் மற்றும் பொது இடங்களில் மரக்கன்றுகளை நடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் - என்றும் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது. (ஐ-100)

## ஸ்கந்தாவில் மழை நீர் சேகரிப்புத் தொட்டி

வலி.தெற்கு, ஒக்.5

ஆயிரம் லீற்றர் தண்ணீரை உள்ளடக்கக் கூடியதான மழைநீர் சேகரிப்புத் தொட்டி ஒன்று கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டு வருகின்றது.

யாழ்.நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினரின் அனுசரணையுடன் சுமார் 75 லட்சம் ரூபா செலவில் இந்த மழைநீர் சேகரிப்புத் தொட்டி அமைக்கப்பட்டு வருகின்றது.

கந்தரோடை ஸ்ரீ சுப்பிரமணிய வாசிகசாலை நிர்வாகத்தினர் கூலி ஒப்பந்த அடிப்படையில் யாழ்.நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினருடன் இணைந்து தொட்டியினை அமைத்து வருகின்றனர். (ஐ-152)

## கற்கேணி சுத்திகரிப்பு

நவாலி,ஒக்.5

நவாலி தெற்கில் கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாகப் பாவிக்கப்படாமலிருந்த கற்கேணி, அப்பகுதி இளைஞர்களால் சுத்தஞ்செய்யப்பட்டு, ஆழமாக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக விடப்பட்டுள்ளது. (ஐ-100)

## கால்நடை வைத்திய அதிகாரி பணிமனைக்கு பிரான்பற்றில் 2 பரப்புக் காணி அன்பளிப்பு

வலி.தென்மேற்கு,ஒக்.5

சண்டிலிப்பாய் டச்சு வீதியிலுள்ள தனியார் வாடகைக் கட்டடத்தில் கடந்த பல வருட காலமாக இயங்கி வரும் சண்டிலிப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி பணிமனைக்கு நிரந்தர கட்டடம் அமைப்பதற்கு காணி கிடைக்கவுள்ளது.

பிரான்பற்று ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் பக்கத்திலுள்ள"- இரண்டு பரப்பு விஸ்தீரணமுடைய- காணி ஒன்றை அன்பளிப்பாக வழங்குவதற்கு பிரான்பற்று மக்கள் நலன்புரிச் சங்கம் முன்வந்துள்ளது.

இது பற்றி சண்டிலிப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி ஊடாக யாழ்.கால்நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளருக்கு சங்கம் கடிதமூலம் அறிவித்துள்ளதாக பிரான்பற்று மக்கள் நலன்புரிச் சங்கத்தின் செயலாளர் சி.மகேந்திரம் தெரிவித்தார்.

ஏற்கனவே பிரான்பற்றில் நிறுவப்பட்டுள்ள சமுர்த்தி வங்கிக் கட்டடம், ஆரம்பசுகாதார நிலைய கட்டட முன்பள்ளிக்கட்டடம் ஆகியவற்றை அமைப்பதற்கான காணிகள் இங்கு நன்கொடையாக வழங்கப்பட்டிருந்தன. (ஐ-135)



*பெண்கள் பண்பாட்டு மையத்தினரால் நடத்தப்பட்டு வரும் அரங்காலயம் - 12 ஆவது நிகழ்வு கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாலயத்தில் 24.09.2005 அன்று நடத்தப்பட்டது. 'பொங்குதமிழ் - 2005' தொடர்பாக ஒன்றுகூடிய பெண்களின் அரங்க எழுச்சியையும், செயலாளிகளான இவர்கள் தமது பொறுப்பை பேழையாக சுமந்து கைமாறிப் பரிமாறுவதையும் படங்களில் காணலாம்.*

## பொங்குதமிழுக்கு வலுச்சேர்த்த பெண்களுக்கு நன்றி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.5

நடந்துமுடிந்த 'பொங்குதமிழ் - 2005' எழுச்சி நிகழ்வில் கலந்துகொண்ட அனைவருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதனும் பெண்கள் பண்பாட்டு மையத்தினரும் நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக அவர்கள் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாத ஒரு பெரும் எழுச்சியை - பொங்குதமிழ் 2005ஐ நடத்திமுடித்துள்ளோம். தமிழர்களின் உரிமைக் குரல் உலகமெங்கும் ஒலிக்கும் வகையில் இந்த எழுச்சி நடந்து முடிந்துள்ளமை பேருவகையைத் தருகின்றது. இது தமிழ் மக்களின் ஓர் அசுரத்தனமான முயற்சி. வன்முறை இன்றிய வழியில் தமிழர் உரிமையோடு கூடிய சமாதானத்தை இலங்கைத் தீவில் அடைவதற்காய் தமிழ் மக்கள் தாமே முன்வந்து ஒருபெரும் முன்னெடுப்பைச் செய்துள்ளார்கள். இதனைச் சர்வதேச சமூகம் புரிந்து கொள்ளவேண்டும். இதில் பெண்களின் பங்கு குறிப்பிடத்தக்கதாக இருக்கின்றது.

கிராமங்கள் தோறும் கிளர்ந்தெழுந்த பெண் செயலாளிகள் 18-09-2005 யாழ். பல்கலைக்கழகக் கைலாசபதி அரங்கை நிறைத்து உழைப்பதற்கு உறுதிபூண்டு, கிராமங்கள் தோறும் ஏனைய பெண்களுடன் ஊடாடி பொங்குதமிழ் 2005இற்காய் வேலை செய்தார்கள். அதுமட்டுமல்ல, பொங்குதமிழ் நிகழ்வில் 100 பெண்கள் எழுச்சி அரங்கை நடத்தி இலட்சக்கணக்கான மக்களை எழுச்சிப்படுத்தினார்கள்; ஒரு பெரும் சக்தியாக்கினார்கள். சக்தி நிறைந்த மக்கள் சர்வதேசத்திற்குத் தமிழர் உரிமைக்குரலை அதிரவைத்தார்கள். ஆக்கிரமிப்பாளர்களின் அச்சுறுத்தல் இருந்தபோதும் இந்தப் பெரும் பணி நடந்து முடிந்துள்ளது. நாங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து இந்தப் பெரும் பணியைச் சாதித்ததற்காக ஒருவருக்கொருவர் நன்றி தெரிவித்து மகிழ்ச்சி அனுபவத்தைப் பகிர்ந்துகொள்வோம் - என்றுள்ளது. (ஐ-203)

## பட்டமளிப்பு விழா அகலத் திரையில் காண்பிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.5

யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு நிகழ்வுகள் இம்முறை அகலத் திரையிலும் காண்பிக்கப்படவுள்ளன.

அதிக எண்ணிக்கையானோர் பட்டம் பெறுவதனால் விழா நடைபெறும் மண்டபத்தில் ஏற்படும் இடநெருக்கடியைத் தவிர்க்கும் பொருட்டு வேறொரு மண்டபத்தில் அகலத்திரையில் இந்நிகழ்வைக் காண்பிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பட்டமளிப்பு விழா ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை -

இம்முறையும் இந்நிகழ்வுகள் வழமை போன்று தொலைக்காட்சியிலும் காண்பிக்கக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-12)

## பட்டமளிப்பு விழாவுடன் புத்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஒக்.5

யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு நிகழ்வை ஒட்டி 'புத்தகக் கண்காட்சி' ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம்மாதம் 6ஆம், 7ஆம், 8ஆம் திகதிகளில் யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ மண்டபத்தில் இக்கண்காட்சி இடம்பெறவுள்ளது.

இக்கண்காட்சியில் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் நூல்களும், பல்கலைக்கழகத்தால் இதுவரை வெளியிடப்பட்ட நூல்களும் மற்றும் பல்கலைக்கழகம் சார்ந்த நூல்களும் காட்சிப்படுத்தப்படவுள்ளன என பட்டமளிப்பு விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ஐ-12)

## சுழிபுரம் கூழாவடி மீனவர்களுக்கு சுயமுயற்சிக் கடன்

வலி.தென்மேற்கு,ஒக்.5

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டப் பிரிவு மானிப்பாய் கூழாவடி புனித சூசையப்பர் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு சுழற்சி முறையிலான கடற்றொழில் சுயமுயற்சிக் கடன் வழங்குவதற்காக ஐந்து லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

இந்த நிதி மூலம் முதற்கட்டமாக சங்க உறுப்பினர்களான 25 பயனாளிகளுக்கு தலா 20 ஆயிரம் ரூபா வீதம் கடனுதவி வழங்கப்படவுள்ளதாக சங்கத்தின் செயலாளர் செ.கணேசவேல் தெரிவித்தார்.

எதிர்வரும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று சங்கப் பணிமனையில் வைத்து இக்கடன் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-135)

## நெடுந்தீவில் இம்முறை 450 பேருக்கு சமுர்த்தி உதவி

நல்லூர்,ஒக்.5

நெடுந்தீவில் இம்முறை 450 பேருக்கு சமுர்த்தி நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

முன்னர் சமுர்த்தி உதவிகளைப் பெற்றுக்கொண்ட வறிய குடும்பங்கள் சிலவற்றிக்கு இந்த நிவாரண உதவிகள் தற்போது கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-111)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள epsonix - 300 + Dot Metric Printer விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு 077-6080926. (40801)

கோழிஎரு விற்பனைக்குண்டு. விலை பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்பு: R.கீதன், 16/2, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 0212227729, 0779123033 (40816)

## அமெரிக்க விசா

55050 அமெரிக்க விசா லொத்தர் Lateat விண்ணப்ப விவரங்களை இலவசமாகப் பெற சரியான விலாசத்துடன் தொடர்புகொள்க. குடும்பத்துடன் அமெரிக்கா செல்ல அரிய வாய்ப்பு Penquin Book Shop B2/F2 3 Bloemendhal Flats Colombo - 13. T.P.: 0773081764, 2438367 Internet மூலம் அமெரிக்காவிற்கு அனுப்பி Receipt அனுப்பப்படும். (சி-45419)

## வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, கருவேலடி வீதியில் யாழ்.பல்கலைக்கழகத்திற்குச் சமீபமாக 1 ¾ பரப்பில் குழாய்க்கிணற்றுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு: காஞ்சனா பிரேம்குமார், கருவேலடி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். T.P. No.: 021 4590359. (40779)

## பணிப்பெண் தேவை

3 அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலைகள் செய்யக்கூடிய ஒருவர் தேவை. தொடர்பு: S.சிறிதரன் 774, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021-222 6502. (40763)

## வான் விற்பனைக்கு

சொந்தப் பாவனையிலுள்ள 51- தொடர் இலக்கமுடைய Lite-A/C வான் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.163, k.k.s. வீதி, கொக்குவில் அல்லது T.P. 776128186. (40766)

## மணமக்கள் தேவை

யாழ்.கௌரவ கிறிஸ்தவ குடும்பத்தைச் சேர்ந்த 36 வயது மணமகளுக்கும் 30வயது, அரச உத்தியோக மணமகனுக்கும் RC or NONRC மணமக்கள் தேவை. வெளிநாட்டு மாற்றுத் சம்பந்தமும் விரும்பப்படும். தொடர்பு: விளம்பர இல. 2709 மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

(40736)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

'தனியார் பாலர் பாடசாலை' பொறுப்பாசிரியை சுஜீதா அனுமதி 1000/- மாதம் 100/- பதிவுகளுக்கு தலைமை ஆசிரியர் விக்னேஸ்வரன் ஆச்சாரி 426, (302) K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (40805)

## வேலணையில் சிறுவர், முதியோர் தின விழா

யாழ்ப்பாணம், ஒக்.5

வேலணை பிரதேச செயலக சிறுவர், முதியோர் தினவிழா இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத் தில் நடைபெறவுள்ளது.

உதவிப் பிரதேச செயலர் மு.நந்தாகோபாலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி.ராதாகிருஷ்ணனும் சிறப்பு விருந்தினராக வேலணை பிரதேச சபைச் செயலாளர் கை.மகேந்திரலிங்கமும் கலந்து கொள்வர்.

இந்நிகழ்வில் சிறுவர், முதியோர் கௌரவிப்பு, பரிசில் வழங்கல்கள், கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறும்.

(ஐ-203)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**பாலசுப்பிரமணியம் கிருபாலகிருஷ்ணன்**

*யாழ்.பல்கலைக்கழகத்தில் நாளை 06.10.2005 சமூகவியல் சிறப்புக் கலை B.A. (Hons) பட்டம் பெறும் இவரை மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.*

இணுவில் மேற்கு,
இணுவில்.

(40813)(42-21-15-16)

**த.கோபாலச்சந்திரன் குடும்பத்தினர்.**

## கெயர் சர்வதேசம்

care· மூலப்பொருள் வழங்குவதற்கான கேள்விப்பத்திரம்

கெயர் நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள திட்ட நடவடிக்கைகளுக்காகப் பின்வரும் பொருள்களைப் பருத்தித்துறை/மாதகல் திட்டப்பிரதேசத்தில் விநியோகிப்பதற்குத் தகுதியான விநியோகஸ்தர்களிடம் இருந்து மூடிய கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

1. சிமெந்து
2. ஆற்று மணல் (கண்டாவளை)
3. கண்டகல் (6" -9")
4. சல்லி (1")
5. சல்லி (¾")

(சி/45431)
(26-15-16)

இது தொடர்பான மேலதிக விவரங்களுக்கும் விண்ணப்பப் படிவங்களைப் பெறுவதற்கும் பருத்தித்துறையில் உள்ள கெயர் அலுவலகத்துடன் கடமை நேரத்தில் தொடர்பு கொள்ளவும். இதற்கான விண்ணப்பங்களை 12.10.2005 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பருத்தித்துறை கெயர் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கவும்.

தொலைபேசி :- 021- 2264259
தொலைநகல் :- 021 -2264260

திட்டப்பணிப்பாளர்,
கெயர் சர்வதேசம்,
*சாரையடி, பருத்தித்துறை,*

## உள்ளத்து நினைவுகள்





அமரர்
**வைத்திலிங்கம் நாகராசா**
மண்துலங்க: 1929-03-17
கண்கலங்க: 1996-12-12

திருமதி
**சௌந்தரநாயகி நாகராசா**
மண்துலங்க: 1937-03-14
கண்கலங்க: 2004-10-15
(திதி:- 2005-10-05)

**ஓராண்டு கடந்ததம்மா உனைநாங்கள் இழந்தபின்னர்**
**ஒன்பதாண்டுகள் மறைந்தனவே அப்பா உங்கள்முகம் காணாமல்**
**பாரினிலே நாங்கள் பலவளமும் பெற்றுயர**
**சீராக எமை வளர்த்தீர்! சிறப்புடனே வாழுகின்றோம்**
**உங்கள் நினைவுகளே எமை என்றும் வழிநடத்தும்**
**எங்களுயிர் உள்ளவரை என்றும் உமை மறவோமே!**

இலட்சுமி ஆலை,
2ஆம் வட்டாரம்,
வேலணை.

(40812)(24-21-15-16)

**- குடும்பத்தினர்.**

## மனித உரிமைகள் டிப்ளோமா கற்கைநெறி

மேற்படி கற்கைநெறி (72 மணித்தியாலங்கள்) எமது பணியகத்தினால் நடத்தப்படவுள்ளது. இது வார இறுதித் தினங்களில் நடைபெறும்.

**ஆரம்பம்:** 14-10-2005 (பி.ப.)
**இடம்:** "செப்பாக்", 843, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
**கல்வித் தகைமை:** பின்வருவனவற்றில் ஏதாவதொரு சான்றிதழ் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.
1) பட்டதாரிச் சான்றிதழ்
2) உயர் தேசிய டிப்ளோமா கற்கைநெறிச் சான்றிதழ்
3) இலங்கை நிர்வாக சேவை சான்றிதழ்
4) பயிற்றப்பட்ட ஆசிரியர் சான்றிதழ்

* **புலமைப்பரிசில் விண்ணப்பப்படிவம்:** கட்டணம் தொடர்பாக, எமது நிர்வாகத்தின் தீர்மானத்திற்கேற்ப புலமைப் பரிசில்கள் வழங்கப்படும். விண்ணப்பப் படிவங்களை எமது பணியகத்தில் வாரநாள்களில் காலை 8.45 மணிதொடக்கம் பி.ப. 4.30 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். படிவங்களை பெறுவதற்கான கடைசித் தினம் 08-10-2005. பூர்த்திசெய்த படிவங்களை எமக்குச் சமர்ப்பிக்கவேண்டிய கடைசித் தினம் 12-10-2005. விண்ணப்பப் படிவக் கட்டணம் ரூபா 150/=.

விரிவுரையாளர்கள்:
திரு.ம.றெமேடியஸ் - LL.B Attorney-at-Law
திரு.பீ.என்.தம்பு - LL.B, LL.M, Attorney-at-Law
திரு.எஸ்.செல்வகுணபாலன் - LL.B, Attorney-at-Law; Assistant Legal Draftsman
அருட்திரு. வீ.யோகேஸ்வரன் - Attorney-at-Law
அருட்திரு.அ.இ.பேணாட்- LPh; LTh (Pune); PG Dip in Human Rights & Ed (Lond); MA (Ed)(Lond)

அருட்தந்தை அ.இ.பேணாட் (இயக்குநர்)
சமாதான மனித உரிமைப் பண்பாட்டுப் பணியகம் [செப்பாக்],
தொலைபேசி எண்: 021-222 7884. 843, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C/45428)(50)

## SAAMSTECH இன் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியூடான பயிற்சியும் பணி நியமனமும் சனி ஞாயிறு பிரிவு









பணிநியமனம்: ஆங்கில ஆசிரியர், உள்நாட்டு, சர்வதேச செயற்பாடுகளில் இணையதள, மென்பொருள், கற்கைநெறி விருத்தியாக்கம் மற்றும் பொது நிர்வாகம்.

**பயிற்சிக்காலம்** : சனி, ஞாயிறுகளில் 9.00 - 3.00, 4 மாதங்கள்
**கட்டணம்** : ரூபா 12000/- **அனுமதி முதலில் வரும் 40 பேருக்கு மட்டும்**
**கல்வித்தகுதி** : க.பொ.த உயர் தரத்தில் சித்தி (ஆங்கில பாடத்தில் சித்தி எதிர்பார்க்கப்படவில்லை)

**பயிற்சிக் காலத்தின்போதும் ஊதியம் வழங்கப்படும்**

**Phone**
**4591571**
**077 - 3068968**

**SAAMSTECH**


# ஏவுகணைச் சோதனையை முன்னறிவிக்க இந்தியா – பாகிஸ்தான் இடையே ஒப்பந்தம்!

## கடலோர காவல்படைத் தகவல் தொடர்புக்கும் இணக்கம்

இஸ்லாமாபாத்,ஒக்ரோபர்5

**ஏவுகணைச் சோதனைகளை பரஸ்பரம் முன்கூட்டியே அறிவித்துக்கொள்வதற்கு இந்தியாவும் பாகிஸ்தானும் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளன. இதுதவிர, இரு நாடுகளின் கடலோர காவல்படைகளுக்கு இடையில் தகவல் தொடர்பு இணைப்பு ஏற்படுத்திக்கொள்வதற்கும் உடன்பாடு ஏற்பட்டுள்ளது.**

பாகிஸ்தான் சென்றுள்ள இந்திய வெளியுறவு அமைச்சர் கே.நட்வர்சிங்கும், பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் குர்ஷித் முகமது கசூரியும் இஸ்லாமாபாத்தில் கடந்த திங்கட்கிழமை அமைதி முயற்சிகள் தொடர்பாக நடத்திய பேச்சுக்குப் பிறகு இருவர் முன்னிலையிலும் இந்த இரு ஒப்பந்தங்களும் கையெழுத்தாகின.



பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்ட பின் இந்திய வெளியுறவுச் செயலாளர் ஷியாம் சரணுடன் இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர் சிங். பாகிஸ்தான் வெளியுறவு செயலாளர் ரியாஸ் முகமது கானும் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் துர்திஷ் முகமுது அமைச்சர் குர்திஷ் முகமது.

பாலிஸ்டிக் ஏவுகணைச் சோதனைகளை முன்கூட்டி அறிவிக்கும் ஒப்பந்தத்தில் இந்திய வெளியுறவுச் செயலர் ஷியாம் சரணும், பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர் ரியாஸ் முகமது கானும் கையெழுத்திட்டனர்.

தரையில் இருந்து சென்று தரை இலக்கைத் தாக்கும் பாலிஸ்டிக் ஏவுகணைகளை சோதனை செய்வதற்கு முன்பாக, இரு நாடுகளும் அதுபற்றி ஒன்று மற்றதற்கு முன்கூட்டியே அறிவிக்க இந்த ஒப்பந்தம் வகை செய்கிறது.

இரு நாடுகளின் கடலோர காவல் படைகளுக்கு இடையில் தகவல் தொடர்பு இணைப்பை ஏற்படுத்துவது குறித்த மற்றோர் ஒப்பந்தத்தில் இந்திய கடலோர காவல் படைத் தலைவர் வைஸ் அட்மிரல் ஏ.கே. சிங்கும், பாகிஸ்தான் கடலோர காவல் படைத் தலைவர் ரியர்அட்மிரல் பக்தியார் மோசினும் கையெழுத்திட்டனர்.

இருநாடுகளின் மீனவர்களும் அடிக்கடி அடுத்த நாட்டின் கடல் எல்லைக்குள் பிரவேசித்துவிடுவதால், அதுபற்றிய தகவல்களை உடனுக்குடன் பரிமாறிக்கொள்வதற்கும், அதன் மூலம் மீட்பு நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வதற்கும் இந்த ஒப்பந்தம் வழிசெய்கிறது. (8)

## சீனாவில் 10 லட்சம் கவிஞர்கள்

பீஜிங், ஒக்.5

சீனாவில் 10 லட்சம் கவிஞர்கள் உள்ளனர். இத்தகவலை சீன கவிஞர்கள் சங்கத் தலைவர் சன் யூகுயிங் தெரிவித்துள்ளார்.

கடந்த சில ஆண்டுகளில் சீனாவின் வளர்ச்சியில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டு வந்துள்ளபோதிலும் சீன அரசு பழங்கால கலை இலக்கியத்துக்குப் புத்துயிர் அளிப்பதில் அதிக முனைப்புக் காட்டிவருகிறது.

சீன வரலாற்றில் மன்னர் ஆட்சி காலத்தில் இயற்றப்பட்ட கவிதைகள், செய்யுள்கள் பாரம்பரியம்மிக்கவை. அவற்றைப் புதுப்பிப்பதில் சீனா கவனம் செலுத்திவருகிறது.

கவிதை உலகில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தவும் சீன அரசு திட்டமிட்டுள்ளது.

சீன கவிஞர்கள் சங்கத்தில் மட்டும் 10 ஆயிரம் பேர் உறுப்பினர்களாக உள்ளனர்.

இதுதவிர மாவட்டங்கள், நகராட்சிகள் அளவில் உள்ள சங்கங்களையும் சேர்த்து கணக்கிட்டால் 10 லட்சம் கவிஞர்கள் உறுப்பினர்களாக இருப்பது தெரியவந்துள்ளது.(8)

## 77 விமானங்களை பாகிஸ்தானுக்கு அமெரிக்கா வழங்குகின்றது

பாகிஸ்தானுக்கு 77 போர் விமானங்களை அமெரிக்கா வழங்குகிறது.

வேறொரு நாட்டிலிருந்து வாங்கி இந்த விமானங்கள் பாகிஸ்தானுக்கு வழங்கப்படும்.

அமெரிக்காவுக்கான பாக்.தூதர் ஜெஹாங்கீர் கராமத் இத்தகவலைத் தெரிவித்ததாக 'தி நியூஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அந்த விமானங்கள் ஏற்கனவே பயன்படுத்தப்பட்டவையா அல்லது பயன்படுத்தப்படாமலேயே வைக்கப்பட்டிருந்தவையா என்பது குறித்து எந்தத் தகவலையும் அந்தப் பத்திரிகை தரவில்லை. அதில், பாக்.விமானப் படையின் தேவையைப் பூர்த்திசெய்யும் அளவுக்கு நவீன கருவிகள் இருக்கும். (8)

## நேபாளத்தில் 500 மாணவர்கள் கடத்தப்பட்டனர்

நேபாளத்தில் பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த 500 மாணவர்கள் மற்றும் 36 ஆசிரியர்களை மாவோ தீவிரவாதிகள் கடத்திச் சென்றுள்ளனர். கடந்த நான்கு நாள்களாக தொடரும் கடத்தல் சம்பவத்தால் நேபாளத்தில் கிழக்குப் பகுதி மக்கள் மிகுந்த கவலை கொண்டுள்ளனர்.

நேபாளத்தின் கிழக்குப் பகுதியில் உள்ள பஞ்தான் மாவட்டத்தில் கடந்த நான்கு நாள்களாக தீவிரவாதிகளின் கடத்தல்வேட்டை நடைபெற்று வருகிறது. வெவ்வேறு பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை மாவோ தீவிரவாதிகள் பலவந்தமாகக் கடத்திச் சென்று விடுகின்றனர். மாவோ தீவிரவாதிகள் நடத்தும் மாவட்ட அளவிலான அரசியல் பயிற்சி முகாமில் பங்கேற்பதற்காக இவர்கள் கடத்தப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. 500இற்கும் மேற்பட்ட மாணவர்களும் 36 ஆசிரியர்களும் கடத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இதனால், பஞ்தான் மாவட்ட மக்கள் பெரும் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர். கடத்தப்பட்டவர்கள் அனைவரும் 17முதல்35 வயதுடையவர்கள். இத்தகவலை உள்ளூர் வானொலி தெரிவித்துள்ளது. (8)

## பலஸ்தீனத்தில் பாதுகாப்பு சீர்குலைவு; நாடாளுமன்றில் பொலீஸார் ஆர்ப்பாட்டம்

### ஹமாஸ் தீவிரவாதிகளை அடக்கும்படி கோரிக்கை

ஜெருசலேம்,ஒக்.5

காஸாப் பகுதியில் பலஸ்தீன பொலீஸாருக்கும் ஹமாஸ் தீவிரவாதிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள தீவிர மோதல்களையடுத்து காஸா பொலீஸார் பலஸ்தீன நாடாளு மன்றக் கட்டடத்தின் பாதுகாப்புச் சுவர்களை உடைத்துக்கொண்டு உள்ளே சென்று ஹமாஸ் தீவிரவாதிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

பொலீஸாக்கும் ஹமாஸ் தீவிரவாதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற பயங்கர மோதல்களையடுத்து அந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஹமாஸ் துப்பாக்கிதாரிகளால் பொலீஸ் அதிரடிப் படையினர் ஒருவரும் இரண்டு சிவிலியன்களும் கொல்லப்பட்டதையடுத்து பலஸ்தீன பொலீஸார் ஆத்திரமடைந்துள்ளனர். இந்தச் சம்பவங்களையடுத்து பலஸ்தீன அரசாங்கம் ஹமாஸ் மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொலீஸார் கோரிக்கை வைத்து ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்.

காஸாவிலுள்ள ஷாட்டி அகதிகள் முகாமிலிருந்த பொலீஸார் மீதும் ஹமாஸ் தீவிரவாதிகள் மீதும் கைக்குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

ஆயுதம் கொண்டு செல்பவர்களை பொலீஸார் தடுக்க முயன்றபோது மோதல்கள் ஏற்பட்டன.

நாடாளுமன்றக் கட்டடத்துக்குள் பொலீஸார் பலர் நுழைந்தார்கள் என்றாலும் மண்டபத்துக்குள் அவர்கள் நுழையவில்லை.

''எங்கள் கண்முன்னாலேயே எங்கள் தளபதி மரணமானார். ஆனால் எங்களிடம் தோட்டாக்கள் இல்லை'' என்று ஒரு பொலீஸார் கூறினார்.

மண்டபத்துக்கு வெளியில் குண்டுகளை அவர்கள் வெடிக்கச் செய்தார்கள். எவருமே காயமடைந்ததாகத் தெரியவில்லை.

பலஸ்தீன அரசின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவர முயற்சிகள் நடைபெற்றபோதிலும் அதிபர் அப்பாஸ் இரண்டு வாரகாலத்துக்குள் புதிய அரசு ஒன்றை நிறுவவேண்டும் என்று நாடாளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

நாடாளுமன்றக் கட்டடத்தில் பலஸ்தீன பொலீஸார் ஆர்ப்பாட்டம் செய்வதற்குமுன் கடந்த ஞாயிறன்று கொல்லப்பட்ட பொலீஸ் அதிகாரியை நல்லடக்கம் செய்தனர். (ப-8)

## வயதுக்கேற்ற செல்போன்

டோக்கியோ,ஒக்.5

பல்வேறு வயதினருக்கு ஏற்ற வகையில் புதிய வசதிகள் அடங்கிய செல்போன்கள் ஜப்பானில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

இளைஞர்களுக்கு ஏற்றவாறு மியூசிக் வசதி, நேவிகேஷன் தொழில்நுட்பம் மற்றும் வயதானவர்களுக்கு ஏற்றவகையில் எளிதில் இயக்கக்கூடிய வசதிகள் அடங்கிய செல்போன்களுக்கு ஜப்பான் சந்தையில் பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது.

கே.டி.டி.ஐ நிறுவனம் கார் நேவிகேஷன் தொழில்நுட்பத்துடனும் வெடோ போன் கேகே நிறுவனம் ஜி.பி.எஸ். பொருத்தப்பட்ட செல்போனையும் அறிமுகப்படுத்தியுள்ளன.

## ஆஸ்திரேலியர் இருவருக்கு மருத்துவத்துக்கான நோபல் பரிசு

ஸ்டாக்ஹோம், ஒக்.5

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த பேரி ஜெ. மார்ஷல் (வயது - 54) ஜெராபின் வாரன் (வயது - 68) ஆகிய இருவருக்கும் இந்த ஆண்டு மருத்துவத்துக்கான நோபல் பரிசு கிடைத்துள்ளது.

அல்சர் நோய் (குடற்புண்) ஏற்படுவது எதனால், அதற்கு என்ன சிகிச்சை என்று கண்டுபிடித்ததற்காக அவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது.



எச்-பைலோரி (ஹெலிகோபாக்டர் பைலோரி) என்ற பக்ரீரியா கிருமியினால் ஏற்படும் நோய்த் தொற்றே வயிற்று வீக்கம், குடற்புண் நோய் முக்கிய காரணம் என்று இவர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

ஆஸ்திரேலியாவின் மேற்கு பகுதியில் உள்ள கல்கூர்லி என்ற இடத்தைச் சேர்ந்த மார்ஷல் நெட்லாண்டில் உள்ள மருத்துவ மையத்தில் ஆராய்ச்சியாளராக உள்ளார். வாரன் தெற்கு ஆஸ்திரேலியாவில் உள்ள அடிலெய்டில் பிறந்தவர். பெர்தில் உள்ள நோயல் பெர்த் மருத்துவமனையில் நோய்களையும் அதன் காரணங்களையும் அறியும் பிரிவில் ஆராய்ச்சியாளராகப் பணியாற்றியவர். தற்போது பெர்த் நகரிலேயே வாழ்ந்து வருகிறார்.

இதேவேளை -

மொத்தம் 199 தனி நபர்கள் மற்றும் ஸ்தாபனங்களின் பெயர்கள் இந்தப் பரிசுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

மருத்துவத்தில் நோபல் பரிசு பெறவுள்ளவர் பெயர்கள் இப்போது வெளியாகியுள்ளன.

அதிக கௌரவமிக்கதாகக் கருதப்படும் அமைதிக்கான நோபல் பரிசு பெறுபவர் பெயர் எதிர்வரும் 7 ஆம் திகதி வெளியாகும். (8)

உலக அரங்கில்

## 'ஆகாஷ்' ஏவுகணை சோதனை வெற்றி!

பாலாசூர்,ஒக்.5

தரையிலிருந்து விண்ணில் உள்ள இலக்கை நோக்கிச் சென்று தாக்கக்கூடிய மத்திய தர 'ஆகாஷ்' ஏவுகணையின் சோதனை நேற்றுமுன்தினம் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

ஒரிசா மாநிலம் பாலாசூரியிலிருந்து 15 கிலோமீற்றர் தொலைவில் உள்ள சந்திப்பூர் கடல் பகுதியில் கடற்படை விமானத் தளம் உள்ளது. நேற்றுமுன்தினம் மதியம் 12.50 மணிக்கு 'ஆகாஷ்' ஏவுகணையின் சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டது. தரை தளத்திலிருந்து விண்ணில் உள்ள இலக்கைப் பாய்ந்து சென்று தாக்கக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்ட நடுத்தர வகை ஏவுகணை இது. நவீன பூஸ்டர் மற்றும் பல்நோக்கு இலக்குகளை தாக்கும்திறன், மணிக்கு 25 கிலோமீற்றர் தொலைவு வரை பாய்ந்து செல்லும் திறன் ஆகியவற்றை இந்த ஆகாஷ் ஏவுகணை பெற்றுள்ளது. இந்த ஏவுகணை சோதனை, இந்திய விண்வெளி ஆய்வில் ஒரு மைல்கல் என்று கருதப்படுகின்றது.(8)



# வெதுப்பகங்களுக்கு உரிமம் பெறுவதற்கு அடிப்படை ஒழுங்கு விதிகள் அவசியம்

யாழ்ப்பாணம்,ஒக்.5

பாண் தயாரிக்கும் வெதுப்பகங்கள் அதற்கான உரிமத்தைப் பெற்றுக்கொள் வதற்கு இருக்கவேண்டிய அடிப்படை ஒழுங்கு விதிகளையும் தமிழீழ சுகா தாரப் பகுதியினர் வெளியிட்டிருக்கின் றனர்.

17 அடிப்படை ஒழுங்கு விதிகள் இதில் அடங்கியுள்ளன.

இதில் முக்கியமாக வெதுப்பியின் நிறை (பாணின் நிறை) 325 கிராம் தொடக்கம் 355 கிராம் வரை இருக்க வேண்டும். வெதுப்பி நிலையம் சூழல், சுகாதார ரீதியில் பொருத்தமாக இருப்பதுடன் காற்றோட்டம், வெளிவசதி உடையதாக இருத்தல் வேண்டும்.

இதேவேளை - தமிழீழ சுகாதார சேவையினர் உணவகம், தேநீர்சாலை, குளிர்பான நிலையம், ஆங்கில மருந்து விற்பனை நிலையம், தனியார் சிகிச்சை நிலையம், தனியார் மருத்துவமனை, பல்பொருள் விற்பனை நிலையம், வெதுப்பகம், அரைக்கும் ஆலை என்பவற்றுக்கான உரிமத்தைப் பெற்றுக்கொள்வதற்கான அடிப்படை ஒழுங்கு விதிகளை ஏற்கனவே வெளியிட்டுள்ளது.

இந்த அடிப்படை ஒழுங்கு விதிக ளின் படி உரிமத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் மக்களின் பார்வைக்காகத் தமது தொழில் நிலையங்களில் அடிப்படை ஒழுங்குவிதிகளைப் பொருத்தமான இடங்களில் காட்சிக்கு வைக்குமாறும் தமிழீழ சுகாதார சேவையினர் வலியுறுத் தியுள்ளனர்.(ஐ)

# அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் விளக்கம்

யாழ்ப்பாணம்,ஒக்.5

வீட்டு வன்முறைக்கு எதிராக யாழ். மாவட்ட நீதிமன்றம் முன்பாக நேற்றுமுன்தினம் பெண்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் தமது அமைப்பைச் சேர்ந்த பெண்கள் எவரும் கலந்துகொள்ளவில்லை என்று அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் பெண்கள் அபிவிருத்தித்திட்டம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக நேற்றைய உதயனில் வெளியான செய்தி குறித்து அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் பெண்கள் அபிவிருத்தித்திட்ட இணைப்பாளர் உதயனுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

நீதிமன்றத்தில் பாலியல் வல்லுறவு தொடர்பான வழக்குகளுக்குச் சென்று விவரங்களைச் சேகரிப்பதில் தமது அமைப்பின் பெண்கள் ஈடுபடுவது வழக்கம் என்றும் -

எனினும் நீதிமன்றம் முன்பாக நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தமது நிறுவனத்தினர் எவரும் பங்குகொள்ளவில்லை எனவும் - அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

# பதிவாளர் சேவை தரம் IIஇல் ஐந்து பேர் புதிதாக நியமனம்

யாழ்ப்பணாம்,ஒக்.5

பதிவாளர் நாயகம் திணைக்களத்தால் வடக்கு - கிழக்கு மாகாணப் பதிவாளர் சேவைதரம் **II** இற்கு 5 பேர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

திணைக்களத்தால் பதிவாளர் தரம் **II** இற்கென நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் 11 பேர் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களில் 5 பேர் வடக்கு- கிழக்கு மாகாணத்தில் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

காணிப் பதிவாளராகவும் மேலதிக மாவட்டப் பதிவாளருமாக நியமனம் பெற்றுள்ளவர்களின் விவரம் வருமாறு:-

ப. பிரபாகரன் (யாழ்ப்பாணம்), திருமதி சரஸ்வதி தியாகராஜா (பருத்தித்துறை), க. நடராஜா (கிளிநொச்சி), ஆனந்தி ஜெயரெட்ணம் (வவுனியா), க. திருவருள் (மட்டக்களப்பு)

இதேவேளை -

வவுனியா மாவட்ட காணிப் பதிவாளரும் மேலதிக மாவட்டப் பதிவாளருமாகக் கடமையாற்றும் திருமதி மகாராணி ராஜரட்ணம் யாழ். மாவட்டக் காணிப் பதிவாளரும் மேலதிக மாவட்டப் பதிவாளருமாக இடமாற்றம் பெற்றுள்ளார் என்று வடக்கு- கிழக்கு மாகாண உதவிப் பதிவாளர் நாயகம் என். சதா சிவஐயர் மேலும் தெரிவித்தார்.

(ஓ-202-204)


**படிவம்**

மொரட்டுவைப் பல்கலைக் கழக கல்வியாண்டு 2005 2006 அனுமதிக்கு (Bachelor of Science in Information Technology Degree course) தகைமைகாண் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் உண்டு.

முடிவுத்திகதி:18.10.2005

Bharathi Pathippakam. 430, K. K. S. Road, Jaffna


## சோடா என எண்ணி மண்ணெண்ணெய் அருந்தியவர் பாதிப்பு

தென்மராட்சி,ஒக்.5

சோடாப் போத்தலுக்குள்ளிருந்த மண்ணெண்ணெயை சோடாவென எண்ணி அருந்திய நான்கு வயதுச் சிறுவர் புரையேறிய நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

சாவகச்சேரி, டச்சு வீதியைச் சேர்ந்த சிவகுமாரன் விமல்ராஜ் (வயது4) என்பவரே பாதிக்கப்பட்டவராவர்.

(ஓ-117)

## சாவகச்சேரி வீதிகளுக்கு பெயர்ப்பலகை

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட ஏ-9 வீதியுடன் இணையும் வீதிகளுக்குப் பெயர்ப்பலகை நடப்படுகிறது.

எஸ்-லோன் நிறுவனத்தினர் இந்த வீதிப் பெயர்ப்பலகைகளை நட்டு வருகின்றனர் என நகரசபை, செயலாளர் திருமதி குணமணிதேவி ஆறுமுகம் தெரிவித்தார்.

முதற்கட்டமாக ஏ-9 வீதியுடன் இணையும் 80 இற்கும் மேற்பட்ட வீதிகளுக்குப் பெயர்ப்பலகை நடப்படுவதாகவும் -

விரைவில் ஏனைய வீதிகளுக்கும் பெயர்ப்பலகை நடப்பட வுள்ளதாகவும் - அவர் தெரிவித்தார்.

(ஓ-117)


**MCS** 324, Palaly Road, Jaffna. (Near Alady Junction)

நவராத்திரி காலத்தை முன்னிட்டு

1 Month-Speed Batches — 50% OFFER

- MS Office
- Visual Basic, VB Net, Java
- Accounting Package MYOB
- A+ Hardware Technician
- Microsoft Certified Professional
- Corel Draw, Page Maker, Photoshop
- Cool 3D, Flash, Premiere, HTML

பதிவுகள் 09 - 10 - 05 ற்கு முன் நேரில்

*****Supported by UNDP/JRRP*****



## மரண அறிவித்தல்

### சின்னசாமி செல்லமுத்து (கந்தையா)



சின்னசாமி செல்லமுத்து (கந்தையா) 02-10-2005 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை (C.C.மாஸ்டர்), வீரலக்சுமி அவர்களின் வளர்ப்பு மகனும், மாரிமுத்துவின் சகோதரனும், விசுவலிங்கம், நாகேஸ்வரி அவர்களின் மாமனாரும், கௌசிகாவின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2005)புதன்கிழமை பிற்பகல் அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 4 மணியளவில் பூதவுடல் தகனத்திற்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*128, பலாலி வீதி,*
*திருநெல்வேலி தெற்கு,*
*யாழ்ப்பாணம்.* (40822)(26-11-18)

தகவல்:
திருமதி பா.ஞானலோஜினி,



## விற்பனைக்கு

Pulsar (பள்சர்) DTSI 180
நீலம் HU xxxx விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0777252098
(40815)(24-18-34)



யாழ் பல்கலைக்கழக
பட்டமளிப்பு விழாவில் பங்கு பற்றும்
மகளிருக்கான
★ Eye brow shaping
★ Simple Dressing
செய்து விடப்படும்
பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்க
தொடர்பு:~ K.Prashanthsy
0776052373
MCS,324,Palaly Rd, Jaffna



## பயிலுநர் தேவை

G.C.E. O/L சித்தியடைந்த நவீன தொழில்நுட்பத் தளபாட (மரம் + இரும்பு) பொருத்துநர் பயிற்சி பெறவிரும்புபவர்கள் சொந்தக் கையெழுத்திலான விண்ணபத்துடன் இருவரின் நற்சான்றிதழ்களுடன் கீழ்க்காணும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பு :- பயிற்சிக் காலத்தில் கொடுப்பனவு வழங்கப்படும்.

தொடர்பு :- திருச்செந்தூரன் றேடிங் கம்பனி
315, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(40808)(26-34-18-24)



## தொண்டைமானாறு வெளிக்கள நிலையம்

FWC தொண்டைமானாறு வெளிக்கள நிலைய ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்க விரும்பும் பிரேரணைகளை வெளிக்கள நிலைய உறுப்பினர்கள் 20.10. 2005 வியாழக்கிழமைக்கு முன்னர் எனக்கு அனுப்பி வைக்கவும்.

பரியோவான் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

எம். எம் அல்போன்ஸ்
செயலாளர்



## வீடு விற்பனைக்கு

*யாழ்ப்பாணம், கொழும்புத்துறை வீதி, இல.226 முகவரியில் அமைந்துள்ளதும் யோகர்சுவாமி மண்டபத்திற்கு அருகாகவும் கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையத்துக்கு முன்பாகவும் உள்ளது மான நிலப் பரப்பு 3½ உடன் கூடிய வீடு விற்பனைக் குண்டு. மேற்குறிப்பிட்ட முகவரியில் நேரில் தொடர்பு கொள்ளவும்.*

(40819) (26-34-18-24)



## நன்றிகள்



14.09.2005 அன்று கட்டுடை மானிப்பாய் மணமகள் இல்லத்தில் நடைபெற்ற திருமண சுபமுகூர்த்தத்திலும் மணமகன் இல்லத்தில் இடம் பெற்ற வரவேற்பு வைபவத்திலும் கலந்துகொண்டு நல்லாசிகள் வழங்கிய உற்றார் உறவினர்கள், நண்பர்கள் மற்றும் உதவிகள் பல வழங்கிய அன்புள்ளங்களுக்கும் எங்கள் உள்ளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*மயிலணி,*
*சுன்னாகம்.* (40824)(32-11-18)

ஸ்ரீகாந்தன் - ஹம்சினி
தம்பதியினர்.



Jayoda **ஜயோதா** ජයෝදා

**உத்தியோகபூர்வ முடிவுகள்**

டிக்கட் தொடர் இல. 6304156 முதல் 6316833 வரை சீட்டிழுப்பு இல. 173 திகதி 03-10-2005

வெற்றி எண்கள் **1 4 5 8 5 4** சுப்பர் எண் **21**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,62,86,125/- வெல்லப்பட்டுள்ளது

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | 01 | 1,62,86,125/- | 1,62,86,125/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 11 | 50,000/- | 5,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 111 | 5,000/- | 5,55,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,112 | 500/- | 5,56,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 11,115 | 50/- | 5,55,750/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,10,140 | 10/- | 11,01,400/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 14 | 5,000/- | 70,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 109 | 1,000/- | 1,09,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,111 | 100/- | 1,11,100/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 11,011 | 20/- | 2,20,220/- |
| | | மொத்தம் | 2,11,14,595/- |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/- | 6,02,600/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 2,17,17,195/- |

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. **10,000,000/-**

தொடர் இல. 7242164 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 ஒக்டோபர் 06 ஆம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சேர் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கண்டி | 6304760-9-76 |
| மட்டக்களப்பு | 6309471-1-40 |
| கொழும்பு | 6312511-6-89 |
| பதுளை | 6315137-9-32 |
| குருநாகல் | 6307758-8-15 |
| புத்தளம் | 6308870-1-89 |
| அனுராதபுரம் | 6312873-4-76 |
| கொழும்பு | 6304393-8-86 |

# தேர்தல் முடியும் வரை அநுரா வெளிநாட்டில் சுற்றுவாராம்!

கொழும்பு,ஒக்.5

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவின் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொள்வ தில்லை என வெளிவிவகார அமைச்சரும், பிரதமர் பதவிக்கான கட்சியின் வேட்பாளருமான அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க தீர்மானித்திருக்கிறார் எனத் தெரியவருகிறது.

பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொள்வதைத் தவிர்க்கும் வகையில் அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க தற்போது வெளி நாட்டில் தங்கியிருக்கிறார். எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நாடு திரும்பவுள்ள அவர், மீண்டும் மாலைத்தீவுக்கு உத்தியோகபூர்வ விஜய மொன்றை மேற்கொள்ள வுள்ளார். மாலை தீவிலிருந்து வந்தபின்னர் அவர் பிரான்ஸிற்குப் பயணமாகவுள்ளார். ஜனாதிபதித் தேர்தல் முடியும் வரை அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க நாட்டில் தங்கியிருக்கமாட்டாரெனத் தெரிவிக்கப்படுகிறது. ஏற்கனவே ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஜாதிக ஹெல உறுமய , ஜே.வி.பி. ஆகிய கட்சிகளுடன் ஹொண்டுள்ள ஒப்பந்தங்களினால் அமைச்சர் அநுராபண்டார நாயக்க அதிருப்தி அடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(க-3)


**ராஜா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு

சூர்யா, அசின், நயன்தாரா, பிரகாஸ்ராஜ் நடித்த

**கஜினி**

காட்சிநேரம்:- பு.நே. 10.30, 2.30 6.30, 9.30.

(ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்)

**நாதன்ஸ் சினிமா** ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.

சரத்குமார், வைகைப்புயல் வடிவேலு, நமீதா நடித்த

**சாணக்யா**

காட்சிநேரம்:- பு.நே. 2.30 6.30, 9.30.

## ராஜ்வரன் சிங்கர்

*சிங்கர் மெசின், மெசினுக்குரிய உதிரிப்பாகங்கள் மற்றும் ரெக்சீன், குசன், வெல்வெற்துணி, வெல்வெற் கலர், காபெற் என்பனவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.*

**ராஜ்வரன் சிங்கர்**

325, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(40831)

## விசேட விலைக் கழிவு

**நாடளாவிய ரீதியில்** கட்டணம் அதிகரிக்கப்பட்ட போதிலும் வாடிக்கையாளர்களின் வேண்டு கோளுக்கு இணங்க இரண்டு கிலோவிற்கு மேல் அனுப்பும் ஒவ்வொரு கிலோவிற்கான கட்டணம் ஐரோப்பிய (**பிரான்ஸ், ஜேர்மனி, லண்டன், சுவிஸ், நோர்வே, டென்மார்க்**) நாடுகளுக்கும் **அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா** ஆகிய நாடு களுக்கும் குறைக்கப்பட்டுள்ளன.

**தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு நீங்கள் அனுப்ப வேண்டிய உடை, உணவு, அலங்காரப் பொருள்கள், வீடியோ நாடா, புகைப்படங்கள் ஆகியவற்றை எம் மூலமாக விரைவாக அனுப்பிவைக்கலாம்.**

**தொடர்புகளுக்கு:**

**RAINBOW TRAVELS & TOURS**

32 1/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(ராஜா கிறீம் கவுசுக்கு அருகில்) **Tel: 021-2223237.**

## வெளிவந்துள்ளது

பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமண்ய சாஸ்திரிகளின்

**நவராத்ர பூஜா பத்ததி**

கிடைக்குமிடம்:

**ஸ்ரீ நடேசர் ஆலயம்**

33, கடைச்சாமி வீதி

நீராவியடி, யாழ்ப்பாணம்.

(40827)

**மனோகரா** யாழ்ப்பாணம்

இளைய தமிழன் ஸ்ரீகாந் நடித்த

**ஒருநாள் ஒருகனவு**

காட்சிநேரம்:- பு.நே. 10.30, 2.30 6.30, 9.30.

அடுத்த வெளியீடு 7. 10. 2005 முதல்

பார்த்திபன், வடிவேல், லட்சுமிராய் நடித்த

**குண்டக மண்டக...** இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு.

(அ-44110)

**நாகம்ஸ்** சினிமா சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு

ஜெயம் ரவி, கலாபவன்மணி, வடிவேல் நடித்த

**மழை** (சில்வ்)

காட்சிநேரம்:- பு.நே. 11.00, 3.00, 7.00, 9.30.


## கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை நினைவு மலர்


21.09.2005 அன்று இலண்டன் மாநகரில் காரை அமரரானார். 23.10.2005 அன்று அந்தியேட்டி நிகழ்வு நடைபெறவுள்ளது. நினைவு மலர் ஒன்றினை அவரது குடும்பத்தினர் வெளியிடத் திட்டமிட்டுள்ளனர். அமரர் தொடர்பான விடயங்களையும் புகைப்படங்களையும் அனுப்ப விரும்புபவர்கள் 12.10.2005 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு அன்பாக வேண்டப்படுகின்றனர்.

**முகவரி**: Mrs Mathavy Shivaleelan, 607, Whitton Avenue West, Greenford, UB6 ODZ, U.K.

T.P : 021 222 3081

தகவல்
இ. சங்கர்

## 18ஆம் வருட நினைவஞ்சலி



அமரர்

**அருணாசலம் கந்தசாமி**

(முன்னாள் பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர், வலி. தெற்கு, உடுவில்)

**திதி:- 05-10-2005**

அன்பே வாழ்க்கையாய்
ஐக்கியமே நோக்கமாய்
பண்பே பழக்கமாய்
பரிவே வாய்மொழியாய்
பாரினிலே எமை வளர்த்த தந்தையே!
பதினெட்டு ஆண்டுகள் போய் மறைந்தாலும்
நொடிப்பொழுதும் உங்கள் நினைவு எமைப் பிரியாது.

உடுவில் மேற்கு,
சுன்னாகம்.

(40832)
(54-11-12)

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 04 - 03 - 1944 | 05 - 09 - 2005 |

அமரர்

**கணபதிப்பிள்ளை தியாகராசா**

(முன்னாள், வர்த்தக சங்கத்தலைவர்- திருநெல்வேலி, காமாட்சி கூல்பார் உரிமையாளரும், இ.பொ.நூலக போசகரும்)

அன்புடனும் பண்புடனும் எமை
வளர்த்த
எம் அன்புத் தெய்வமே! எம் மீது
தாம் கொண்ட பாசத்தால் - நாம்
பாரினிலே இன்று உயர்ந்தோம்.
உங்கள் ஆத்மா சாந்திபெறப்
பிரார்த்திக்கின்றோம்.

05.09.2005 அன்று காலமான எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக் கிருத்தியமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் பஜனையும் இன்று (05.10.2005) புதன் கிழமை காலை 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அந்த நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

ஸ்ரீ அனந்தன் (கண்ணன்)
"ஜெகலிங்கவாசம்"
தாவடி வடக்கு, கொக்குவில்.

(40853)
(70-54-11-12)

## மீன்பிடியியல் மாணவர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக்.5

யாழ். பல்கலைக் கழகத்தில் மீன்பிடியியல் கற்கையை பூர்த்தி செய்து வெளி யேறிய அனைத்து மாணவர்களுக்குமான கலந்துரை யாடலொன்று இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கடல்வள அபிவிருத்தி நிலையத் தில் இடம் பெறவுள்ளது.

அனைத்து மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு மீன்பிடியியல் டிப்ளோமா பட்ட தாரிகள் சங்கம் கேட் டுள்ளது.

(3-9)


பெரும்பாக உத்தியோகத்தர் மாகாண பொதுச்சேவை போட்டிப் பரீட்சை

வழிகாட்டல் வகுப்பு

பொது அறிவு
**பொன்.சந்துரு**

பொதுவிவேகம்
**T. தவசேகர்.**

**ஆரம்பம்:**
08.10. 2005 - 2 p.m.

**D.C.C.A**
ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(40817)

**S.L.E.A.S**
அதிபர் சேவை

போட்டிப்பரீட்சை வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன.

**சனி,ஞாயிறு 2.p.m.**

அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

**D.C.C.A**
ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்கள்

### திருமதி நாகேஸ்வரி தென்னக்கோன்



கச்சேரியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற S.B. தென்னக்கோன் (ஓய்வுபெற்ற சிறாப்பர் -யாழ். கச்சேரி) அவர்களின் அன்பு மனைவி திருமதி நாகேஸ்வரி அவர்கள் நேற்று (04.10.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு கனகரத்தினம் - சின்னம்மா தம்பதியரின் ஏக புத்திரியும் பிரியந்த (வவா-நோர்வே), சமன்(சுது-கனடா), நிஷாந்த (லக்கி-நீதிமன்றம் - யாழ்ப்பாணம்), அனுரா (பழையமாணவன் -நவீல்ட் பாடசாலை கைதடி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பிரிய தர்ஷினி (நோர்வே), சாமினி (எழுது வினைஞர்-யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும், கெவின், அர்வின் ஆகியோரின் அப்பம்மாவும் நடராஜா (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், தொலைத்தொடர்பு), செல்லத்துரை (லண்டன்) ராஜேந்திரா (முகாமையாளர், இலங்கை வங்கி, காங்கேசன் துறை) ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றியவிவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*89/1, கண்டி வீதி,*
*கச்சேரியடி, யாழ்ப்பாணம்.*

(40835)
(54-11-12)

தகவல்:
T. நிஷாந்த
(லக்கி - மகன்).

### சிதம்பரநாதர் சுப்பிரமணியம் (சுப்பையா)

வடவரணியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சிதம்பரநாதர் சுப்பிரமணியம் (சுப்பையா) அவர்கள் 03-10-2005 திங்கட்கிழமை அகாலமரணம் அடைந்தார்.

அன்னார் சிதம்பரநாதர் - கற்பகம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் கணபதிப்பிள்ளை - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் சோமகலாநாயகியின் அன்புக் கணவரும் அமரர் பொன்னையாவின் (இளைப்பாறிய அதிபர்) அன்புச் சகோதரனும் செல்லம்மா, மகேசன் ஆகியோரின் மைத்துனரும் சிவபாக்கியம், தவபாக்கியம், உமாதேவி, விக்கினராஜா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அமரர் இராமநாதன் (இளைப்பாறிய கிராமசேவையாளர்), பாலசிங்கம், முருகேசம்பிள்ளை (ஓய்வுபெற்ற ஊழியர் - நில அளவைத்திணைக்களம்), இராஜலக்ஷ்மி (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் இரதீபா, ரேணுகா, ராதா, றசனா, றங்கா, மதுரா, மதீஸ், மஞ்சுதன், தனஞ்சயன், தாட்சாயினி, பிருந்தன் (சுவிஸ்), பிரியந்தி (சுவிஸ்), ஜெயகாந்தன் (சுவிஸ்), நவரூபன் (ஜேர்மன்), கனகேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் அஜீபனா, யாழவன், யஸ்மிதா, ரிஷானா (ஜேர்மன்) ஆகியோரின் அன்புப் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2005) புதன் கிழமை பிற்பகல் 3மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முள்ளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"நம்பிட்டான்புலம் வீதி"*
*வரணி வடக்கு, வரணி.*

(அ-45441)
(54-11-12)

தகவல்:
க. திருநீபன்
(பேரன்).



உடுவில், டச்சு வீதியில் நேற்றிரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கொல்லப்பட்ட விடியோக் கடை உரிமையாளரின் சடலத்தைப் படத்தில் காணலாம். படம்: பகீர்)

# பன்னிரு வேங்கைகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில் இடம்பெறவுள்ளது. அங்கு ஈகச்சுடரை சு.முத்துச்சாமி, எஸ்.சாம்பசிவம் ஆகியோர் ஏற்றுவர். தேசியக் கொடியை மாவீரரின் பெற்றோர் ஏற்றுவர்.

தொடர்ந்து அகவணக்கம், மலரஞ்சலி என்பன இடம்பெறவுள்ளன. தலைமையுரையினை மு.தங்கவேலும் சிறப்புரைகளை தேசிய எழுச்சிப் பேரவையைச் சேர்ந்த எஸ். செபஸ்ரியனும் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் செயலாளர் க.சூரியகுமாரும் பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி க.மயிலேறும் பெருமாளும் நிகழ்த்துவர்.

துணைப்படைப் பயிற்சிபெற்ற 200 வீரர்கள் 12 வேங்கைகளின் திருவுருவப்படங்களுக்கு முன் அணிவகுத்து மரியாதை செய்வர்.

தமிழர் தாயகப் பிரதேசம் எங்கும் பன்னிரு வேங்கைகளின் நினைவாக நிகழ்வுகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. சிரமதானப் பணிகள், கருத்தரங்குகள் என்பன நடைபெறவுள்ளன.

இதேவேளை -

தீருவிலில் நடைபெறும் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு தீவக மக்களை தேசிய எழுச்சிப் பேரவையின் தீவகக் கோட்டத்தினர் கேட்டுள்ளனர்.

(3-9-70)

# குடாநாட்டில் உயர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்றில் வாய்மூல வினாக்காக எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றன.

**முதலாவது விடயம்**

பிரதமரிடம் மகேஸ்வரன் எழுப்பியுள்ள முதலாவது கேள்வி வருமாறு:-

❋ யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் பல நிலப்பிரதேசங்கள், தனிப்பட்ட காணிகள், வீடுகள், அரச நிறுவனங்கள், மதவழிபாட்டு நிலையங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், மீன்பிடிப் பகுதிகள், விவசாயநிலங்கள், சிமெந்துக் கைத்தொழிற்சாலை உட்பட ஆயிரக்கணக்கான யாழ்ப்பாணத் தமிழ் மக்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ளன என்பதை அவர் அறிவாரா?

❋ இவ்வாறான இடங்கள் பற்றிய எல்லா விவரங்களையும், சேதம் தொடர்பான விவரங்களுடன் நாடாளுமன்றில் அவர் முன்வைப்பாரா? முன்வைப்பதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா?

❋ இதனால் பாதிக்கப்பட்ட மக்களின் சார்பாக அரசு நடைமுறைப்படுத்தவுள்ள நிவாரண நடவடிக்கைகள் யாவை?

**இரண்டாவது விடயம்**

கடற்றொழில் நீரியல்வளத்துறை, கிறிஸ்தவவிவகார அமைச்சரிடம் எழுப்பப்படும் கேள்வியில் -

சம்பந்தப்பட்ட அமைச்சின்கீழ் உள்ள நிறுவனங்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள், கம்பனிகள், அவற்றிற்கு நியமிக்கப்பட்ட தலைவர்கள், பணிப்பாளர்கள், அவர்களின் உத்தியோகத்தர்களின் இல்லத் தொலைபேசிகள், இணையத்தள - மின்னஞ்சல் முகாரிகள், இவர்களின் முன்னைய பதவிகள், கல்வித் தகைமைகள், சலுகைகள், வேதனங்கள், அவர்களுக்கான வாகனங்கள், எரிபொருள் செலவுகள், இத்தகையோர் முன்னர் ஏதாவது குற்றச்செயல்களில் ஈடுபட்டிருந்தால் அதன் விவரங்கள், வழக்கு மற்றும் ஏனைய விடயங்கள் ஆகியவை குறித்து சபைக்கு விவரம் சமர்ப்பிக்குமாறு மகேஸ்வரன் கேட்டுள்ளார்.

**மூன்றாவது விடயம்**

அடுத்த கேள்வி ஜனாதிபதி செயலகம் சம்பந்தமானது. அந்தக் கேள்வியையும் பிரதமரிடமே மகேஸ்வரன் எழுப்பியுள்ளார்.

❋ கடந்த மூன்று வருட காலமாக ஜனாதிபதியும் ஜனாதிபதிச் செயலகமும் பயன்படுத்திய வாகனங்களின் எண்ணிக்கை யாது?

❋ கடந்த மூன்று வருட காலத்துக்குள் ஜனாதிபதியின் செலவினங்களுக்காகச் செலவிடப்பட்ட நிதி எவ்வளவு?

❋ இந்தக் காலத்துக்குள் ஜனாதிபதி செயலகத்துக்குள் விருந்துபசாரம், உணவு, மதுபானம் ஆகியவற்றுக்காகச் செலவிடப்பட்ட பணத்தொகை யாது?

❋ ஜனாதிபதியின் வெளிநாட்டு விஜயங்களின்போது இவருடன் கலந்துகொண்டவர்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் யாது?

இவற்றை விவரமாகவும் பற்றுச் சீட்டுக்கள் சகிதம் வெவ்வேறாகவும் இந்தச் சபைக்குச் சமர்ப்பிப்பதற்குப் பிரதமர் நடவடிக்கை எடுப்பாரா?

- இவையே அந்த மூன்று கேள்விகளாகும்.


**Softview Computer College**
43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna, Sri Lanka.
T.P: 021 2225170, 0777846811
புதிய பிரிவுகள் ஆரம்பம் :- 09.10.2005
Dip. in Microsoft Office
Dip. in Desktop Publishing
Dip. in Computer Programming
Dip. in Hardware Engineering
Dip. in Network Engineering
Dip. in Visual Basic
Dip. in Computer Science
Dip. in AutoCAD
Dip. in C++
Dip. in Internet E-Mail
உங்கள் பதிவுகளை இன்றே முன்பதிவு செய்து கொள்ளுங்கள்
இப்பிரிவிற்கு மட்டும் பதிவுக்கட்டணம் அறவிடப்படமாட்டாது.


# தமிழ் கைதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குமார் வலது காலில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்தார்.

கடந்தப்பட்ட விஸ்வலிங்கம் ஜெகநாதன், விஸ்வலிங்கம் விநாயகமூர்த்தி ஆகியோரைத் தவிர ஏனைய கைதிகள் இருவரான எம். கே. பஷீர், ரி. ஆர். அர்சத் ஆகியோர் நேற்று மாலை மூதூர் பொலீஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளனர். தம்மைக் கடத்திய இனந்தெரியாத நபர்கள் கைவிலங்கை உடைத்து அகற்றிய பின்னர் ஏனைய இரு தமிழர்களை கூட்டிக்கொண்டு சென்று விட்டனர் என இந்த இரு கைதிகளும் பொலீஸாரிடம் தெரிவித்திருக்கின்றனர்.

இந்தக் கடத்தல் குறித்து திருகோணமலை பொலீஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ரணிலை ஆதரிப்பதென....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காங்கிரஸ் முழுமூச்சாக உழைக்கும்.

முஸ்லிம்களின் அரசியல் அபிலாஷைகளை நிவேற்றக் கூடிய சத்தியமான வழிமுறைகளைக் கையாளக் கூடிய ஒருவராகவே நாம் ரணிலைப் பார்க்கிறோம். அதனால்தான் நாம் அவரை ஆதரிக்கிறோம்.

அவரின் தேர்தல் விஞ்ஞாபனமும் முஸ்லிம் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடிய பல விடயங்களைக் கொண்டுள்ளன.

இதுதவிர, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவையும், அவருடன் கூட்டுச் சேர்ந்துள்ள அரசியல் சகாக்களையும் வைத்துப் பார்க்கின்றபோது, மஹிந்தவுக்கு ஆதரவளிக்கக்கூடாது என்பதற்கான காரணங்களே மிகைத்துநிற்கின்றன.

அதனால், ஐ.தே.கட்சியின் வேட்பாளருக்கே எமது ஆதரவை வழங்கவேண்டியது இந்தச் சந்தர்ப்பத்தில் கட்சியின் தீர்க்கமான முடிவாகும்.

ரணிலுக்கும் எமது கட்சிக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றும் கைச்சாத்திடப்படும். இதற்கான இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது எனவும் முஸ்லிம்காங்கிரஸ் தலைவர் ரஊப் ஹக்கீம் தெரிவித்தார்.

(க-3)

# தமிழர் ஆசிரியர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விகிதாசார அடிப்படையில் தமிழர்களும், முஸ்லிம்களும் நியமிக்கப்படவேண்டும். பாடசாலை களில் இருந்து 50 மீற்றர்கள் தூரத்திற் குள் ஆயுதப்படையினரின் சோதனைச் சாவடிகள் மற்றும் நடமாட்டத்தை முற்றாகத் தவிர்க்க வேண்டும் என்பன உள்ளிட்ட 25 கோரிக்கைகளை முன்வைத்தே இந்தப் போராட்டம் இடம்பெறுகிறது. இந்த அடையாள வேலைநிறுத்தத்தின் பின்னரும் இக் கோரிக்கைகளை அரசு நிறைவேற்றாவிட்டால் எதிர்வரும் 24 ஆம் திகதியிலிருந்து. தொடர்ச்சியான வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாகவும் சங்கம் எச்சரிக்கை விடுத் துள்ளது.

இன்றைய சுகவீன விடுமுறைப் போராட்டத்திற்குத் தேசியக் கல்வியியற் கல்லூரி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் உட்பட பல்வேறு ஆசிரிய தொழிற் சங்கங்களும் ஆதரவு தெரிவித் துள்ளன.

(ஒ)

# இ.தொ.கா.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவிக்கும் கூட்டத்தில் பங்குபற்ற முடியுமா என்பதை நேற்று மாலைவரை முஸ்லிம் காங்கிரஸால் உறுதிப்படுத்த முடியாமற் போயிற்று.

எவ்வாறாயினும், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதற்கு இ.தொ.காவும் தீர்மானித்துள்ளது என அந்தக் கட்சிகளின் உள்ளக வட்டாரங்கள் தெரிவித்தன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளுடன் கூட்டுச்சேர்ந்து வகுத்திருக்கும் கொள்கைகள், சிறுபான்மை இனக் கட்சிகளால் ஏற்றுக் கொள்ள முடியாத நிலை இருப்பதால் ரணிலை ஆதரிக்கும் தீர்மானத்திற்குத் தாங்கள் வரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதென அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

(க-3)

# முரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பற்றைச்சேர்ந்த தபால் ஊழியரான சரவணமுத்து கிருஸ்ணபிள்ளை (வயது -45) என்பவரே உயிரிழந்தவராவார்.

பரந்தன் பகுதியில் இருந்து கல் ஏற்றி வந்த ஹண்டர் வாகனமும் கண்டாவளைப் பகுதியில் இருந்து வந்த மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளாகின.

உயிரிழந்தவர் செலுத்தி வந்த மோட்டார் சைக்கிளின் பின்னால் அரிசி மூடை கட்டப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

இதனையடுத்துச் சம்பவ இடத்திற்கு விரைந்த கிளிநொச்சி மாவட்ட தமிழீழ காவல் துறையினர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய ஹன்டர் சாரதி காவல் துறையினரால் கைது செய்யப்பட்டார். ஹன்டர் வாகனமும், சேதமடைந்த மோட்டார் சைக்கிளும் காவல்துறையினரால் எடுத் துச்செல்லப் படடன.

(3-12-352)

# மரண அறிவித்தல்கள்

## சரவணமுத்து கிருஸ்ணநாதன்

**(தபால் ஊழியர், தாளையடி)**

மீசாலையைப் பிறப்பிடமாகவும் செம்பியன்பற்று தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து - கிருஸ்ணநாதன் அவர்கள் நேற்று (04.10.2005) செவ்வாய்க்கிழமை அகால மரணமடைந்துள்ளார்.

அன்னார் சரவணமுத்து - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் இராமநாதன் (தபால் ஊழியர், கண்டாவளை), அன்னலட்சுமி (மீசாலை), சந்திரநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் வதனநிர்மலாவின் அன்புக் கணவரும் பிரசாத், திசியந்தன், நித்தியா ஆகியோரின் தந்தையும் செல்லையா நடராசாவின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் 2 மணியளவில் செம்பியன்பற்று இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

(சி-45442)(30-11-12)

## R.S.அரியரட்ணம்



*(இலங்கை வங்கி, இளைப்பாறிய அலுவலர் - Shroff- ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்)*

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட R.S.அரியரட்ணம் அவர்கள் கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு நிச்சேட் இராமநாதன் தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான வைத்தியாம்பிள்ளை - றிச்சேட் தம்பிராசா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவரான அலிஸ் முத்துமணியின் ஆருயிர் கணவரும், காலஞ்சென்றவர்களான இரத்தினம், ஞானம்மா, சற்குணம் மற்றும் அருளம்மா, பரிமளம் காலஞ்சென்ற R.J.நவரட்ணம், R.J.குணரட்ணம் (U.K.) ஆகியோரின் அருமைச் சகோதரனும், லில்லி, காலஞ்சென்றவர்களான, யோசேப் துரைரட்ணம், ஜெனி, ஜோர்ச் செல்வரட்ணம், ஆதர் ஜெயரட்ணம், அல்பேட் பரமநாதன், விக்ரர் கனகசுந்தரம், எட்வின் அருளானந்தம் மற்றும் மங்களம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (06.10.2005) வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, நல்லடக்கத்திற்காக கொட்டடி மெதடிஸ்த சேமக் காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"Melita" ''மெலிட்டா''
No.707, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
R.J.குணரெட்னம் (U.K.)
(40834)(30-11-12)



EXPOAIR your friend in the skies...
எக்ஸ்போ எயார் வானத்தில் உங்கள் நண்பன்...
தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.10.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.